# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 - 2022

### மானியக் கோரிக்கை எண். 42


## திரு. கேஆர். பெரியகருப்பன்
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | மாநில அரசுத் திட்டங்கள் | 9 |
| 2.1 | அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II | 10 |
| 2.2 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 11 |
| 2.3 | நமக்கு நாமே திட்டம் | 12 |
| 2.4 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 13 |
| 2.5 | நபார்டு ஊரக உட்கட்டமைப்பு – வளர்ச்சி நிதி(RIDF) மூலமாக சாலைகள் இணைப்பு | 14 |
| 2.6 | சிறிய இணைப்புச் சாலைகள் | 15 |
| 2.7 | பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் | 16 |
| 2.8 | பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS) | 17 |
| 2.9 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (SEDP) | 17 |
| 2.10 | சுகாதாரம் | 18 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 2.11 | ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை | 26 |
| **3** | **தமிழ் நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்** | 29 |
| 3.1 | ஊராட்சி அமைப்புகளின் பரிணாம வளர்ச்சி | 30 |
| 3.2 | மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள் | 35 |
| 3.3 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் | 71 |
| 3.4 | ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் | 92 |
| **4** | **ஒன்றிய அரசுத் திட்டங்கள்** | 99 |
| 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) | 100 |
| 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) (PMAY-G) | 122 |
| 4.3 | ஜல் ஜீவன் மிஷன் | 128 |
| 4.4 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS) | 142 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 4.5 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY) | 143 |
| 4.6 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் (PMGSY) | 146 |
| 4.7 | தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) (SBM–G) | 150 |
| 4.8 | ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம் | 155 |
| 4.9 | புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டம் (NNBOMP) | 158 |
| **5** | **ஊரக வளர்ச்சி துறையின் பணியமைப்பு** | 161 |
| 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு | 162 |
| 5.2 | பொறியியல் பணியமைப்பு | 163 |
| 5.3 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 166 |
| 5.4 | புதிய மாவட்டத்திற்கு பணியிடங்கள் | 169 |
| **6** | **வாழ்வாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்** | 173 |
| 6.1 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW) | 175 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 6.2 | மகளிர் திட்டம் | 178 |
| 6.3 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) | 183 |
| 6.4 | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM) | 250 |
| 6.5 | தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP) | 264 |
| 6.6 | வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி – தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU–GKY) | 270 |
| 6.7 | தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) | 279 |
| 6.8 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ் | 281 |
| 6.9 | சிறந்த சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள் மற்றும் வங்கிகளுக்கான விருது | 284 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 6.10 | தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் | 288 |
| 6.11 | சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 312 |
| 6.12 | நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்திற்கான வழிகாட்டி | 321 |
| **7** | **பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு** | 331 |
| 7.1 | மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD) | 335 |
| 7.2 | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் (RIRD) | 343 |
| 7.3 | ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் (DRCP) | 347 |
| 7.4 | தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA) | 348 |
| **8** | **வரவு செலவுத் திட்டம் 2020-21** | 354 |
| **9** | **முடிவுரை** | 356 |

# 1. முன்னுரை

# முன்னுரை

*"கிராமங்கள் தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான முதுகெலும்பு" என்று காந்தியடிகள் நம்பினார்கள். அந்த முதுகெலும்பான கிராமங்களை வளர்க்க வேண்டும், அந்த கிராமங்கள் இன்னும் வளம் பெற வேண்டும், பட்டணங்களில் உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்கும் தர வேண்டும்".*

**– மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

இந்தியா கிராமங்களில் வாழ்கிறது. ஊரகம் அல்லது நகர்ப்புர வளர்ச்சியின் ஆதாரம் என்பது ஊரகப்பகுதிகளில் உள்ள இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் அப்பகுதி மக்களின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் சார்ந்ததாகும்,

ஊரகப்பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல் மற்றும் ஊரகப்பகுதி மக்களுக்கு வாழ்வாதார வசதிகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய பணியாகும். தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி எனும் மாளிகையானது, மாநிலம், மாவட்டம் மற்றும் ஒன்றியங்களிலுள்ள சிறந்த

நிர்வாக கூட்டமைப்பு மற்றும் வலுவான மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஆகிய இரு தூண்களின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய இத்துறையின் முக்கிய பங்களிப்பும் உள்ளது. வறுமை இன்மை, தூய்மையான குடிநீர் மற்றும் சுகாதாரம், ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல், காலநிலை சார்ந்த செயல்பாடுகள் போன்ற நீடித்த வளர்ச்சி இலக்குகள் இத்துறையின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளோடு ஒத்த கருத்து கொண்டதாக உள்ளது. ஒன்றிய மற்றும் மாநில அரசின் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்துவதன் மூலம் இந்த நோக்கங்களை அடையும் பொருட்டு இத்துறை செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து குடும்பங்களும் வறுமையின் பிடியிலிருந்து மீள வேண்டும் என்பது அரசின் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்களின் அடிநாதமாக உள்ளது. ஊரகப்பகுதிகளில் தேவையான ஊதிய வேலைவாய்ப்பினை வழங்குவதோடு, தனிநபர் மற்றும் பொது சொத்துக்களை உருவாக்கி, மக்களின் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றுவதை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் உறுதி செய்துள்ளது.

காலநிலை மாற்றங்களின் தாக்கத்தை தாங்கி நிற்கும் கிராமங்கள், தனிநபர் வருமானத்தை அதிகரிக்கும் சொத்துக்களை உருவாக்குதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு ஒருங்கிணைந்த மாதிரி திட்டமாக இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல அரசு விழைகிறது.

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம் மூலம் கட்டப்படும் காங்கீரீட் வீடுகள், ஊரகப் பகுதி ஏழை மக்களுக்கு பாதுகாப்பு மற்றும் கண்ணியத்தை வழங்குவதாக உள்ளது. **'அனைவருக்கும் வீடு'** மற்றும் **'குடிசை இல்லாத மாநிலம்'** என்ற இலக்கினை 2026 க்குள் அடையும் பொருட்டு, மாநில அளவிலான விரிவான புதிய கணக்கெடுப்பு மூலம், ஏற்கனவே எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் விடுப்பட்ட வீடற்ற தகுதி வாய்ந்த குடும்பங்களை கண்டறிந்து, மாநில அரசின் மூலம் புதிய ஊரக வீடுகட்டும் திட்டம் தொடங்கப்படும்.

இணைப்புச்சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத்தக்க வகையில் இணைப்புச் சாலை வசதியினை ஏற்படுத்துதல் மற்றும் பிரதான சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்புச்சாலைகளை மேம்படுத்துதல் ஆகியவை பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம் (PMGSY) மற்றும் தமிழ்நாடு

ஊரகச்சாலைகள் திட்டம் (TNRRIS) போன்ற திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் உட்கட்டமைப்பு தேவைகள், பள்ளி உட்கட்டமைப்பு வளர்ச்சித்திட்டம் (SIDS) மூலம் நிறைவேற்றப்படும்.

2024 ஆம் ஆண்டுக்குள் ஊரகப்பகுதிகளில் நபர் ஒன்றுக்கு 55 லிட்டர் குடிநீரை அவரவர் வீடுகளுக்கே வழங்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஒன்றிய, மாநில அரசு நிதிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. திடக்கழிவுகளால் நாளுக்கு நாள் பெருகிவரும் சவாலை எதிர்கொள்ளும் வகையில், ஒருங்கிணைந்த திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை மூலம் தீர்வு காண்பது அரசின் முக்கிய நோக்கமாகும். தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) மற்றும் ஒன்றிய, மாநில நிதிக்குழு மானியத்தை ஒருங்கிணைத்து கிராமப்புர சுகாதாரம் மேம்படுத்தப்படும்,

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் **1996-2001 மற்றும் 2006-2011 ஆம் ஆண்டுகளில் அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், நமக்கு நாமே திட்டம்** போன்ற

திருப்புமுனைத் திட்டங்களை செயல்படுத்தினார். இவை, அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் சமவாய்ப்பு மற்றும் சமூக நீதி ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தனித்துவமான திட்டங்களாகும்.

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் இவ்வரசு, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II என்ற புதிய திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி, குக்கிராமங்களில் வசிக்கும் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகளை நிறைவேற்றும்.

ஊரகப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஊரக பகுதிகளிலுள்ள ஏழை, எளிய மக்களை, மகளிர் சுய உதவிக்குழுக்களாக ஒருங்கிணைப்பதன் மூலம் அவர்களின் வாழ்வில் நீடித்த நிலைத்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை 'உற்பத்தியாளர் குழுக்கள்' மற்றும் 'தொழிற் குழுக்களாக' மாற்றுவதன் மூலம் உள்ளூர் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி தொழில் முனைவோராக உயர்த்துவதும், அவர்களின் திறன்களை மேம்படுத்தி உற்பத்தி பொருட்களுக்கு உரிய

விலையை கிடைக்கச் செய்வதும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும். முறையான தொழில் திட்டம், நிதி சேவைகள் மற்றும் விற்பனை வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தருவதோடு, தகுதி வாய்ந்த வணிக வழிகாட்டி (இன்குபேட்டர்கள்) மற்றும் இணையதள விற்பனை முன்னெடுப்புகள் ஆகியவற்றால் ஊரக தொழில் முனைவோரின் வாழ்வாதாரம் மேலும் வளமடையும். இத்தகைய முன்முயற்சிகளோடு இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி, நிதி மேலாண்மை பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்கும் பட்சத்தில் ஊரக பொருளாதாரம் வளர்ச்சியுறும். மேற்கண்ட நடவடிக்கைகளால் எழுச்சி பெற்ற உத்வேகமான அரசு இயந்திரத்தின் செயல்பாட்டின் காரணமாக தமிழ்நாடு வறுமையற்ற நிலையை நோக்கி பீடு நடை போடும்.

வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகளில், மக்களை ஈடுபடுத்தி, அரசின் நோக்கங்களை நிறைவேற்றுவது மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஆகும். இந்த அமைப்புகளுக்கு உரிய அதிகாரமளித்து வளர்ச்சி பெறச் செய்வதற்கு, இவ்வரசு முன்னுரிமை வழங்குகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், சமுதாயம் சார்ந்த

அமைப்புகளான சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி வழங்குதல், திறன் மேம்பாடு மற்றும் தொழில்திறன் பயிற்சிகள் வழங்குதல் மூலம் அவர்களின் செயல்பாட்டு திறன்களை வளர்த்தல், தொழில் முனையும் திறன் வளர்த்தல் மற்றும் அவர்களது உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கு இந்த அரசு முன்னுரிமை வழங்குகிறது.

# 2. மாநில அரசுத் திட்டங்கள்

## 2.1. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II

2021–22ஆம் ஆண்டு முதல் 2025–26 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுகளில் கிராமங்களை முழுமையான வளர்ச்சி அடைந்த கிராமங்களாக மாற்றுவதற்கு தேவையான அடிப்படை வசதிகளை படிப்படியாக ஏற்படுத்திட பிற திட்டங்களுடன் ஒருங்கிணைத்து அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II செயல்படுத்தப்படும்.

### 2.1.1 திட்ட செயலாக்கம்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II, 2021–22 ஆம் ஆண்டில் ரூ.1200 கோடி மதிப்பீட்டில், 2505 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும்.

### 2.1.2 திட்ட கூறுகள்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்–II–ன் கீழ் அடிப்படை கட்டமைப்பு பணிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், தெருக்கள் மற்றும் வீதிகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைத்தல், வடிகால் வசதி, மயான மேம்பாடு, நீர்நிலைகளை புனரமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படும். மேலும், புதிய தேவைகள், இதுவரை

கவனிக்கப்படாத தேவைகளான திடக்கழிவு மற்றும் திரவக்கழிவு மேலாண்மை போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

## 2.2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் மாநிலத்தின் ஊரக மற்றும் நகர்புரப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டிற்கு ரூ.3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1.50 கோடியில் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைப் பணிகளை எடுத்துச் செய்திட வேண்டும். மீதமுள்ள வரையறுக்கப்படாத நிதியான ரூ.1.50 கோடியில் சட்டமன்ற உறுப்பினர்கள்

அவர் தம் விருப்பத்தின் அடிப்படையிலும், தடைசெய்யப்பட்ட பணிகள் பட்டியலில் இல்லாத பணிகளை இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேர்வு செய்யலாம். 2021–22 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.702 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2.3. நமக்கு நாமே திட்டம்**

மக்களின் சுய உதவி, சுயசார்பு எண்ணம் ஆகியவற்றை வலிமைப்படுத்தவும், பரவலாக்கவும் மக்கள் பங்கேற்புடன் கூடிய **நமக்கு நாமே திட்டத்தினை மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்** அவர்கள் 1997–98 ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவித்தார்கள். இத்திட்டம் மக்களை வளர்ச்சி பணிகளுக்கான திட்டமிடுதல் தொடங்கி வள ஆதாரங்களை திரட்டுதல், பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் மேற்பார்வை செய்தல் வரை நேரடியாக ஈடுபடுத்தியது. அரசாணை எண்.112 ஊரக வளர்ச்சி (ஒ.ஊ.வ.1) துறை, நாள்: 01.06.1998 –ல் இத்திட்டம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தனிநபர்களோ, குழுக்களோ, நிறுவனங்களோ, தனியார் அமைப்புகளோ அல்லது பொது மக்களோ, தேவையின் அடிப்படையில் பணிகளை தேர்வு செய்து

மேற்கொள்ளலாம். பணிகளைத் தேர்வு செய்த பின் பணியின் விபரம், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பகுதி தொகையினை வங்கி வரைவோலையாக வழங்க சம்மதிக்கும் கடிதம் ஆகியவற்றை மனுவாக மாவட்ட ஆட்சியர் அல்லது திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் வழங்கவேண்டும்.

2021–22ல் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் 'நமக்கு நாமே' என்ற பெயரில் மீண்டும் புதிதாகச் செயல்படுத்தப்படும்.

## 2.4. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் அனைத்து வகையான சாலைகளை மேம்படுத்த வழிவகுக்கிறது. அதாவது, தார் இடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாகத் தரம் உயர்த்தவும், ஏற்கனவே உள்ள தார்ச் சாலைகளை வலுப்படுத்தவும் மற்றும் பராமரிக்கவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சாலைப் பணிகள் தெரிவு செய்யப்படும்போது குக்கிராமங்களை இணைக்கும் சாலைகள், பள்ளிகள், சந்தைகள் மற்றும் இதர

வசதிகளை இணைக்கும் சாலைகள் போன்ற பல்வேறு கூறுகளின் அடிப்படையில் சாலைகள் முன்னுரிமை படுத்தப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படுகின்றன. மாவட்டத்தின் சாலைத் தொகுப்பின் இயல்பினை அடிப்படையாக கொண்டு சாலைகளை தேர்வு செய்வதில் இலகுவான முறையை கையாள்வது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

இத்திட்டத்தின் கீழ், இதுவரை 27,186 கி.மீ நீளமுள்ள சாலைகள், ரூ. 5,800 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.4.1 நிதி ஆதாரம்

இத்திட்டத்திற்கான நிதி மாநில நிதிக்குழு மானிய நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது.

## 2.5. நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (RIDF) மூலமாக சாலைகள் இணைப்பு

ஒன்றிய அரசு, 1995-96-ஆம் ஆண்டில், வேளாண்மை மற்றும் தொடர்புடைய பிரிவுகள், சமூகம் மற்றும் ஊரக இணைப்பு உள்ளிட்ட மூன்று பரந்த பிரிவுகளின் கீழ் கடன் உதவி வழங்குவதற்காக நபார்டு வங்கியின் கீழ் ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை உருவாக்கியது. ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சித்துறை, நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலம் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்தி வருகிறது. மேலும், இந்த நிதி, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் தேவைப்படும் பாலங்கள் கட்டவும் பயன்படுத்தப்படுகிறது. பேருந்துகள்/சிற்றுந்துகள் செல்லும் சாலைகள், விவசாயத்திற்கு பயன்படும் சாலைகள், தொழில் மற்றும் வணிக மையங்களுக்குச் செல்லும் சாலைகள், சுற்றுலாப் பகுதிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லும் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் சாலைகள் தேர்வு செய்யபடுகின்றன. குறைந்தபட்சம் 1 கி.மீ நீளமுள்ள சாலை இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் கீழ், இதுவரை 19,069 கி.மீ நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 317 பாலங்கள் ரூ.3,718.65 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.6. சிறிய இணைப்புச் சாலைகள்

ஊரகச் சாலைகள் தொகுப்பில் சுமார் 30% சாலைகள், ஒரு கி.மீ நீளத்திற்கும் குறைவான சாலைகள் ஆகும். பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்,

நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி போன்ற திட்டங்களின் மூலம் இச்சாலைகளை மேம்படுத்துவதில் உள்ள வரம்புகளை கருத்தில் கொண்டு, ஊரக பகுதிகளில் உள்ள ஒரு கி.மீ நீளத்திற்கும் குறைவான நீளம் கொண்ட முக்கிய இணைப்புச் சாலைகள், 20% மூலதன மானிய நிதியின் மூலம் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,911 கி.மீ நீளமுள்ள 3,227 சாலைகள் ரூ.488 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

## 2.7. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் இணைப்புச் சாலைகள்

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் 125 கி.மீ நீளம் கொண்ட இணைப்புச் சாலைகள் (கப்பிச் சாலைகள்), ரூ.58.17 கோடி மதிப்பீட்டில், 19 மாவட்டங்களில் 2020–21–ஆம் ஆண்டில், மேம்பாட்டிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான நிதி பழங்குடியினர் நலத் துறையின் மூலம் அளிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

## 2.8 பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (SIDS)

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் சொத்தாகும். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (பிரிவு–112) ன்படி இப்பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது மற்றும் அவற்றை பராமரிப்பது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். 2021–22ம் ஆண்டு முதல் இத்திட்டம் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் 'பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' என மீள அறிமுகப்படுத்தப்படும்.

ஊரக மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளைப் பழுதுபார்த்தல் , புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல், மேலும் நவீன வசதிகளை பள்ளிகளுக்கு வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## 2.9. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் தீவிரவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்னைகளைச் சரிசெய்து, பின்தங்கிய

மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் 2003–04 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், விவசாயத் தொழிலாளர்களுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.

2021–22 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.750 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

## 2.10 சுகாதாரம்

கிராமப்புர மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த, உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட சர்வதேச பெரும் தொற்று பரவல் பாதிப்பின் காரணமாக, மக்களின் சுத்தம் மற்றும் சுகாதார பழக்க வழக்கங்கள் அவர்களுடைய சமுதாய – பொருளாதார நிலையில் நேரடியாக தாக்கத்தை

ஏற்படுத்தும் என்பதை அறிய முடிகிறது. திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் ஒழுங்கற்ற திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றினால் ஏற்படும் விளைவுகளை கருத்தில் கொண்டு "சுத்தம் மற்றும் பசுமை" கிராமங்களை உருவாக்கிட, பல்வேறு நடவடிக்கைகளுக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. மேலும் ஐக்கிய நாடுகளால் அறிவிக்கப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதிலும் குறிப்பாக சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை என்ற முக்கிய நோக்கத்தினை நிறைவேற்றுவதிலும் தமிழ்நாடு அரசு முனைப்பாக உள்ளது.

**ஊரக பகுதிகளில் சுகாதார நிலை**

தமிழ்நாட்டில் தூய்மை பாரத இயக்க திட்டத்தின் கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகள் கட்டப்பட்டு அவற்றை பயன்படுத்துவதன் மூலம் 100% சுகாதார நிலையினை அடைந்துள்ளது. தமிழ்நாட்டில், 12,525 கிராம ஊராட்சிகள் அனைத்தும் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை எய்தியதாக அறிவித்துள்ளன.

மேலும், பாதுகாப்பான கழிப்பறை வசதிகள் பெறுவதிலிருந்து எந்த ஒரு குடும்பமும் விடுபடாமல்

இருப்பதை உறுதி செய்திட வேண்டி, தூய்மை பாரத திட்டம் (ஊரகம்) பகுதி 2– ன் கீழ் கூடுதலாக 2.17 இலட்சம் குடும்பங்களுக்கு கழிப்பறை வசதிகளை பெறுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## திட்டத்தின் தரத்தினை கண்காணித்தல்

தரமான சுகாதார உட்கட்டமைப்புகளை மதிப்பீடு செய்ய, மாநில அளவில் உயர் அலுவலர்கள் மூலமாக காலமுறை ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் சுகாதார திட்டத்தினை கண்காணிக்கும் அதிகாரம் உடையவராக உள்ளார். தரமான முறையில் கழிப்பறைகள் கட்டுவதையும், செயல்படும் கழிப்பறையின் நீடித்த நிலைத்த பயன்பாட்டினை உறுதி செய்யவும் மற்றும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை உட்கட்டமைப்புகள் ஆகியவற்றை உறுதி செய்யவும் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான உயர்நிலை அலுவலர்களால் அடிக்கடி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

## சுத்தம் மற்றும் பசுமையான கிராமங்களை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்

### அ) சமுதாய அமைப்புகளின் பங்கு

பாதுகாப்பான சுகாதார நடவடிக்கைகளை கடைப்பிடிக்க சமுதாயத்தினை தூண்டுவது என்பது நீடித்த நிலைத்த, திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற சுகாதார நிலையினை எய்த மிகவும் முக்கியமாகும். தமிழ்நாட்டில் ஏற்கெனவே செயல்படும் "பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகள்" மாபெரும் சமுதாய மூலதனமாகும். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் கீழ் கிராம அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், போன்றவற்றின் மூலமாக நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளிலும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையை தக்க வைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மக்களிடையே பெரிய அளவில் செல்வாக்கு உடையதாக திகழும், இந்த சமூகம் சார்ந்த அமைப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்தி சமுதாயத்தில் மாற்றத்தினை ஏற்படுத்துவதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை

கிராமங்களில் தக்கவைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய பங்கேற்பாளர் துறைகளை ஒருங்கிணைத்தல்**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் தவறான பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சியிலும் மற்றும் மன வளர்ச்சியிலும் ஒரு எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும், திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைக்க, தொடர்ந்து மக்களிடையே சுகாதாரம் குறித்த செய்திகளை கொண்டு செல்வது மிக முக்கியமானதாகும். உடல் நலம், கல்வி, வாழ்வாதாரம் மற்றும் பிற முக்கிய சமுதாயக் கூறுகளில் சுத்தம் மற்றும் சுகாதாரம் தாக்கத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு துறையும் இந்த இலக்கினை அடைய முற்படுவதோடு, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களைத் தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாக இந்த நோக்கம் சாத்தியமாகும். மாநில மற்றும் மாவட்ட அளவில், சுகாதாரம், மருத்துவ கல்வி மற்றும் குடும்ப நலம், பள்ளிக்கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள்

மூலமும் மேற்படி இலக்கை எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(இ) ஊக்குவிப்பாளர்களுக்குப் பயிற்சி**

மக்களிடையே மனமாற்றத்தினை ஏற்படுத்தும் சமுதாய கட்டமைப்புகளை உருவாக்கி நேரடி மனமாற்ற நடவடிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலமே நீடித்த நிலைத்த சுகாதார நிலையை எய்திட முடியும். இதற்கென மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில், சுகாதார பிரிவில் ஒரு பகுதியாக சுகாதாரத்திற்கென தனியாக 'மாநில பயிற்சி மேலாண்மை அலகு' என்ற பிரத்தியேகமான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டு, அங்கு நடத்தப்படும் அனைத்து பயிற்சிகளிலும், சுகாதாரம் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றது. திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையைத் தக்க வைக்க இம்மாதிரியான தொடர் பயிற்சிகள் மாநில மற்றும் வட்டார அளவிலான ஊக்குநர்களிருந்து கண்டறியப்பட்ட தலைமை பயிற்சியாளர்களை கொண்டு நடத்தப்படும்.

**(ஈ) நேரடி தகவல் பரிமாற்றத்தில் களப்பணியாளர்களை ஈடுபடுத்துதல்**

சுய உதவிக் குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்பட்ட

சுமார் 12,000 ஊக்குவிப்பாளர்களுக்கு, சமூக அணுகுமுறைப் பயிற்சியும், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தக்க வைத்தல் மற்றும் இது தொடர்பான கூடுதல் நடவடிக்கைகளில் (ODF Plus) பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் மக்களிடைய நேரடி மனமாற்றத்தின் மூலம் கழிப்பறை பயன்பாடு, திட, திரவ கழிவு மேலாண்மை, இரு குழிப் பயன்பாடு, மாதவிடாய் காலத்தில் சுகாதார அணுகுமுறைகளை பேணுதல் போன்ற சுகாதாரப் பயன்பாடுகளை எடுத்துரைக்கின்றனர். மேலும், பிற துறைகளைச் சார்ந்த களப்பணியாளர்களான ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் ஆகியோர்களுடன் சேர்ந்து கூட்டு முயற்சியாக பள்ளிகள், அங்கன்வாடி மையம், பொது நல மையம், ஆகிய இடங்களுக்கு சென்று இலக்கு மக்களுக்கான நேரடி தகவல் பரிமாற்றம் மூலம் மனமாற்றப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

**(ஊ) சுகாதார கையேடு**

களப்பணியாளர்களை உருவாக்குவதில், அடிப்படைத் தேவைகளில் ஒன்று வள ஆதார ஆவணமாகும். அவ்வாறு உருவாக்கப்பட்ட இந்த 'சுகாதார கையேடு', சுத்தம், சுகாதாரம், தண்ணீர், உடல்

நலம், ஊட்டச்சத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு விவரங்களை உள்ளடக்கியதாகும். 2021ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்த கையேடு அவ்வப்பொழுது புதுப்பிக்கப்பட்டு வருகின்றது. இந்த கையேட்டினை அடிப்படையாகக் கொண்டு ஊக்குநர்கள் மற்றும் பிற துறை களப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இக்கையேட்டினை, பயிற்சி நிலையங்களில் வள ஆதார ஆவணமாக பயன்படுத்துவதோடு மட்டுமல்லாது ஊக்குநர்கள் மற்றும் சுகாதாரம் தொடர்புடைய பல்வேறு தொடர்புடைய துறைகளில் பணியாற்றும் களப்பணியாளர்களுக்கு மக்களிடையே நேரடி தகவல் பரிமாற்றும் செய்வதில் அடிமட்ட அளவில் இந்த கையேடு முக்கிய ஆவணமாக பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆவணமானது பல்வேறு பிரிவினர்களுக்கான செய்திகளை உள்ளடக்கியதாக இருப்பதால், இலக்கு மக்கள் பிரிவான வளர் இளம் பெண்கள், தாய்மார்கள், குழந்தைகள், வெளிப்புற நோயாளிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியோர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.11. ஊரகப் பகுதிகளில் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன் கூடிய திடக்கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 12,525 கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வீடு வீடாகக் குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல், கழிவுகளை குழிகளில் கொட்டுதல் மற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அப்புறப்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு அருகில் உள்ள நகர்ப்புரத் தன்மை கொண்ட/ பெரிய கிராம ஊராட்சிகளில், ஒரு வட்டாரத்திற்கு குறைந்தது 3 'நுண் உரக் கூடங்கள்' அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

திடக் கழிவு மேலாண்மை திட்டம் முறையாக செயல்படுவதை உறுதி செய்திட மாவட்ட உயர்நிலை அலுவலர்கள் மற்றும் வட்டார அலுவலர்களால் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் தினசரி திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுவதை, சென்னை,

தேசிய தகவல் மைய உதவியுடன் உருவாக்கப்பட்ட துறையின் இணையதளத்தின் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

திடக் கழிவை பயனுள்ள வகையில் மேலாண்மை செய்யும் பொருட்டு பொது மக்கள் மற்றும் பள்ளி குழந்தைகளுக்குத் திடக்கழிவு மேலாண்மையில் குப்பைகளை சேகரமாகும் இடத்தில் பிரித்தல் குறித்தான முக்கியத்துவம், 'மறுத்தல், குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி' ஆகிய நான்கு கோட்பாடுகளை கடைபிடித்தல், நெகிழிக்குப் பதில் மாற்றுப் பொருளை பயன்படுத்துதல் மற்றும் அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பான முறையில் கையாளுதல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

**ஊரகப் பகுதிகளில் கழிவு நீர் (Grey Water) மேலாண்மை**

குளியலறை, கைகழுவுதல், பொது இடங்களில் துணி துவைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, விசைப்பம்பு மற்றும் கைப்பம்பு போன்ற இடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை திறம்பட கையாளவும், அவை சாலைகள்/ தெருக்கள் மற்றும் பொது இடங்களில் தேங்குவதை தடுக்கும் நோக்குடன்

கழிவு நீர் மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளில் ஒன்றான தனி உறிஞ்சுக்குழிகள் மற்றும் சமுதாய உறிஞ்சுக்குழிகளை அமைத்தல் ஆகியவை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. பாதாளசாக்கடைப் பணிகளை 15வது நிதிக்குழு மான்யம் மூலம் மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி/நகராட்சிப் பகுதிகளுக்கு அருகில் உள்ள நகர்ப்புர தன்மை உடைய பெரிய கிராம ஊராட்சிகளில் கழிவு நீர் மேலாண்மையை திறம்பட செயல்படுத்த உரிய உத்திகள் ஆராயப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

சுத்தம் மற்றும் பசுமை கிராமங்களை உருவாக்கிட, கழிவு நீர் மேலாண்மைப் பணிகளை செறிவு அணுகுமுறையில் மேற்கொள்ள தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டத்துடன், பிற திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், 15வது நிதிக்குழு மான்யம், ஜல் ஜீவன் திட்டம் போன்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து பணிகள் எடுத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 3. தமிழ்நாட்டில் ஊராட்சி நிர்வாக அமைப்புகள்

## 3.1 ஊராட்சி அமைப்புகளின் பரிணாம வளர்ச்சி

கிராமங்களின் வளர்ச்சிக்கும் நன்மைக்கும் கிராமம் சார்ந்த சமுதாய அமைப்புகளை உருவாக்கி அதை வளர்த்து, தொடர்ந்து நிலைபெறச் செய்வதில், தமிழ்நாடு ஒரு நெடிய, வலுவான மரபினைக் கொண்டுள்ளது. இந்த அடிப்படை நிர்வாக அமைப்புகள் சீரான மற்றும் முழுமையான முறையில் திட்டங்களை தீட்டி ஊரக மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும், அவர்களின் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுதலையும் உறுதி செய்து உதவி புரிகின்றன.

10–ஆம் நூற்றாண்டில் முதலாம் பராந்தக சோழர் ஆட்சிக்காலத்தின் போதே கிராம சபைகள் இருந்தன என்பதற்கு காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டவாச பெருமாள் கோயிலின் கல்வெட்டுகளே உறுதியான ஆதாரமாக அமைந்துள்ளன. அப்போது ஊர் மற்றும் சபா அல்லது மகாசபா என்ற இரண்டு அவைகள் இருந்தன. ஊர் கிராமத்தின் தன்னாட்சி பெற்ற பொது அவையாக இருந்தது. இக்கிராமங்களின் விவகாரங்களைக் கையாள சபா எனும் செயற்குழு செயல்பட்டது. இச்செயற்குழு உறுப்பினர்கள் மூன்று வருடகாலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமத்தின் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

இக்குழுவின் உறுப்பினர்கள் அக்கிராமத்தில் சொத்து வைத்திருப்பவர்களாகவும், அதிகாரம் கொண்டவர்களாகவும் இருந்தனர். இந்த அவைக்கு போட்டியிடுவோருக்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைகள் வகுக்கப்பட்டு, விதிமுறைகளுடன் கூடிய 'இரகசிய குடவோலை முறை' மூலம் தேர்தல்கள் நடத்தப்பட்டன.

தேசத்தந்தையும், கிராமப்புற வளர்ச்சியினை பெரிதும் ஆதரித்தவருமான அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் எப்பொழுதும் கிராமங்களின் தற்சார்பிற்கும், சுயாட்சிக்கும் பாடுபட்டு வந்துள்ளார். ஆங்கிலேய ஆட்சிக்காலத்திலும் 19–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அப்போதைய பிரிட்டிஷ் இந்தியாவின் வைசிராய் ரிப்பன் பிரபு அவர்கள் தலசுய ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

இந்திய அரசியலமைப்பின் பகுதி 4ல் உள்ள பிரிவு 40ல் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, அரசானது கிராம ஊராட்சிகளை அமைத்திட அனைத்து விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வலியுறுத்தியுள்ளது. அரசானது அவ்வாறு அமைக்கப்படும் கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரங்களையும், அவைகளை செயல்படுத்தும் உரிமைகளையும் வழங்கி அவைகள் சுயாட்சி பெற்ற

அமைப்புகளாக விளங்கிட ஆவண செய்யவும் வலியுறுத்தியுள்ளது.

ஒன்றிய அரசால் அமைக்கப் பெற்ற பல்வந்த்ராய் மேத்தா குழு அதன் அறிக்கையை ஜனவரி 1957 ஆம் ஆண்டு சமர்ப்பித்தது. அதில் அதிகாரப் பரவலாக்கத்தை மக்களாட்சி முறையில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கிடப் பரிந்துரைத்தது. அதனை தொடர்ந்து 1960 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் கிராம ஊராட்சிகள் உருவாக்கப்பட்டு நிர்வாகத்தின் அடிப்படை அலகாக அமைந்து முக்கியத்துவம் பெற்றன.

நாடு முழுவதும் ஊராட்சி அமைப்புகள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த போதிலும் இவ்வமைப்புகளில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களான பட்டியலினத்தவர், பட்டியலின பழங்குடியினர் மற்றும் மகளிரின் பிரதிநிதித்துவம் குறைவாகவே இருந்தது. மேலும் உரிய அதிகாரப்பகிர்வு இல்லாமலும் போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாமலும் இருந்தது.

உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை அறிந்து அவைகளின் அதிகாரங்களையும், செயல்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 73–வது திருத்த சட்டம் 1992ம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஏப்ரல் முதல்

நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இதன் விளைவாக அரசியலமைப்பு சட்டத்தில் பகுதி IX–ல் சேர்க்கப்பட்டு ஊராட்சி அமைப்புகளுக்கு அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

73வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தின் அடிப்படையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு 22.04.1994 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டம் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், கீழ்க்கண்ட முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தது.

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.
- 'ஊராட்சி என்பது மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிக்கும் பொதுச் சொல்லாக அமைந்தது.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர்கள் மறைமுகத் தேர்தல்களின் மூலம் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கக் கூடியவையாக உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக இல்லை.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்ததை மாற்றி 2016 ஆம் ஆண்டு அவர்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படும்.
- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- மாநில அரசிடமிருந்து நிதியினை ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கும் விகிதத்தை பரிந்துரை செய்வதற்காக மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.

- ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டத்தினை உருவாக்கும் வகையில் மாவட்ட திட்டக் குழு அமைக்கப்பட்டது.

அரசியலமைப்பு சட்டத்தின் 11 வது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 29 இனங்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரங்களை வழங்கிட மாநில அரசு வழிவகை செய்திட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 243-G தெரிவிக்கின்றது. தமிழ்நாடு அரசு பல்வேறு அரசு ஆணைகள் மூலம் 11வது அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள கல்வி, சுகாதாரம், குடிநீர் விநியோகம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கூட்டுறவு, பொது விநியோகம் போன்ற 29 இனங்களில் அதிகாரம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து ஆணையிட்டுள்ளது.

## 3.2. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகள்

### கிராம ஊராட்சிகள்

தமிழ்நாட்டில் உள்ள 37 ஊரக மாவட்டங்களில் 79,395 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சியின் தலைவர்,

கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாத வரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் 5 ஆண்டு காலம் செயல்பாட்டில் இருக்கும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் 2014ல் வெளியிடப்பட்டது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.inஎன்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கிராம ஊராட்சிக் குழுக்கள்**

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கீழ்க்கண்ட குழுக்கள் அமைத்து செயல்படும்.

- நியமனக்குழு
- வளர்ச்சிக்குழு
- வேளாண்மைக் குழு

- பணிகள் குழு
- கல்விக் குழு

**நியமனக் குழு**

- கிராம ஊராட்சியில், ஊராட்சி நிதியில் ஊதியம் பெற அனுமதிக்கப்பட்ட பணியாளர்களை தேர்வு செய்வது இக்குழுவின் முக்கிய பணி ஆகும். இக்குழுவில் கிராம ஊராட்சித் தலைவரும், தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களும் இடம் பெறுவர்.

**வளர்ச்சிக் குழு**

- இக்குழுவின் தலைவராக கிராம ஊராட்சியில் உள்ள பெண் உறுப்பினர்களில் ஒருவர் இருப்பார். மேலும் இரண்டு உறுப்பினர்களும் இடம் பெறுவர்.
- உடல் நலம், சுகாதாரம், குடிநீர், சமுதாய சொத்துக்கள் ஆகியவற்றினை பராமரித்தல் மற்றும் தரம் உயர்த்துதல், தொற்று நோய் பரவாமல் தடுத்தல் மற்றும் தடுப்பூசி முகாம்கள் அமைத்தல் குறித்து மக்களிடம் உரிய விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தல் போன்றவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

## வேளாண்மை மற்றும்  நீர் வடிப்பகுதி குழு

- இக்குழுவின் தலைவர், கிராம ஊராட்சியின் உறுப்பினர்களுள் ஒருவராவார். விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்த கிராம ஊராட்சியில் வேளாண்மை குழுக்கள் ஏற்படுத்துதல், நீர்பாசன ஆதாரங்களில்சிறுபாசன குளங்கள் மற்றும் பொதுப்பணித்துறை குளங்களில் பாசன மேம்பாடு செய்தல், வேளாண்மை, தோட்டக்கலை, பட்டு வளர்ப்பு,மலர் உற்பத்தி, பால் பண்ணை, மீன்வளர்ப்பு, கோழிவளர்ப்பு, தரிசு நில மேம்பாடு, வறட்சிப்பகுதி மேம்பாடு, சமூகக்காடுகள், நில மேலாண்மை மண் அரிப்பு தடுப்பு மற்றும் நீர்வள மேலாண்மை போன்ற நடவடிக்கைகளில் கிராம ஊராட்சிக்கு உதவுதல் உள்ளிட்ட முக்கியபணிகளை இக்குழு மேற்கொள்ளும்.

## பணிகள் குழு

- ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுத் திட்டங்களை தரத்துடன் உரிய காலத்தில் நிறைவேற்றவும், கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள உள்ளூர் வள ஆதாரங்களைப் பயன்படுத்தி கிராம ஊராட்சி வளர்ச்சித்

திட்டங்களை தயாரிக்கவும், இக்குழு கிராம ஊராட்சிக்கு உதவியாக இருக்கும்.

**கல்விக் குழு**

- கிராம ஊராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் செயல்பாடுகளை கண்காணித்தல், பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு மக்களின் பங்கேற்பினைப் பெறுதல், மக்களிடையே முதியோர் கல்வி, நூலகப் பராமரிப்பு, எழுத்தறிவு ஆகியவற்றை ஏற்படுத்தும் முகாம்களை அமைத்தல் ஆகியவை இக்குழுவின் முக்கிய பணிகளாகும்.

**அட்டவணை 3.1.**
**2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்**

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,822 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| **மொத்தம்** | | **12,525** |

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

**அட்டவணை 3.2.**

**மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்**

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | ஆதி திராவிடர் / பழங் – குடியினர் |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 734580 | 253798 |
| 2 | செங்கல்பட்டு | 1127209 | 400366 |
| 3 | திருவள்ளூர் | 1585280 | 541823 |
| 4 | கடலூர் | 1800133 | 635870 |
| 5 | விழுப்புரம் | 1724186 | 555125 |
| 6 | கள்ளக்குறிச்சி | 1188774 | 435472 |
| 7 | வேலூர் | 862476 | 247498 |
| 8 | இராணிப்பேட்டை | 808534 | 218568 |
| 9 | திருப்பத்தூர் | 811546 | 204412 |
| 10 | திருவண்ணாம | 2039049 | 589140 |
| 11 | சேலம் | 1957105 | 466879 |
| 12 | நாமக்கல் | 1087895 | 303517 |
| 13 | தர்மபுரி | 1290530 | 274147 |
| 14 | கிருஷ்ணகிரி | 1465743 | 241925 |
| 15 | ஈரோடு | 1130722 | 235773 |
| 16 | திருப்பூர் | 1139466 | 265486 |
| 17 | கோயம்புத்தூர் | 1021359 | 233057 |
| 18 | நீலகிரி | 310591 | 114213 |
| 19 | தஞ்சாவூர் | 1667809 | 385756 |
| 20 | நாகப்பட்டினம் | 1261288 | 463090 |
| 21 | திருவாரூர் | 1006482 | 389679 |

| வ. எண். | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | ஆதி திராவிடர் / பழங் – குடியினர் |
|---|---|---|---|
| 22 | திருச்சிராப்பள்ளி | 1471945 | 319628 |
| 23 | கரூர் | 668360 | 159919 |
| 24 | பெரம்பலூர் | 468017 | 152640 |
| 25 | அரியலூர் | 671100 | 173716 |
| 26 | புதுக்கோட்டை | 1341111 | 252397 |
| 27 | மதுரை | 1300481 | 277390 |
| 28 | தேனி | 575394 | 144966 |
| 29 | திண்டுக்கல் | 1457412 | 338644 |
| 30 | இராமநாதபுரம் | 1009270 | 214109 |
| 31 | விருதுநகர் | 1286543 | 316993 |
| 32 | சிவகங்கை | 952610 | 188972 |
| 33 | திருநெல்வேலி | 770260 | 157927 |
| 34 | தென்காசி | 875249 | 204659 |
| 35 | தூத்துக்குடி | 971273 | 250673 |
| 36 | கன்னியாகுமரி | 646441 | 30439 |
| **மொத்தம்** | | **40486223** | **10638666** |

## 3.2.1.மாவட்ட வாரியான பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு 1,04,149.61 சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விபரம் பின்வருமாறு:

## அட்டவணை 3.3

## மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மி) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மி) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 274 | 1,354 | 5 | 1539.19 | 5.62 |
| 2 | செங்கல்பட்டு | 359 | 2,158 | 6 | 2312.56 | 6.44 |
| 3 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 4 | கடலூர் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 5 | விழுப்புரம் | 688 | 2,285 | 3 | 3607.42 | 7.06 |
| 6 | கள்ளக்குறிச்சி | 412 | 1,202 | 3 | 2902.47 | 4.89 |
| 7 | வேலூர் | 247 | 2,122 | 9 | 1207.13 | 4.89 |
| 8 | இராணிப்பேட்டை | 288 | 1,593 | 6 | 1620.58 | 5.63 |
| 9 | திருப்பத்தூர் | 208 | 2,394 | 12 | 1194.59 | 5.74 |
| 10 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 11 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 12 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 13 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |
| 14 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 15 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 16 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 17 | கோயம்புத்தூர் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 18 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 19 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 20 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 21 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,130.40 | 5.4 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 23 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 24 | பெரம்பலூர் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.3 |
| 25 | அரியலூர் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 26 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 27 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |
| 28 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |
| 29 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 30 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 31 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 32 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 33 | திருநெல்வேலி | 204 | 1,337 | 7 | 2277.48 | 11.16 |
| 34 | தென்காசி | 221 | 1,000 | 5 | 2005.58 | 9.08 |
| 35 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 36 | கன்னியாகுமரி | 95 | 1,156 | 12 | 626.14 | 6.59 |
| **மொத்தம்** | | **12525** | **79,395** | **6** | **1,04,149.61** | **8.32** |

### 3.2.2, கிராம ஊராட்சிகளின் வருமான வரம்பு

மாநிலத்தில் மொத்தம் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. 2020-21 ஆம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 3.4**

**கிராம ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள்**

| **வருமான வரம்பு** | **கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை** |
|---|---|
| ரூ.10-20இலட்சம் | 6440 |
| ரூ.20- 50இலட்சம் | 5371 |
| ரூ.50இலட்சம் - 1கோடி | 605 |
| ரூ. 1கோடிக்கும் மேல் | 109 |
| **மொத்தம்** | **12525** |

### 3.2.3. கிராம சபை

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின், 243-வது பிரிவு கிராம ஊராட்சிகளில் கிராமசபை ஏற்படுத்திட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது. கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பான கிராம சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும்

வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 3–ன் கீழ்,

அ) கிராம சபையானது,

i) கிராம திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்
ii) கிராம ஆண்டு வரவு–செலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்
iii) கிராம ஊராட்சியின் முந்தையஆண்டுக்கான தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்தல்
iv) கிராம ஊராட்சியின் மூலம்செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வுசெய்தல் போன்ற பணிகளை மேற்கொள்கிறது.

(ஆ) அரசானது அறிவிக்கையின் மூலம் குறிப்பிட்ட சில பணிகளை கிராம சபைக்கு வழங்கலாம்.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர்–2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக்

கூட்டம் நடத்தலாம்.எனினும் இயற்கை பேரிடர்கள், நோய் பெருந்தொற்று, தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் இருக்கும் காலம் போன்ற தவிர்க்க இயலாத காலங்களில் கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படாத நிலை ஏற்படுகிறது. கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் கிராம சபைக்கான குறைவெண் வரம்பினை அரசு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்துள்ளது.

**அட்டவணை 3 . 5**

**கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு**

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றுவது, கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட/ காணொலி ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

### 3.2.4. கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 110ன்படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாயக் கடமைகளாகும்.

i) அனைத்து கிராமச் சாலைகள், பாலங்கள், சிறு பாலங்கள், தடுப்புச் சுவர்கள் மற்றும் தரைப் பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர).

ii) குடியிருப்புப் பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை அகற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்.

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களைப் பராமரித்தல்.

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல், குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

### 3.2.5. கிராம ஊராட்சிகளின் விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 111–ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்.

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளைக் நெறிப்படுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள் மற்றும் உடற்பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

### 3.2.6. ஊரகப்பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

ஊரகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். போதுமான உள்ளூர் நீர் ஆதாரங்கள் உள்ள கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாக விளங்குகின்றன. குடிநீர் தரம் குறைபாடுள்ள இடங்கள் மற்றும் பிற ஊரக பகுதிகளில் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் பெருமளவில் வழங்கப்படுகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

# அட்டவணை 3.6.
# பயன்பாட்டில் உள்ள குடிநீர் திட்டங்கள் மற்றும் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்

| வ. எண். | மாவட்டம் | கைப்பம்புகள் எண்ணிக்கை | விசைப்பம்புகள் எண்ணிக்கை | சிறு விசைப்பம்புகள் எண்ணிக்கை | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எண்ணிக்கை | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் எண்ணிக்கை | கூட்டு குடிநீர் திட்டங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | காஞ்சிபுரம் | 2048 | 2044 | 1943 | 1716 | 2 | 6 |
| 2 | செங்கல்பட்டு | 3560 | 2528 | 3716 | 2320 | 7 | 11 |
| 3 | திருவள்ளூர் | 4299 | 3717 | 2427 | 3779 | 23 | 8 |
| 4 | கடலூர் | 7282 | 3940 | 4128 | 3933 | 0 | 13 |
| 5 | விழுப்புரம் | 4615 | 3580 | 6702 | 3821 | 0 | 3 |
| 6 | கள்ளக்குறிச்சி | 6561 | 4078 | 7562 | 1820 | 0 | 4 |
| 7 | வேலூர் | 1223 | 2464 | 4538 | 2134 | 63 | 5 |
| 8 | இராணிப்பேட்டை | 1483 | 1803 | 2288 | 1683 | 1683 | 7 |
| 9 | திருப்பத்தூர் | 2627 | 2365 | 4275 | 2214 | 0 | 4 |
| 10 | திருவண்ணாமலை | 11584 | 5115 | 8556 | 5164 | 0 | 37 |
| 11 | சேலம் | 4554 | 5452 | 4764 | 3052 | 135 | 9 |
| 12 | நாமக்கல் | 2364 | 4750 | 1817 | 4220 | 547 | 13 |
| 13 | தருமபுரி | 9678 | 2582 | 6760 | 3486 | 84 | 10 |
| 14 | கிருஷ்ணகிரி | 8187 | 4969 | 4288 | 4727 | 121 | 18 |
| 15 | ஈரோடு | 3642 | 4841 | 1716 | 4338 | 812 | 41 |
| 16 | திருப்பூர் | 2274 | 4557 | 1005 | 4635 | 643 | 21 |
| 17 | கோயம்புத்தூர் | 1286 | 2938 | 747 | 2344 | 878 | 12 |
| 18 | நீலகிரி | 17 | 1259 | 127 | 15 | 1551 | 1 |
| 19 | தஞ்சாவூர் | 6176 | 5356 | 3119 | 4875 | 0 | 10 |
| 20 | நாகப்பட்டினம் | 21370 | 1616 | 2734 | 2636 | 294 | 13 |
| 21 | திருவாரூர் | 9892 | 2752 | 1413 | 2752 | 0 | 4 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 8504 | 4574 | 5508 | 4772 | 199 | 28 |
| 23 | கரூர் | 2367 | 2938 | 2568 | 2995 | 457 | 14 |
| 24 | பெரம்பலூர் | 3249 | 792 | 1160 | 763 | 158 | 6 |
| 25 | அரியலூர் | 1167 | 1644 | 1523 | 1644 | 2 | 7 |
| 26 | புதுக்கோட்டை | 6961 | 3999 | 4337 | 2799 | 169 | 3 |
| 27 | மதுரை | 4137 | 4199 | 3848 | 2639 | 147 | 9 |
| 28 | தேனி | 252 | 1063 | 957 | 1062 | 196 | 79 |
| 29 | திண்டுக்கல் | 2439 | 3241 | 4344 | 3241 | 3066 | 4 |
| 30 | இராமநாதபுரம் | 537 | 1333 | 1277 | 1254 | 1420 | 60 |
| 31 | விருதுநகர் | 10881 | 4954 | 6096 | 2702 | 379 | 14 |
| 32 | சிவகங்கை | 3685 | 2981 | 5094 | 2943 | 4 | 34 |
| 33 | திருநெல்வேலி | 1495 | 1773 | 1779 | 1949 | 373 | 18 |
| 34 | தென்காசி | 1754 | 1556 | 2644 | 1568 | 775 | 12 |
| 35 | தூத்துக்குடி | 8155 | 2314 | 2359 | 1801 | 184 | 23 |
| 36 | கன்னியாகுமரி | 221 | 1526 | 1802 | 1460 | 57 | 21 |
| | **மொத்தம்** | **170526** | **111593** | **119921** | **99256** | **14429** | **582** |

### 3.2.7. ஊரகப் பகுதிகளில் தெரு விளக்குகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994பிரிவு 110–ன்படி ஊரகப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும்.

ஊரகப்பகுதிகளில் தற்போது 29.71 இலட்சம் தெரு விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. இவற்றுள் 21.40 இலட்சம் எல்.இ.டி. விளக்குகள், 7 இலட்சம் சி.எப்.எல்., (CFL) விளக்குகள், 21,089 சோலார் மின் விளக்குகள், 86,617 குழல் விளக்குகள், 11,187 சோடியம் ஆவி விளக்குகள், 2,686 பாதரச ஆவி விளக்குகள் மற்றும் 9,198 உயர்கோபுர மின் விளக்குகள் அடங்கும். கிராம ஊராட்சியின் வருவாயில் தோராயமாக 35 விழுக்காடு மின் உபயோகத்திற்காக செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை, மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திடவும், தெருவிளக்குகளில் சிறந்த மேலாண்மையை செயல்படுத்திடவும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

# அட்டவணை 3.7
# ஊரகப்பகுதிகளில் உள்ள மாவட்ட வாரியான தெருவிளக்குகளின் விவரம்

| வ. எண். | மாவட்டம் | எல்.இ.டி விளக்குகள் | | | சி.எப்.எல் விளக்குகள் | பாதரச ஆவி விளக்குகள் | சோடியம் ஆவி விளக்குகள் | சூரிய ஒளி விளக்குகள் | குழல் விளக்குகள் | உயர் மின்கோபுர விளக்குகள் | மொத்த விளக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20W | 90W | மொத்தம் | | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 1 | காஞ்சிபுரம் | 43610 | 4064 | 47674 | 39746 | 0 | 652 | 4852 | 0 | 1594 | 94518 |
| 2 | செங்கல்பட்டு | 56765 | 5136 | 61901 | 45213 | 17 | 1339 | 665 | 13355 | 558 | 123048 |
| 3 | திருவள்ளூர் | 55233 | 3019 | 58252 | 92948 | 106 | 723 | 567 | 1562 | 277 | 154435 |
| 4 | கடலூர் | 88455 | 4352 | 92807 | 32047 | 74 | 862 | 404 | 0 | 159 | 126353 |
| 5 | விழுப்புரம் | 72180 | 4041 | 76221 | 34884 | 103 | 314 | 396 | 6064 | 446 | 118428 |
| 6 | கள்ளக்குறிச்சி | 42230 | 892 | 43122 | 10858 | 104 | 117 | 0 | 0 | 314 | 54515 |
| 7 | வேலூர் | 28010 | 6428 | 34438 | 9612 | 174 | 90 | 216 | 4055 | 56 | 48641 |
| 8 | இராணிப்பேட்டை | 26130 | 3512 | 29642 | 15635 | 57 | 109 | 148 | 7118 | 196 | 52905 |
| 9 | திருப்பத்தூர் | 27216 | 4506 | 31722 | 11336 | 97 | 0 | 1984 | 16527 | 356 | 62022 |
| 10 | திருவண்ணாமலை | 75484 | 3400 | 78884 | 37693 | 840 | 941 | 952 | 0 | 136 | 119446 |
| 11 | சேலம் | 91720 | 1957 | 93677 | 9199 | 82 | 615 | 339 | 5738 | 477 | 110127 |
| 12 | நாமக்கல் | 58964 | 732 | 59696 | 12845 | 31 | 123 | 557 | 6386 | 104 | 79742 |
| 13 | தருமபுரி | 48838 | 1326 | 50164 | 23515 | 0 | 484 | 0 | 6073 | 1786 | 82022 |
| 14 | கிருஷ்ணகிரி | 55407 | 379 | 55786 | 12516 | 0 | 0 | 110 | 0 | 254 | 68666 |
| 15 | ஈரோடு | 68123 | 1175 | 69298 | 1733 | 29 | 96 | 1214 | 1218 | 127 | 73715 |
| 16 | திருப்பூர் | 69754 | 354 | 70108 | 13034 | 0 | 0 | 823 | 0 | 0 | 83965 |
| 17 | கோயம்புத்தூர் | 60480 | 831 | 61311 | 18029 | 94 | 737 | 1324 | 0 | 130 | 81625 |
| 18 | நீலகிரி | 15014 | 0 | 15014 | 851 | 0 | 0 | 128 | 960 | 18 | 16971 |
| 19 | தஞ்சாவூர் | 112387 | 6158 | 118545 | 52005 | 0 | 0 | 1305 | 0 | 396 | 172251 |
| 20 | நாகப்பட்டினம் | 79278 | 2086 | 81364 | 38948 | 0 | 0 | 395 | 0 | 99 | 120806 |
| 21 | திருவாரூர் | 62089 | 0 | 62089 | 45496 | 3 | 76 | 717 | 0 | 192 | 108573 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 100803 | 235 | 101038 | 9085 | 67 | 548 | 410 | 3078 | 210 | 114436 |
| 23 | கரூர் | 34420 | 320 | 34740 | 11044 | 17 | 282 | 209 | 1727 | 185 | 48204 |
| 24 | பெரம்பலூர் | 17127 | 0 | 17127 | 9477 | 37 | 607 | 81 | 0 | 182 | 27511 |
| 25 | அரியலூர் | 37251 | 2847 | 40098 | 9527 | 0 | 0 | 645 | 0 | 30 | 50300 |
| 26 | புதுக்கோட்டை | 88651 | 2152 | 90803 | 14798 | 437 | 327 | 501 | 0 | 271 | 107137 |
| 27 | மதுரை | 59783 | 443 | 60226 | 10774 | 0 | 0 | 307 | 0 | 5 | 71312 |
| 28 | தேனி | 26381 | 94 | 26475 | 1343 | 0 | 0 | 616 | 0 | 0 | 28434 |
| 29 | திண்டுக்கல் | 67889 | 320 | 68209 | 15129 | 0 | 2 | 9 | 1420 | 0 | 84769 |
| 30 | இராமநாதபுரம் | 41153 | 0 | 41153 | 30259 | 40 | 666 | 217 | 0 | 460 | 72795 |
| 31 | விருதுநகர் | 66385 | 658 | 67043 | 18167 | 216 | 755 | 201 | 4472 | 44 | 90898 |
| 32 | சிவகங்கை | 55136 | 0 | 55136 | 0 | 53 | 439 | 0 | 0 | 0 | 55628 |
| 33 | திருநெல்வேலி | 64614 | 1460 | 66074 | 0 | 0 | 0 | 0 | 0 | 8 | 66082 |
| 34 | தென்காசி | 54994 | 1142 | 56136 | 26 | 0 | 18 | 50 | 632 | 12 | 56874 |
| 35 | தூத்துக்குடி | 82717 | 485 | 83202 | 10362 | 8 | 265 | 747 | 6232 | 62 | 100878 |
| 36 | கன்னியாகுமரி | 40167 | 1064 | 41231 | 1972 | 0 | 0 | 0 | 0 | 54 | 43257 |
| | **மொத்தம்** | **2074838** | **65568** | **2140406** | **700106** | **2686** | **11187** | **21089** | **86617** | **9198** | **2971289** |

### 3.2.8. சுகாதாரம்

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க் கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக அகற்றுதல்.

iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களை பராமரித்தல்.

v) சுடுகாடு/ இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

vi) பயன்படுத்தப்படாத கிணறுகள், சுகாதாரமற்ற குளங்கள், குட்டைகள், பள்ளங்கள் மற்றும் குழிகளை நிரப்பி சமப்படுத்துதல்.

ஊரகப் பகுதிகளில் தூய்மையைப் பேணவும் சுகாதாரத்தைப் பராமரிக்கவும் மொத்தம் 26,622 துப்புரவு பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலமாக

ஈடுபடுத்தப்பட்டுள்ள 66,130 தூய்மைக் காவலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ.285.68 கோடி மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து தூய்மைக்காவலர்களுக்கு மதிப்பூதியமாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு தூய்மை காவலருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.3,600/- தொகுப்பூதியமாக வழங்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றியதுவக்கப்பள்ளி, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் கழிப்பறை உள்ளிட்ட பணிகளின் பராமரிப்பிற்காக மொத்தம் 33,587 தூய்மைப்பணியாளர்கள் அயலாக்கப்பணி (Outsourcing) அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 2021-22ஆம் ஆண்டிற்கு மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.63.99 கோடி தோராய ஒதுக்கீடு செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

### 3.2.9. கோவிட்-19 பெருந்தொற்றினை தடுப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

கொரோனா பெருந்தொற்று 2020-ஆம் ஆண்டில் உலக அளவில் பரவத் தொடங்கி 2021-ஆம் ஆண்டில் ஊரகப் பகுதி மக்களை பாதித்து வருகிறது. புதிதாக பதவியேற்றுள்ள இவ்வரசு கடந்த மூன்று

மாதங்களாக பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து இப்பெருந்தொற்றைக்கட்டுப்படுத்தி வருகிறது.

அரசு வழிகாட்டுதலின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பணியாளர்களுடன் இணைந்து மருத்துவம், உடல்நலம், குடும்ப நலம் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்கள் நல்வாழ்வு துறையுடன் இணைந்து கொரோனா பெருந்தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் ஊரக பகுதிகளை தூய்மையாக பராமரித்தும் மேலும் பரவாவண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டும் முழு ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.

ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊரக மக்களிடையே நோய்த்தொற்று மற்றும் தடுப்பூசி தொடர்பான விழிப்புணர்வினையும், தடுப்பூசியின் அவசியம் குறித்தும் நேரடியாக மக்களை சென்று சந்தித்தும், பிரசுரங்கள், துண்டு சீட்டுகள் மற்றும் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட ஆட்டோக்களில் விளம்பரங்கள் செய்தும் ஏற்படுத்துகின்றன. மேலும் கிராம ஊராட்சிகள் கொரோனா பெருந்தொற்று தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளான முகக்கவசம் அணிதல், சமுக இடைவெளியைக் கடைப்பிடித்தல், முக்கியமாக திருமணம் மற்றும் இறப்பு போன்ற நிகழ்வுகளில்

பொதுமக்கள் அதிகம் கூடுவதை தவிர்த்தல் ஆகியவற்றைக் கட்டாயம் கடைப்பிடிக்க வலியுறுத்துகின்றன. ஊரகப் பகுதிகளில் அனைத்து பொது இடங்களிலும் கிருமி நாசினி கொண்டு முறையாக தெளிக்கப்படுகின்றன. தமிழக அரசின் வழிகாட்டுதலின் படி ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஊரடங்கு காலத்தில் தங்கு தடை இன்றி அத்தியாவசியப் பொருட்களான காய்கறிகள், பழங்கள் மற்றும் மளிகைப்பொருட்கள் வழங்குவதில் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்காற்றின.

உள்ளாட்சி அமைப்புகள் பொதுமக்களிடையே தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு செய்யவும், பொதுமக்கள் அதனை ஏற்றுக்கொள்ளவும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. கிராம ஊராட்சிகள், ஊரகப் பகுதிகளிலுள்ள சுயஉதவிக் குழுக்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகள், முன்களப் பணியாளர்கள் ஆகியோரின் சேவைகளை, வீடுவீடாக சென்று காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை கணக்கெடுத்தல் மற்றும் அவர்களை தடுப்பூசி செலுத்திக் கொள்ள ஊக்கமளித்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டன.

2. மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகள், மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையுடன் இணைந்து முகாம்களை ஊரகப் பகுதிகளில் ஏற்பாடு செய்து வருகிறது.

3. தடுப்பூசியினை பொறுத்தவரையில் துவக்க காலத்தில் ஊரக பொதுமக்களிடையில் தடுப்பூசி போட்டுக் கொள்வதில் மிகுந்த அச்சமும் குறைவான ஒத்துழைப்பும் இருந்தது. இதனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர் விழிப்புணர்வு (IEC) பிரச்சாரத்தை மேற்கொண்டதன் மூலம் நல்ல பலன்கள் கிட்டியது. தற்போது அதிகளவிலான பொதுமக்கள் தாமாகவே முன்வந்து தடுப்பூசி போட்டுக் கொள்ளத் துவங்கியுள்ளனர்.

4. ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் கோவிட்–19 தடுப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் பணியில் இருந்த முன்களப்பணியாளர்களும் தாமாகவே முன்வந்து தடுப்பூசி செலுத்திக்கொண்டனர்.

5. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டபணித் தளங்களில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் முழு ஒத்துழைப்புடன் தடுப்பூசி முகாம்கள்

நடத்தப்பட்டதில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

ஊரக உள்ளாட்சிப் பிரதிநிதிகள், துறையின் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களால் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தடுப்பூசி நடவடிக்கைகள் பொதுமக்களிடையே ஒரு மிகப்பெரிய நேர்மறை சிந்தனையையும், நம்பிக்கையையும் உண்டாக்கியது.

### 3.2.10. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் பிரிவு–240ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஒவ்வொரு ஆண்டும் கிராம ஊராட்சிக்கான வளர்ச்சித் திட்டத்தினைத் தயார் செய்திட வேண்டும்.

அடுத்த நிதியாண்டிற்கான கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை அரசின் வழிகாட்டுதல்படி அதற்கு முதலாண்டிலேயே தயாரிப்பதற்காக அக்டோபர் 2 முதல் டிசம்பர்–31 வரை மக்களிடம் திட்டமிடுதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திட அரசினால் ஆவண செய்யப்படுகிறது.

கிராம ஊராட்சி திட்டமிடல் செயல்முறை விரிவானதாகவும், மக்கள் பங்கேற்பின் அடிப்படையிலும் கிராம வளர்ச்சிக்காக

மேற்கொள்ளப்படுகிறது. மேலும் இது அரசியலமைப்புச் சட்டத்தின் பதினொன்றாவது அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 29 இனங்கள் தொடர்பான அனைத்துத் துறைகளின் திட்டங்களுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்டு திட்டமிடப்படுகிறது.

மக்கள் திட்டமிடல் இயக்கத்தின் ஒரு பகுதியாக, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் சமூக மற்றும் பொருளாதார மதிப்பீடு மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய வளபயிற்றுனர்கள் மூலம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு மிஷன் அந்தியோதயா செயலி மூலம் உள்ளீடு செய்யப்படும். இப்பயிற்றுனர்கள் தொடர்புடைய துறைகள் மற்றும் கள அளவில் ஆய்வு மேற்கொண்டு தகவல்களைச் சேகரிப்பதுடன் ஊராட்சிகளுக்கான தேவைகளையும் மதிப்பிடுவர்.

கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தை இறுதி செய்வதற்காக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபைகள் அல்லது ஊராட்சி மன்ற கூட்டங்கள் நடத்தப்படும்.

**ஊராட்சி ஒன்றியம்**

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 388 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், குறைந்தபட்சம்

5,000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

## அட்டவணை 3.8
## கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

| **ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம்** | **ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 82 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 66 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **388** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விவரம் பின்வருமாறு :–

## அட்டவணை 3.9
## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | மொத்த ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 5 | 274 | 55 | 1539.19 | 121.47 |
| 2 | செங்கல்பட்டு | 8 | 359 | 45 | 2312.56 | 174.80 |
| 3 | திருவள்ளூர் | 14 | 526 | 38 | 2859.84 | 204.27 |
| 4 | கடலூர் | 14 | 683 | 49 | 2942.24 | 226.33 |
| 5 | விழுப்புரம் | 13 | 688 | 53 | 3607.42 | 201.20 |
| 6 | கள்ளக்குறிச்சி | 9 | 412 | 46 | 2902.47 | 94.68 |
| 7 | வேலூர் | 7 | 247 | 35 | 1207.123 | 62.35 |
| 8 | இராணிப்பேட்டை | 7 | 288 | 41 | 1620.58 | 74.41 |
| 9 | திருப்பத்தூர் | 6 | 208 | 35 | 1194.59 | 64.36 |
| 10 | திருவண்ணாமலை | 18 | 860 | 48 | 4826.27 | 268.13 |
| 11 | சேலம் | 20 | 385 | 19 | 4561.41 | 228.07 |
| 12 | நாமக்கல் | 15 | 322 | 21 | 3119.43 | 207.96 |
| 13 | தர்மபுரி | 10 | 251 | 25 | 4407.43 | 550.93 |
| 14 | கிருஷ்ணகிரி | 10 | 333 | 33 | 4965.73 | 496.57 |
| 15 | ஈரோடு | 14 | 225 | 16 | 2626.99 | 187.64 |
| 16 | திருப்பூர் | 13 | 265 | 20 | 4545.5 | 349.65 |
| 17 | கோயம்புத்தூர் | 12 | 228 | 19 | 2534.24 | 211.19 |
| 18 | நீலகிரி | 4 | 35 | 9 | 1170.39 | 292.6 |
| 19 | தஞ்சாவூர் | 14 | 589 | 42 | 3657.67 | 261.26 |
| 20 | நாகப்பட்டினம் | 11 | 434 | 39 | 2400.31 | 218.21 |
| 21 | திருவாரூர் | 10 | 430 | 43 | 2130.40 | 232.27 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | 29 | 4028 | 287.71 |

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | மொத்த ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 23 | கரூர் | 8 | 157 | 20 | 2656.25 | 332.03 |
| 24 | பெரம்பலூர் | 4 | 121 | 30 | 1609.54 | 402.39 |
| 25 | அரியலூர் | 6 | 201 | 34 | 1710.17 | 285.03 |
| 26 | புதுக்கோட்டை | 13 | 497 | 38 | 4433.78 | 341.06 |
| 27 | மதுரை | 13 | 420 | 32 | 3183.18 | 244.86 |
| 28 | தேனி | 8 | 130 | 16 | 1159.89 | 144.99 |
| 29 | திண்டுக்கல் | 14 | 306 | 22 | 4401.34 | 314.38 |
| 30 | இராமநாதபுரம் | 11 | 429 | 39 | 4116.19 | 374.2 |
| 31 | விருதுநகர் | 11 | 450 | 41 | 3282.08 | 298.37 |
| 32 | சிவகங்கை | 12 | 445 | 37 | 3075.9 | 256.33 |
| 33 | திருநெல்வேலி | 9 | 204 | 23 | 2277.48 | 103.69 |
| 34 | தென்காசி | 10 | 221 | 22 | 2005.58 | 99.18 |
| 35 | தூத்துக்குடி | 12 | 403 | 34 | 4260.78 | 355.07 |
| 36 | கன்னியாகுமரி | 9 | 95 | 11 | 626.14 | 69.57 |
| **மொத்தம்** | | **388** | **12,525** | **32** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் / செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 112-ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவை பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊருணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்.
4. தொற்றுநோய் பரவாத வண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப் பட்டவற்றை பராமரித்தல்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 114–ன் படி ஊராட்சி ஒன்றியங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசின் திட்டங்கள் மற்றும் நோக்கங்களை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத் தீர்வை ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் வருவாய் இனங்களாகும்.
3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்தபட்ச மானியம் ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு வழங்கப்படுகின்றன. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
4. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம், தற்போது வட்டார ஊராட்சிகளுக்கும் மானியத்தினை வழங்க பரிந்துரைத்ததன் அடிப்படையில் மொத்த ஒதுக்கீட்டில் 15 சதவீதம்

வட்டார ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்**

தமிழ்நாட்டிலுள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு, பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதுவரை ரூ.453.70 கோடி செலவில் 224 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**நீராதார அமைப்புகள்**

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு :

## அட்டவணை 3.10
## மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் குட்டைகள் / ஊறுணிகள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | சிறு பாசன ஏரிகளின் எண்ணிக்கை | குளங்கள் மற்றும் ஊறுணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 380 | 2112 |
| 2 | செங்கல்பட்டு | 620 | 2512 |
| 3 | திருவள்ளூர் | 581 | 3296 |
| 4 | கடலூர் | 221 | 2586 |
| 5 | விழுப்புரம் | 780 | 3238 |
| 6 | கள்ளக்குறிச்சி | 379 | 1873 |
| 7 | வேலூர் | 134 | 819 |
| 8 | இராணிப்பேட்டை | 188 | 1349 |
| 9 | திருப்பத்தூர் | 244 | 260 |
| 10 | திருவண்ணாமலை | 1272 | 4359 |
| 11 | சேலம் | 192 | 564 |
| 12 | நாமக்கல் | 128 | 598 |
| 13 | தர்மபுரி | 546 | 504 |
| 14 | கிருஷ்ணகிரி | 1097 | 1404 |
| 15 | ஈரோடு | 22 | 623 |
| 16 | திருப்பூர் | 0 | 1149 |
| 17 | கோயம்புத்தூர் | 9 | 644 |
| 18 | நீலகிரி | 0 | 0 |
| 19 | தஞ்சாவூர் | 52 | 3306 |
| 20 | நாகப்பட்டினம் | 0 | 5219 |
| 21 | திருவாரூர் | 0 | 4152 |
| 22 | திருச்சிராப்பள்ளி | 1131 | 1774 |
| 23 | கரூர் | 107 | 823 |
| 24 | பெரம்பலூர் | 132 | 1219 |

| வ. எண் | மாவட்டம் | சிறு பாசன ஏரிகளின் எண்ணிக்கை | குளங்கள் மற்றும் ஊறுணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 25 | அரியலூர் | 471 | 1792 |
| 26 | புதுக்கோட்டை | 3915 | 5344 |
| 27 | மதுரை | 951 | 2370 |
| 28 | தேனி | 24 | 465 |
| 29 | திண்டுக்கல் | 1056 | 1484 |
| 30 | இராமநாதபுரம் | 1122 | 3897 |
| 31 | விருதுநகர் | 712 | 2925 |
| 32 | சிவகங்கை | 4251 | 4771 |
| 33 | திருநெல்வேலி | 311 | 192 |
| 34 | தென்காசி | 415 | 458 |
| 35 | தூத்துக்குடி | 402 | 1501 |
| 36 | கன்னியாகுமரி | 206 | 186 |
| **மொத்தம்** | | **22051** | **69768** |

## மாவட்ட ஊராட்சி

தமிழ்நாட்டில் 36 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்,1994 பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

புதிதாக உருவாக்கப்பட்ட 5 வருவாய் மாவட்டங்களை தொடர்ந்து ஐந்து புதிய மாவட்ட ஊராட்சிகளான, செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் தென்காசி ஆகியன அம்மாவட்டத்திலுள்ள வட்டார ஊராட்சிகளை மறுசீரமைத்து உருவாக்கப்பட்டுள்ளன. இம்மாவட்ட ஊராட்சிகள் எதிர்வரும் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்குப் பின் செயல்பாட்டிற்கு வரும். இது தவிர, நாகப்பட்டினம் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு மயிலாடுதுறை மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான மாவட்ட ஊராட்சி அமைப்பு தனியாக இதுவரை அமைக்கப்படவில்லை. எனினும், இம்மாவட்ட ஊராட்சி அடுத்த தேர்தல்களின் போது நடைமுறைக்கு வரும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்மந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக்குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்

3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சி, கூடுதல் நிலைக் குழுக்களை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

**செயல்பாடுகள்**

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப் பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றை முன்னேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதி, குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

**நிதி**

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில் மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் எட்டு விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம், தற்போது மாவட்ட ஊராட்சிகளுக்கும் மானியத்தினை வழங்க பரிந்துரைத்ததன் அடிப்படையில் மொத்த ஒதுக்கீட்டில் 5 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**மாவட்ட திட்டக் குழு**

மாவட்ட திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74–வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம், 1992ல் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்ட திட்டக் குழு 36 மாவட்டங்களிலும் அமைக்கப்பட வேண்டும். மாவட்ட திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இக்குழுவானது, மாவட்டத்தின் தேவைகளையும், பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் ஒன்றிணைக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட திட்டத்தினையும் அடிப்படையாகக் கொண்டு செயல்படும். எதிர்வரும் ஊரக மற்றும் நகரப் பகுதிகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பெற்றவுடன் மாவட்ட திட்டக்குழுக்கள் அமைக்கப்படும்.

## 3.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வருவாய் பெறுகின்றன.

அ) வரி வருவாய்

ஆ) வரியில்லா வருவாய்

இ) மானியம்.

**வரி வருவாய்**

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வரி வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

i) **வீடு / சொத்து வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172 மற்றும் அரசாணை எண். 255, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்:13.12.1999–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட கிராம

ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டு முதல், அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் கட்டிடங்களுக்குச் சொத்து வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. 2020-21 ஆம் ஆண்டில் ரூபாய் 200.28 கோடி வீட்டு வரி / சொத்து வரி மூலமாக கிராம ஊராட்சிகளால் வசூலிக்கப்பட்டுள்ளது.

**ii) தொழில் வரி**

கிராம ஊராட்சிகள், தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 198 B-ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித் தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும், வசூலிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து தொழில் வரிக்காக பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திட வேண்டும். அதன்படி, 2020-21 ஆம் ஆண்டில் தொழில் வரியாக ரூ. 138.36 கோடி வசூலிக்கப்பட்டது.

**iii) விளம்பர வரி**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 172, 220 மற்றும் பிரிவு 242-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

விளம்பர வரி விதிக்கும் உரிமை பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் (உரிமம் வழங்குதல் மற்றும் விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதிகள் 2009–ல் ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டிற்கான குறைந்தபட்ச மற்றும் அதிக பட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

**வரியல்லாத வருவாய்**

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்
iii) சந்தைக் கட்டணம்
iv) குடிநீர் கட்டணம்
v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை

xii) கனிமம் மற்றும் சுரங்க ஏலம் மற்றும் உரிமத் தொகை

i) **மனைப் பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்**

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஆனது, தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்:43, நாள்.04.02.2019–ன் மூலம் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இவ்விதிகளின்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநரின் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். 10,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக

கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

**ii) குடிநீர் கட்டணங்கள்**

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சி குடிநீர் கட்டணம் விதிக்கின்றது. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு வைப்புத் தொகை ரூ.1,000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2020–21 ஆம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ.97. 49 கோடி வசூலிக்கப்பட்டது.

## ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி ஆதாரங்கள்

### 3.3.1. மாநில நிதிக் குழு மானியம்

73–வது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் முக்கிய பொறுப்புகள் பின்வருமாறு:

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில்

மாநிலத்திற்கும், ஊராட்சிகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.

2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட 1994–லிருந்து இதுவரை ஐந்து மாநில நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## ஐந்தாவது மாநில நிதி ஆணையம் (2017–18 முதல் 2021–22 )

ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி மானியமானது ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. கீழ்க்காணும் ஐந்தாவது மாநில நிதிக் குழுவின் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு உரிய ஆணைகளை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 விழுக்காடு ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே 56:44 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையேயான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு 8: 37: 55 ஆகும்.

ஈ) 2017–18 ஆம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ. 5 இலட்சத்திலிருந்து ரூ. 7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ஆண்டுக்கு ரூ. 40 இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக் குழு மானிய தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

1. 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை : 60%
2. பரப்பளவு : 15%

3.ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை : 15%

4. தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி : 10%

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய மாநில நிதிக்குழு மானியத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு "மூலதன மானிய நிதி" ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதி முந்தைய உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஏற்படுத்தப்பட்டதாகும்.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் மேலும் 10 விழுக்காடு தொகை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக தனியே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2021–22 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசு ரூ.6,654 கோடி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநில நிதிக் குழு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

**ஆறாவது மாநில நிதி ஆணையம்:**

ஆறாவது மாநில நிதி ஆணையம் 2020–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு அதன் பரிந்துரைகள் எதிர் நோக்கப்படுகிறது

### 3.3.2. மூலதன மானிய நிதி

ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சி

அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மானிய நிதிக்கு வழங்கப்படும். இந்த 20% ஒதுக்கீட்டில், மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், நிதித் துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் ஆகியோர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட திட்ட குழுக்களுக்கு அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையினால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2021-22 ஆம் ஆண்டிற்கான மூலதன மானிய நிதியாக ரூ.1,330.85 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாநில நிதிக்குழு மானியத்தின் மொத்த ஒதுக்கீட்டில் இருந்து அரசு வழங்கியுள்ளது.

### 3.3.3. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி

மூலதன மானிய நிதியுடன், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த 10 சதவிகித நிதியில், 40 விழுக்காடு தொகை, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும்.

இதுதவிர 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாநில நிதி ஆணையத்தால் மாவட்ட ஊராட்சிகளுக்கு பரிந்துரைத்துள்ள விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்வு காண முடியாத நிதிப் பிரச்சினைகளுக்கு பயன்படுத்தலாம். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை

கூட்டு குடிநீர் திட்டத்திலுள்ள பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும். தமிழக அரசு 2021-22 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ரூ.665.42 கோடியை மாநில நிதிக்குழு மானியத்திலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.3.4. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணத்துடன் பெறப்படும் மிகுவரி வருவாய் மாநில அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு பதிவுத்துறை மூலம் விடுவிக்கப்படுகிறது. இந்த மிகுவரி வருவாய் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது.

அதன்படி, 2020-21 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ. 618.43 கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

i) மூன்றில் ஒரு பங்கு தொகையான ரூ.206.14 கோடி நிதியானது நீண்டகால நிலுவையில் உள்ள மின்கட்டணத்தை தமிழக மின் உற்பத்தி மற்றும்

பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் பயன்படுத்தப்பட்டது.

ii) மீதமுள்ள மூன்றில் இரு பங்கு தொகையான ரூ.412.29 கோடி ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் முன்னுரிமைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.3.5. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதி என்பது மாநில அளவில் ஒப்படைக்கப்பட்ட வருவாயின் ஒரு பகுதியாகும். இத்திட்டக்கூறு நிதிக்கான ஒப்படைக்கப்பட்ட வருவாயில் குறிப்பிட்ட சதவீதம் தேவையின் அடிப்படையில் சிறப்பு உட்கட்டமைப்பு பணிக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

கடந்த 2007 –08 ஆம் ஆண்டிலிருந்து முத்திரைத் தாள் கட்டணத்துடன் வசூலிக்கப்படும் மிகுவரி மற்றும் கேளிக்கை வரி ஆகிய ஒப்படைக்கப்பட்ட வரிவருவாய் இனங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்து அதன் ஒருபகுதி ஊராட்சிகளுக்கும் மீதமுள்ள பகுதி அரசின்

முதன்மைத் திட்டங்களுக்கும் பயன்படுத்திட அரசு உத்திரவுகளை பிறப்பித்து வருகிறது. சரக்கு மற்றும் சேவை வரி விதிக்கப்பட்டதன் காரணமாக, கேளிக்கை வரி முழுவதுமாக நீக்கம் செய்யப்பட்டது.

2020-21 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியிலிருந்து 1345 பணிகள் ரூ.379.45 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு 263 பணிகள் முடிக்கப்பட்டு அதற்கான செலவினம் ரூ.33.89 கோடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நிலுவையில் உள்ள பணிகள் இவ்வருடத்திற்குள் முடிக்கப்படும்.

### 3.3.6. ஒன்றிய நிதி ஆணைய மானியம்

நிதிப்பகிர்வு தொடர்பாக பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் சமர்ப்பித்த அறிக்கையை ஜனவரி 2020-ல் ஒன்றிய அரசு ஏற்றுக்கொண்டது. பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் தனது அறிக்கையை இரண்டு நிலைகளில் சமர்ப்பித்தது. ஒன்று 2020-21- ம் வருடத்திற்கும், மற்றொன்று 2021-22 முதல் 2025-26 வரையிலான காலத்திற்கும் ஆனதாகும்.

- 2020-21ம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த

ஒதுக்கீடு ரூ.3607 கோடி ஆகும். இதில் வரையறுக்கப்பட்ட நிதி மற்றும் வரையறுக்கப்படாத நிதி விகிதம் 50 : 50 ஆகும்.

**அடிப்படை – வரையறுக்கப்படாத மானியம் :**

அடிப்படை மானியம் என்பது வரையறுக்கப்படாத மானியம் ஆகும். இதனை ஊரக உள்ளாட்சி அமைப்புகள் ஊதியம் அல்லது நிர்வாக செலவினம் தவிர அரசு அனுமதித்துள்ள இதர குறிப்பிட்ட பணிகளுக்காக பயன்படுத்த முடியும்.

**வரையறுக்கப்பட்ட மானியம் :**

வரையறுக்கப்பட்ட மானியம் அடிப்படைத் தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

அ) குடிநீர் விநி யோகம், மழைநீர் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி

ஆ) சுகாதாரம் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை உருவாக்குதல் ஆகியவற்றிற்காக மட்டுமே பயன்படுத்திட இயலும்.

பதினைந்தாவது ஒன்றிய நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ள அடிப்படை மற்றும் வரையறுக்கப்பட்ட மானியங்களை மாநில நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட பகிர்மான விகிதாச்சார அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின்

மூன்று அடுக்குகளுக்கும் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மாவட்ட ஊராட்சிகள் | 5% |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 15% |
| கிராமஊராட்சிகள் | 80% |

ஐந்தாவது மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த பகிர்வின்படி கீழ்க்கண்டவாறு 15 வது நிதிக்குழுமானியம் மூன்று அடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உள் ஒதுக்கீடு கீழ்க்கண்ட அளவுகோலின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | 2011–ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் | : | 60% |
| 2 | பரப்பளவு | : | 15% |
| 3 | ஆதி திராவிடர்/ பழங்குடியினர் மக்கள் தொகை | : | 15% |
| 4 | தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | : | 10% |

**ஒதுக்கீடு :**

15வது ஆணைய காலம் முழுவதும் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 3.11**

**(ரூ. கோடியில்)**

| ஆண்டு | மொத்த மானியம் | வரையறுக்கப்படாத மானியம் (40%) | வரையறுக்கப்பட்ட மானியம் (60%) |
|---|---|---|---|
| 2021–22 | 2666 | 1066.4 | 1599.6 |
| 2022–23 | 2761 | 1104.4 | 1656.6 |
| 2023–24 | 2791 | 1116.4 | 1674.6 |
| 2024–25 | 2957 | 1182.8 | 1774.2 |
| 2025–26 | 2884 | 1153.6 | 1730.4 |
| **மொத்தம்** | **14059** | **5623. 6** | **8435. 4** |

15–வது நிதிக் குழு மானியம் பயன்படுத்துவது தொடர்பான வழிகாட்டி நெறிமுறைகள் அரசு ஆணை எண்.18, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (PR– 1), நாள் 03.02.2021–ல் வழங்கப்பட்டுள்ளது.

## பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

பொது நிதி மேலாண்மை அமைப்பு என்பது முழுமையான மின்னணு இயங்குதளத்தின் மூலம் அரசிடம் இருந்து பெறப்படும் நிதியானது பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளின் மூலம் உரிய பயனாளர்கள் வரை சென்றடைவதை முழுமையாக கண்காணிக்கும் அமைப்பாகும்.

பொது நிதி நிர்வாக அமைப்பு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் 2018 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. இதன் மூலம் அரசிடம் இருந்து மானியம் நேரடியாக

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

36 மாவட்ட ஊராட்சிகள், 388 வட்டார ஊராட்சிகள் மற்றும் 12,525 கிராம ஊராட்சிகள் ஆகியவை தனித்தனி அலகுகளாக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பொது நிதி மேலாண்மை அமைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**பொது நிதி மேலாண்மை அமைப்பின் நன்மைகள்**

- நிதிப் பட்டுவாடா மற்றும் பயன்பாடு தொடர்பான நிகழ்நேர கண்காணிப்பினை மேற்கொள்ளவும், பல்வேறு துறைகள், நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கிடையே நிதி பரிவர்த்தனை தொடர்பான முடிவுகளை விரைந்து மேற்கொள்வதற்கும் பொது நிதிமேலாண்மை அமைப்பு உதவி புரிகிறது.
- திட்ட செயலாக்க அமைப்புகளில் நிதி தேவையில்லாமல் ஆங்காங்கே தேக்கமடைவதை கண்டறியவும் உதவிகரமாக உள்ளது.
- பணப்பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தினையும், தேக்க நிலையினையும் இது பெருமளவு குறைக்கிறது.
- ஒட்டு மொத்த நிதி நிர்வாக மேலாண்மையிலும், திட்ட செயலாக்கத்திலும் வெளிப்படைத்

தன்மையினையும், முன்னேற்றத்தினையும் எட்டுவதற்கு உதவிகரமாக உள்ளது.

- தேவையற்ற பண விரயத்தினையும், போலியான பயனாளிகள் அகற்றப்படுவதையும் உறுதி செய்கிறது.

**நெகிழிக் கழிவு மேலாண்மை**

தமிழ்நாட்டினை நெகிழி இல்லா மாநிலமாக மாற்றுவதில் அரசுத்துறைகள் / நிறுவனங்கள்/ முகமைகள் ஆகியவற்றுக்கு மிக முக்கிய பங்கு உள்ளது. இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசானது சுற்றுப்புறம் (பாதுகாப்பு) திட்டம் 1986–ன்கீழ் ஒரு முறை பயன்படுத்தித் தூக்கி வீசக்கூடிய (அனைத்து தடிமன்களும்) நெகிழிகள் தடை செய்யப்படும் என உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ன்படி, ஊராட்சிகள் இப்பொருள் தொடர்பாக உப விதிகளை உருவாக்கி ஒருமுறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகளின் உற்பத்தி, சேமிப்பு, விற்பனை மற்றும் விநியோகத்தினைத் தடை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 244 ன்படி, ஊராட்சியானது இப்பொருள் தொடர்பான உப விதிகளை உருவாக்கி அட்டவணை

III–A ல் குறிப்பிட்டுள்ளபடி அபராதம் விதித்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

**அட்டவணை 3.12**

**பிரிவு 244 (2–A)–ன் கீழ் உப விதிகளை மீறினால் விதிக்கப்படும் அபராதத் தொகை அட்டவணை III–A**

| வ. எண். | குற்றங்கள் | முதல்முறை அபராதம் ரூ | இரண்டாம் முறை அபராதம் ரூ. | மூன்றாம் முறை அபராதம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஒரு முறை பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய நெகிழிகள் சேமிப்பு, எடுத்துச் செல்லுதல், விநியோகம் மற்றும் விற்பனை | 25,000 | 50,000 | 1,00,000 |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட் போன்ற பெரிய வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 10,000 | 15,000 | 25,000 |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்பாடு மற்றும் விநியோகம். | 1,000 | 2,000 | 5,000 |
| 4 | சிறிய அளவிலான கடைகளில் பயன்பாடு விநியோகம் | 100 | 200 | 500 |

ஊரகப் பகுதிகளில் மொத்தம் 42 நெகிழி தூளாக்கும் இயந்திரங்கள் உள்ளன. இவ்வாறு தூளாக்கப்பட்ட நெகிழித்துகள்கள் தாருடன் கலந்து சுற்றுச்சூழலைப் பாதிக்காத ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறியும் நெகிழியின் தடைகுறித்து விழிப்புணர்வு முகாம்கள் ஊரகப்பகுதிகளில் நடத்தப்பட்டுள்ளன. வணிக நிறுவனங்கள் மற்றும் கடைகளில் கள அலுவலர்கள் ஆய்வு செய்து தடைசெய்யப்பட்ட நெகிழிகளைக் கைப்பற்றி விதியை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகின்றது.

**பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு**

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தங்களது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாக்கவும், நிலையான பயன்பாட்டிற்கு வித்திடும் வகையிலும் பல்லுயிர் பெருக்க விதி, 2004–ன் பிரிவு–22 மற்றும் பல்லுயிர் பெருக்க விதி, 2017–ன் பிரிவு 20–ன் படி பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழு அமைத்திடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த குழுவானது, மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும் அமைக்கப்பட்டாக வேண்டும்.

கிராம ஊராட்சி அளவிலான பல்லுயிர் பெருக்க மேலாண்மைக் குழுவில் பின்வரும் 7 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். கிராம ஊராட்சித் தலைவர் இக்குழுவின் பதவி வழி உறுப்பினராக இருப்பார்.

- கிராம வனக் குழுவிலிருந்து ஒரு உறுப்பினர்
- சமூகம் சார்ந்த அமைப்புகளிலிருந்து மூன்று பெண் உறுப்பினர்கள்–
    I. கிராம சுய உதவிக்குழுவிலிருந்து ஒரு பெண் உறுப்பினர்
    II. கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலிருந்து ஒரு பெண் உறுப்பினர்
    III. சமுதாய வள பயிற்றுநர் அல்லது சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர் அல்லது பயிற்சி மையமான மகமையிலிருந்து ஒரு பெண் உறுப்பினர்.
- ஒரு விவசாயப் பிரதிநிதி
- கால்நடை வளர்ப்பவர் அல்லது மீனவ பிரதிநிதி (கடற்கரை கிராமமாக இருப்பின் மீனவ பிரதிநிதியினையும் சதுப்பு நிலமாக இருப்பின் மீனவ பிரதிநிதி அல்லது கால்நடை வளர்ப்பவரையும் நியமிக்கலாம்)
- தகுந்த அரசு சாரா நிறுவனத்திலிருந்து ஒரு உறுப்பினர்

## 3.4. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள்

### 3.4.1. மாநிலத் தேர்தல் ஆணையம்

- மாநிலத்தில் உள்ள நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்துவதற்கான ஒரு சுதந்திரமான மற்றும் தன்னாட்சி பெற்ற அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட அமைப்பாக 1994–ல் தமிழக மாநில தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. வாக்காளர் பட்டியலை தயாரிப்பதற்கான கண்காணிப்பு, வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாடு ஆகிய பணிகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் பொறுப்பில் இருக்கும்.
- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239, துணைப்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் மற்றும் பிற நிர்வாக ஊழியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மாநில தேர்தல் ஆணையர் 2 ஆண்டு காலத்திற்கு பதவியில் இருப்பார். எனினும் ஒட்டுமொத்த பணிக்காலம் 6 வருடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இரண்டு முறை தொடர்ச்சியாக பதவியில்

மீண்டும் நியமனம் செய்யத் தகுதியுடையவர் ஆவார். மேலும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்ட ஒருவர் தனது பதவிக்காலத்தில் அறுபத்தைந்து வயதை நிறைவு செய்தால் பதவியில் இருந்து ஓய்வு பெறுவார்.

### 3.4.2. மாநில மறுவரையறை ஆணையம் அமைத்தல்

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 28 ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிவுற்ற பின்பும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்வது அவசியம் என தெரிவிக்கின்றது. தமிழ்நாடு மறுவரையறை சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 23, 2017) பிரிவு 12ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தமிழ்நாடு மறுவரையறை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மறுவரையறை செய்யப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் 27 மாவட்டங்களில், அதற்கான அறிவிப்பு செய்யப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்களுக்கான சாதாரண தேர்தல் 2019–2020 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன.

தமிழ்நாட்டில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, மீதமுள்ள 9 மாவட்டங்களின் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறைப் பணிகள் நிறைவடைந்து உள்ளாட்சி தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அட்டவணை 3.13**

| வ. எண் | மாவட்டங்கள் | ஊராட்சி வார்டுகள் | ஒன்றிய வார்டுகளின் எண்ணிக்கை | மாவட்ட ஊராட்சியின் வார்டுகள் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1938 | 98 | 11 |
| 2 | செங்கல்பட்டு | 2679 | 154 | 16 |
| 3 | விழுப்புரம் | 5088 | 293 | 28 |
| 4 | கள்ளக்குறிச்சி | 3162 | 180 | 19 |
| 5 | வேலூர் | 2079 | 138 | 14 |
| 6 | இராணிப்பேட்டை | 2220 | 127 | 13 |
| 7 | திருப்பத்தூர் | 1779 | 125 | 13 |
| 8 | திருநெல்வேலி | 1731 | 122 | 12 |
| 9 | தென்காசி | 1905 | 144 | 14 |
| | **மொத்தம்** | **22581** | **1381** | **140** |

### 3.4.3. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடும் சுழற்சி முறையும்:

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிட ங்களுக்கு அவ்வின மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கானப் பதவியிடங்களுக்கு அம்மக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இட ஒதுக்கீடும் சுழற்சி முறையும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 3.4.4. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடும் பதவிகளும்

- உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும், அதிக அதிகாரங்கள் வழங்கவும் மகளிருக்கான இடஒதுக்கீடு 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, அரசினால் ஆணையிடப்பட்டது.

### 3.4.5. உள்ளாட்சித் தேர்தல்கள்

- தமிழ்நாட்டில், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996-ம் ஆண்டு நடத்தப்பட்டன. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர்-2001, அக்டோபர்- 2006 மற்றும் அக்டோபர் 2011 ல் நடத்தப்பட்டன.
- மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல்களை கட்சி அடிப்படையில் நடத்த மாநில தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிடும். ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.
- கடந்த டிசம்பர் 2019 ல், 27 மாவட்டங்களுக்குட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடத்தி

முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 2019ம் ஆண்டில் மாநில அரசானது வேலூர் மாவட்டத்தை வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை என மூன்று மாவட்டங்களாகவும், விழுப்புரம் மாவட்டத்தினை விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி என இரு மாவட்டங்களாகவும், காஞ்சிபுரம் மாவட்டத்தினை காஞ்சிபுரம், செங்கல்பட்டு என இரண்டு மாவட்டங்களாகவும், திருநெல்வேலி மாவட்டத்தினை திருநெல்வேலி மற்றும் தென்காசி என இரண்டு மாவட்டங்களாகவும் பிரித்து உத்தரவிட்டது. இதன்படி நான்கு பழைய மாவட்டங்கள் ஒன்பது மாவட்டங்களாக பிரிக்கப்பட்டது. இதனால், மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 31–லிருந்து 36 –ஆக உயர்ந்துள்ளது.

- புதிதாக ஏற்படுத்தப்பட்ட 9 மாவட்டங்களுக்குட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகளை மறுவரையறை செய்ய வேண்டிய காரணத்தினால் உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்படவில்லை. தற்போது இவற்றிற்கு தேர்தல்கள்விரைவில் நடத்தப்படும். ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் நடத்தப்பட்ட பிறகு, நாகப்பட்டினம் மாவட்டம் இரண்டாக

பிரிக்கப்பட்டு மயிலாடுதுறை மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. இதனால் தற்போது மயிலாடுதுறை மாவட்டத்திற்குத் தனியாகத் தேர்தல்கள் நடத்தப்பட மாட்டாது.

# 4. ஒன்றிய அரசுத் திட்டங்கள்

## 4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

### 4.1.1 திட்டத்தின் சிறப்பம்சங்கள்

பத்து முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

i. வேலை அட்டை பெறுவதற்கான (Job card) உரிமை

ii. வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

iii. வேலையில்லாப்படி பெறுவதற்கான உரிமை

iv. தேவையான பணிகளைத் தேர்ந்தெடுத்து தொகுக்கும் உரிமை

v. 5 கி.மீ. தொலைவிற்குள் வேலை பெறுதலுக்கான உரிமை

vi. பணித்தளத்தில் அடிப்படை வசதிகள் பெறுவதற்கான உரிமை

vii. அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

viii. பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

ix. காலங்கடந்து ஊதியத் தொகை வழங்கினால் இழப்பீடு பெறுவதற்கான உரிமை

x. குறித்த காலத்திற்குள் குறைகள் மீது தீர்வு காணல் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள் மீது தொடர் சமூகத் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல்.

1) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் "பணி வாரம்" என்பது ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வரை வேலை நடைபெறுவதாகும்.

2) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக பணி வாய்ப்புகள் வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, அனைத்து தொகுப்புகளிலும் கூடுதலாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில்

நிர்ணயம் செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I. ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின் படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர வேலைக்கு பெறக்கூடியதற்கு (அதாவது 7 மணி நேர செயல் விளைவுடைய வேலை) சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

4) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப் புள்ளி பட்டியலைப் பின்பற்றி அரசாணை வெளியிடப்பட்டு முறையாக பின்பற்றப்படுகிறது. இவ்வரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கென மண் வேலை தொடர்பான மற்றும் இதர சிறப்பு பணிகள் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5) ஒப்பந்ததாரர்கள் மற்றும் உடல் உழைப்பை தவிர்க்கும் இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை. எனினும், சில பணிகளுக்கு இயந்திரங்கள் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.
6) அனைத்து கட்டுமானப் பணிகளிலும் தொழிலாளர் ஊதியக்கூறிற்கு ஊரக விலைப் புள்ளி பட்டியலையும், பொருள் செலவினக்கூறிற்கு

பொதுப் பணித்துறை விலைப்புள்ளி பட்டியலையும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

7) குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு பயனாளியும் வேலைக்கு விண்ணப்பிக்கவும், அவ்வேலையினைப் பெறுவதற்கும் வேலை அட்டையினைப் பெற உரிமை பெற்றுள்ளனர். வேலை அட்டை ஒவ்வொரு ஐந்து ஆண்டிற்கும் ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. 01.04.2017 லிருந்து ஐந்து வருடங்களுக்குச் செல்லத்தக்க புதிய வேலை அட்டைகள் 100 சதவிகித சரிபார்ப்பிற்குப் பின் அனைத்து செயற்படும் (active) தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

8) 2017-18 ஆம் ஆண்டிலிருந்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் மின்னணு வருகைப்பதிவேடு (e-MR) பயன்படுத்தப்பட்டு வருகிறது.

9) அனைத்து ஊராட்சிகளிலும் ஒன்றிய அரசால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழு சட்டப்பூர்வ பதிவேடுகளுடன் வேலை அடையாள அட்டைக்கான இருப்புப் பதிவேடும் கூடுதலாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

10) 2021-22 ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் 1.4.2021 முதல் ஆண்கள் மற்றும்

பெண்கள் என்ற வேறுபாடின்றி நாளொன்றுக்கு ரூ.273 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

11) அரசாணை (நிலை) எண்.25, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி1) துறை நாள்.27.02.2014ன்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்கள் முழு ஊதியம் பெற 37 கன அடி மண் வேலை செய்ய வேண்டும்.

12) பணித் தளம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வினத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ. சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

13) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

14) 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் நேரடியாக திட்ட தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகின்றது.

15) கிராம சபையில் "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" அதாவது மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களிலிருந்து பயிற்சி பெற்ற கிராம வள நபர்கள் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகள் சமூகத் தணிக்கை செய்யப்படுகின்றது.
16) கிராம சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்தந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.
17) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் கூடிய குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படுகிறது.
18) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll Free Helpline) "1299" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

### 4.1.2. நிதி விடுவிப்பு

1) திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு முழுமையாக (100 விழுக்காடு) ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியம், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது.
2) அனைத்து ஊராட்சிகள் மற்றும் செயலாக்க முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான பணிகளுக்குண்டான ஊதியம் மற்றும் பொருட்கூறு செலவினம் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் பராமரிக்கப்படும்.
3) ஒரு ஆண்டில் செலவிடப்பட்ட மொத்த செலவினத்தில் 6 விழுக்காடு நிர்வாகச் செலவினத்திற்காகப் பயன்படுத்தலாம்.
4) வேலை கோரிய தொழிலாளர்கள் அனைவருக்கும் 15 நாட்களுக்குள் வேலை வழங்கப்பட வேண்டும். இல்லையெனில்

வேலையில்லாப் படி மாநில அரசால் வழங்கப்படுதல் வேண்டும்.

5) தொழிலாளர்களுக்கு ஊதியம் 15 நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும். இல்லையெனில் மாநில அரசால் தாமத ஊதியத்திற்கான இழப்பீடு வழங்கப்படுதல் வேண்டும். பின்னர் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதற்கு காரணமான அலுவலர்கள் அல்லது முகமைகளிடமிருந்து இவ்விழப்பீடானது வசூலிக்கப்பட வேண்டும்.

### 4.1.3. தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை மூலம் ஊதியம் வழங்குதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத் தொழிலாளர்களுக்கு, 07.11.2016 முதல் தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne–FMS) மூலம் நேரடியாக ஒன்றிய அரசால் தொழிலாளர்களின் வங்கிக் கணக்குகளில் ஊதியத் தொகை வரவு வைக்கப்படுகிறது.

இதைப் போலவே மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 01.04.2017 முதல் நிர்வாகச் செலவினம் மற்றும் பொருட்கூறு செலவினமும் மின்னணு நிதி மேலாண்மை முறை (e–FMS) மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

### 4.1.4. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / இதர பிரிவினர் வகைபாட்டில் நிதி விடுவிப்பு

2021–22ம் ஆண்டு முதல் இத்திட்டத் தொழிலாளர்களுக்கு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / இதர பிரிவினர் என்ற வகைபாட்டில் நிதி விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அதனை காலந்தாழ்த்தாமல் உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்றும் ஒன்றிய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 01.04.2021 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு நிதி விடுவிப்பு ஆணை, கையெழுத்திடுதல் மற்றும் ஊதியம் வழங்கப்படுதல் போன்றவை ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / இதர பிரிவினர் என்ற வகைப்பாட்டின் அடிப்படையில் தனித்தனியாக செயற்படுத்தப்படுகிறது.

### 4.1.5. தொழிலாளர்களின் வங்கி கணக்குகளுடன் ஆதார் எண்களை இணைத்தல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது ஊதியத்தை ஆதார் எண் அடிப்படையில் ஊதியம் வழங்கும் முறையில் (Aadhar Based Payment System) அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக சேர்க்கப்படுகிறது.

இதுவரை 2021-22 ஆம் ஆண்டில் தொடர்ந்து வேலை செய்யும் 90.41 இலட்சம் தொழிலாளர்களில், 89.62 இலட்சம் (99.12%) தொழிலாளர்களின் ஆதார் எண்கள் இணைக்கப்பட்டு, ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) 66.91 இலட்சம் (74%) தொழிலாளர்களது வங்கி கணக்கில் நேரடியாக ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**4.1.6. அனுமதிக்கப்பட்ட பணிகள்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட அட்டவணை 1ன் படி 4 பிரிவுகளாக அனுமதிக்கப்பட்ட பணிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அட்டவணைப்படி குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு பணிகளை அடிப்படையாகக் கொண்டு, மேலாண்மை தகவல் மைய அமைப்பு, இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 263 பணிகளை 45 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தியுள்ளது. இதன்படி 85 நீர்சார்ந்த பணிகள் உள்ளிட்ட 182 பணிகள் இயற்கைவள மேலாண்மைப் பணிகளாகும். 164 பணிகள் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த பணிகளாகும்.

### 4.1.7 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் நீடித்த நிலைத்த வளர்ச்சியினை எற்படுத்துதல் (Sustainable Development Goals)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் உன்னதமான வழிமுறைகள் மற்றும் நோக்கங்களின் மூலம், 'ஐக்கிய நாடு சபையின் நிலைத்த வளர்ச்சியின் நான்கு இலக்குகளான 'பசியின்மை', 'வறுமையின்மை', 'பருவநிலை மாற்றம்' மற்றும் 'ஆண், பெண் சமத்துவம்' போன்றவற்றை அடைய வழிவகை செய்கிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஆண் மற்றும் பெண் **தொழிலாளர்களுக்கு** அவர்கள் செய்த பணி அளவீடுகளுக்கு ஏற்ப சம ஊதியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டம் நீடித்த வளர்ச்சியின் முதல் மற்றும் முக்கிய இலக்கான வறுமை இன்மையை அடைய ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கும் **ஒரே வறுமை ஒழிப்பு** திட்டமாகும். மேலும் ஊரகப் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம்

வாழ்வாதாரத்தினை மேம்படுத்தி **பசியினைப் போக்க** உதவுகிறது.

தனி நபர் மற்றும் பொது நிலங்களில் மரக்கன்றுகள் நடுதல் மூலம் காலநிலை மாறுபாட்டு பாதிப்புகளிலிருந்து நிலங்கள் பாதுகாக்கப்படுகிறது. அரசுப்பள்ளிகள், கல்லூரிகள், அரசு புறம்போக்கு நிலங்கள், பூங்காக்கள், பொது இடங்கள் மற்றும் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்கள் நடுவதன் மூலம் கார்பன் வரவு (**carbon credit**) சரி செய்யப்படுகிறது. மேலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மண் மற்றும் அதன் ஈரப்பதத்தினை பாதுகாக்கும் பணிகள், சிறுபாசன குளம், குட்டை, கால்வாய்கள், ஊரணிகள் மற்றும் பிற நீராதாரங்களை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்வதன் மூலம் நிலத்தடி நீர் நிலையாக தக்கவைக்கப்பட்டு, காலநிலை மாறுபாட்டினை தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஊரக பகுதிகளில் இயற்கை வள மேலாண்மை பணிகளான தடுப்பணைகள் கட்டுதல், அகழிகள் அமைத்தல், நிலமேம்பாட்டு பணிகள், பாரம்பரிய நீராதாரங்களை பாதுகாத்தல் போன்ற வகைபாடு 'அ' பிரிவில் உள்ள பணிகள் மொத்த செலவினத்தில் 65 சதவிகிதத்துக்கும் மேலாக செயல்படுத்தப்படுகிறது.

### 4.1.8. தொகுப்புகள் முன்னேற்றத்திற்கான வசதிகள் வழங்கும் திட்டம் (Cluster Facilitation Project)

- தமிழ்நாட்டில் தொகுப்புகள் முன்னேற்றத்திற்கான வசதிகள் வழங்கும் திட்டம் என்பது முன்னேற விளையும் மாவட்டங்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட இடங்களில் பல முனை உத்திகளையும் கொண்டு வறுமையை ஒழிக்கும் நோக்கில் தமிழ் நாட்டில் 2 ஊராட்சி ஒன்றியங்கள் வீதம் 2 முன்னேற விளையும் மாவட்டங்களிலிருந்தும், 1 ஊராட்சி ஒன்றியம் பிற்படுத்தப்பட்ட மாவட்டத்திலிருந்தும் என மொத்தம் 5 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 01.04.2020 முதல் 31.03.2023 வரை 3 ஆண்டுகள் செயற்படுத்தப்படும்.

### 4.1.9. ஜல் சக்தி அபியான் –மழை நீரினை சேமித்தல் பிரச்சாரம் – 2021

மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களால் உலக நீர் தினமான 22.03.2021 அன்று மழைப் பொழிவு "**எங்கு பொழிந்தாலும் எப்பொழுது பொழிந்தாலும்"** அதனை சேமிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் மழைக்காலத்திற்கு முன் மற்றும் பின் காலமான

22.03.2021 முதல் 30.11.2021 வரை **ஜல்சக்தி அபியான் – மழை நீரினை தேக்குதல் பிரச்சாரம் – 2021 காணொளி வாயிலாக தொடங்கப்பட்டது.**

இப்பிரச்சாரம் ஓர் மக்கள் இயக்கமாக மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்திற்கான விழிப்புணர்வை உருவாக்குதல், நீர் பாதுகாப்பிற்கான பணிகளை மேற்கொள்வது மற்றும் நீர் பயன்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகிய மூன்று நோக்கங்களுடன் பொது மக்களின் தீவிர பங்கேற்புடன் எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த பிரச்சாரத்தின் போது, தட்பவெப்பநிலை மற்றும் மண் அடுக்குகளுக்கு ஏற்றது போலவும், தேவையான சேமிப்பு இடம், நிலத்தடி நீர் மீள்நிரப்புதல் மற்றும் சேமிக்கப்பட்ட நீரினை திறம்பட பயன்படுத்துதல் ஆகியவை அடையப்படும் வகையில் பல்வேறு நீர் பாதுகாப்பு பணிகள்எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பருவமழை தொடங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு, அதிக அளவு மழை நீர்சேமிப்பதற்கு போதுமான பரவலாக்கப்பட்ட சேமிப்பு இடம் உருவாக்கப்படுகிறது. மேலும், பொதுப்பணித்துறை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், வனத்துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை போன்ற

துறைகளுடன் ஒருங்கிணைத்து நீர் மேலாண்மை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்** அனுமதிக்கப்பட்ட 263 பணிகளில், 182 பணிகள் இயற்கை வள மேலாண்மை பணிகளாகும். இவற்றிலிருந்து ஜல் சக்தி அபியான் திட்டத்தின் கீழ் நீர் பாதுகாப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு, பாரம்பரிய மற்றும் பிற நீர்நிலைகளை புதுப்பித்தல், நீர் மறுபயன்பாடு, ஆழ்துளை கிணறு செறிவூட்டு கட்டமைப்புகள், நீர்நிலை மேம்பாடு மற்றும் தீவிர வன வளர்ப்பு உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறிய ஐந்து வகைப்பாட்டின் கீழ் 182 பணிகள் வரிசைப்படுத்தப்பட்டாலும், **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், பிரதான் மந்திரி கிரிஷி சின்ச்சாய் யோஜனா (PMKSY) திட்டம் மற்றும் பிற திட்டங்களுடன் இணைந்து 42 பணிகள் ஜல் சக்தி** அபியான் –மழை நீர் தேக்குதல் பிரச்சாரம் 2021–ன் கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### 4.1.10. மதிப்பீடு கணக்கிடுதலுக்கான மென்பொருள் (SECURE)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அனைத்து மாவட்டங்களிலும் மதிப்பீடு தயார் செய்வது, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்குவது போன்றவை **SECURE** மென்பொருள் மூலம் இணையதள வழியாக வழங்கப்படுகிறது.

### 4.1.11. புவிசார் தகவல் அமைப்பு (GIS) அடிப்படையில் கிராம ஊராட்சியின் பணிகளை திட்டமிடல்

2021-22 ஆம் ஆண்டில் அனைத்து ஊராட்சிகளிலும் புவிசார் தகவல் அமைப்பு (**GIS**) மூலம் திட்டமிடுதல் பின்பற்றப்படுகிறது.

### 4.1.12. சொத்துக்களுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், புவிக் குறியிடுதல் (**Geo tagging**) என்பது இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், புள்ளி விவரங்கள் மற்றும் தகவல்களை ஆய்வு செய்வதற்கான புவிசார் தகவல் அமைப்பை (GIS)

உருவாக்குவதாகும். இதன் மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி முகமையின் (Indian Space Research Organisation) ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Agency) மூலம் 'புவன்' என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் NREGASoft இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களையும் புவன் மென்பொருளின் தனித்துவ சிறப்புகளையும் ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு 'ஜியோ நரேகா' (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் துவங்கப்பட்டது முதல் உருவாக்கப்பட்ட சொத்துக்களில் 30,89,399 சொத்துக்களுக்கு (பகுதி 1 மற்றும் 2ல் முடிக்கப்பட்ட பணிகள்) புவிக்குறியீடு செய்யப்பட்டுள்ளன.

### 4.1.13. குறித்த காலத்திற்குள் ஊதியம் வழங்குதல்

2021-22 ஆம் நிதியாண்டில் 100 சதவிகித ஊதியத் தொகை பதினைந்து நாட்களுக்குள் வழங்கப்பட்டு வருகிறது .குறித்த காலத்திற்குள் ஊதியம்

வழங்குதலை நிலை I (T+8 ) ஆகவும் மற்றும் நிலை II (T+9 – T+15) ஆகவும் ஒன்றிய அரசு மாற்றியுள்ளது.

### 4.1.14. சிறந்த ஆளுமை முயற்சிகள்

ஒன்றிய அரசின் பரிந்துரையின்படி சிறந்த ஆளுமை முயற்சிகளான, வேலை அடையாள அட்டையினை மேம்படுத்துதல், ஊராட்சி அளவில் 7 கட்டாய பதிவேடுகள், பணிக்கோப்பு பராமரித்தல் மற்றும் குடிமக்கள் தகவல் பலகை அமைத்தல் போன்றவை மாவட்ட அளவில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் செயற்பொறியாளர் (ஊ.வ), அனைத்து உதவி இயக்குநர்கள்/மண்டல அலுவலர் ஆகியோர் கொண்ட கண்காணிப்புக் குழு ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதே நேரத்தில், மாநில அளவில் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, மாவட்ட அளவில் சிறந்த ஆளுமை முயற்சிகள் செயற்படுத்தப்படுவதினை கண்காணித்து மேற்பார்வை செய்யப்பட்டு வருகிறது.

### 4.1.15. 2021–22 ஆம் ஆண்டின் தொழிலாளர் வரவு செலவு திட்டம்

மனித சக்தி நாட்களுக்கான தொழிலாளர் மதிப்பீடு ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடிமட்ட தேவையினை அடிப்படையாகக் கொண்டு

தயாரிக்கப்பட்டுள்ளது. 2021–22 ஆம் நிதியாண்டிற்கான இம்மதிப்பீடு தயாரிக்கும் பணியில் தொகுப்பு வாரியான தேவைகளை கணக்கில் கொண்டு இறுதி செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், 25 கோடி மனித சக்தி நாட்களை தொழிலாளர் வரவு செலவு திட்டமாக தமிழ்நாட்டிற்கு 2021–22ம் ஆண்டிற்கு அங்கீகரித்துள்ளது.

**சமூக தணிக்கை**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தணிக்கை விதிகள் 2011 பிரிவு 3(1)–ன்படி ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் இச்சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மாநில அரசாங்கம் குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சமூக தணிக்கை மேற்கொள்ள வழிவகை செய்யவேண்டும். சமூக தணிக்கை வள அலுவலர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில், மக்களால் சமூக தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிதி செலவினம் மட்டுமல்லாது திட்டத்தின் செயல்முறை, சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்து ஆய்வு செய்வது சமூக தணிக்கையின் நோக்கமாகும். சமூக தணிக்கை, தகவல் பரிமாற்றம், கல்வி, தகவல் தொடர்பு

ஆகியவற்றின் மூலம் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை அதிகப்படுத்தவும், வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாடுகளான திட்டமிடுதல், பணிகளை தேர்வு செய்தல், அமல்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் பொது மக்களின் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் உதவுகிறது.

## திட்ட செயலாக்கப்பகுதி

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கத்தின் திட்ட செயலாக்க பகுதியானது அனைத்து ஊரகப் பகுதிகளை உள்ளடக்கிய 37 மாவட்டங்கள், 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 12,524 கிராம ஊராட்சிகளை கொண்டதாகும். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருவட்டார் வட்டாரத்திற்குட்பட்ட "பாலமோர்" என்ற கிராம ஊராட்சியைத் தவிர ஏனைய அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சமூக தணிக்கைப் பணி செயல்படுத்தப்படுகிறது. பாலமோர் கிராம ஊராட்சியானது முழுவதும் இரப்பர் தோட்டங்களால் சூழப்பட்டுள்ளதால், இக்கிராம ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

## சமூக தணிக்கை நிகழ்வுகள்

சமூக தணிக்கை நிகழ்வுகளானது பின்வருமாறு 5 நாட்கள் மேற்கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| நாள் – 1 | (அ) வட்டார அளவிலான திட்ட செயலாக்கத்தினர், கிராம ஊராட்சி அளவில் தேர்வு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், மகளிர் சுய உதவி குழுக்கள் ஆகியோர்களுடன், கிராம ஊராட்சி அளவில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்துதல். (காலையில்)<br>(ஆ) கிராம ஊராட்சி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை சரிபார்த்தல்.<br>(இ) சமூக தணிக்கை குறித்து, குடியிருப்பு வாரியாக மக்களிடையே விழிப்புணர்வு கூட்டம் நடத்துதல். (மாலையில்) |
| நாள் – 2 | தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட பயனாளிகளின் வசிப்பிடம் வாரியாக பயனாளிகளை தனித் தனியாக சந்தித்து கலந்துரையாடல் செய்தல், வேலை அட்டையினை தொடர்புடைய ஆவணங்களுடன் ஒப்பீடுசெய்து கையொப்பம் பெறுதல், பயனாளிகளிடம் கோரிக்கை மனுக்களைப் பெறுதல். |
| நாள் – 3 | கள ஆய்வு மற்றும் பணிகளை கள அளவீடு செய்தல். |
| நாள் – 4 | சமூகத் தணிக்கை அறிக்கை தயார் செய்தல். |
| நாள் – 5 | சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்துதல். |

## சமூக தணிக்கை செயல்பாடுகள்

2020-21 ஆம் நிதியாண்டில், கோவிட் -19 பெருந்தொற்றால் வழக்கமான சமூக தணிக்கை நடைபெறவில்லை.

## சமூக தணிக்கையின் தாக்கம்

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளே மேற்கொள்வதால், சமூக தணிக்கையானது திட்டப் பயனாளிகளிடையேயும், திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து இருப்பதால், இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பலன்களை அறிந்துகொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாகவும் சிறப்பு கிராம சபை அமைகிறது. மேலும், வட்டார அளவிலும் கிராம ஊராட்சி அளவிலும் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்படுவதோடு அதன் முக்கியத்துவமும் அறியப்பட்டுள்ளது.

**2021–22 ஆம் ஆண்டிற்கான சமூக தணிக்கை நடவடிக்கைகள்.**

2021–22 ஆம் நிதியாண்டில் 12,524 கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ள விரிவான கால அட்டவணை தயார் செய்யப்பட்டு 02.08.2021 முதல் சமூக தணிக்கை நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் 2019–20 நிதியாண்டிற்காக செலவினம் தொடர்பாக சமூக தணிக்கை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 23 சுற்றுகளில் நடத்தி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு வழிகாட்டுதல்களின் அடிப்படையில், தேசிய சமூக பாதுகாப்பு உதவித் திட்டம் (NSAP), பாரத பிரதமர் வீடு வழங்கும் திட்டம் (PMAY–G) மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 2020–21–ம் வருடத்தில் சமூக தணிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

## 4.2 பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் – ஊரகம்

ஐக்கிய நாடுகள் அமைப்பால் குடியிருப்பிற்கான உரிமை என்பது அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிலையான வளர்ச்சி

குறிக்கோள்களில் குறிக்கோள் எண்.1 என்பது வறுமை ஒழிப்பு ஆகும்.

ஊரகப் பகுதிகளில் ஒவ்வொரு குடும்பத்தின் கனவும் ஒரு நிலையான வீட்டினை கட்டுவதே ஆகும். நிலையான வீடு மக்களுக்கு பாதுகாப்பு உணர்வையும் நம்பிக்கையையும் வழங்குகிறது. இது மறைமுகமாக மக்களின் வாழ்வாதாரத்திற்கான வருமானத்தை ஈட்ட ஊக்கம் அளிக்கிறது மற்றும் வறுமையிலிருந்து மீண்டு வர உதவுகிறது. வறுமை இல்லா நிலையை அடைய, ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின், நிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களை அடைவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள ஒன்றிய அரசு, "வறுமை இல்லா நிலை"யை அடைய "அனைவருக்கும் வீடு" வழங்குவதற்காக பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

ஒன்றிய அரசின் பங்களிப்புடன் நிறைவேற்றப்படும் திட்டமான பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம்–ஊரகம், 2016–17 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் வீடு" வழங்குவதற்காக ஊரக வீட்டு வசதி திட்டத்தில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்ய, ஒன்றிய அரசின் திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

2016–17 ஆம் ஆண்டு முதல் மறுசீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்–ஊரகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் வாழும் வீடு இல்லாத, குடிசை வீடுகள் மற்றும் மிகப்பழுதடைந்த வீடுகளில் வசிக்கும் ஏழை மக்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையான வீடு கட்டிக் கொடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

சமூக–பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு 2011–ன் புள்ளி விவரங்களின் அடிப்படையில் கிராம சபை மூலம் இத்திட்டத்திற்கான பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மொத்த ஒதுக்கீட்டில், 60 விழுக்காடு ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினர் வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேற்கண்ட இரு இனங்களிலும் 5 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒரு வீட்டின் கட்டடப் பரப்பளவு 269 சதுர அடி ஆகும்.

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் என ஒன்றிய அரசு நிர்ணயம் செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதி

பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் (ஒன்றிய அரசு ரூ.72,000/- மற்றும் மாநில அரசு ரூ.48,000/-) உள்ளது. மேலும் தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக, அலகுத் தொகையுடன் ரூ.50,000/- கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே, தமிழ்நாட்டில் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும். பயனாளிகளுக்கு வீடு கட்டி முடிப்பதில் உள்ள சிரமத்தைக் குறைக்க 2,57,925 வீடுகளின் கட்டுமான பணிக்காக ஒரு வீட்டிற்கு தலா ரூ.70,000/- மாநில அரசால் கூடுதலாக வழங்கப்படுகிறது.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் அறிவிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது (90**x**ரூ.273 = ரூ.24,570/-) மேலும், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் பணிக்கு ரூ.12,000/- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் ஆகிய திட்டங்களுடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இவை தவிர, பயனாளிகளுக்கு மானிய விலையில் சிமெண்ட் மூட்டைகள் மற்றும் தேவையின்

அடிப்படையில் இரும்பு கம்பிகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வழங்கப்படுகிறது. இப்பொருட்களுக்கான கிரையத் தொகை, பயனாளிகளுக்கு வழங்கப்படும் பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு ஆகியவை ஆவாஸ்சாப்ட்(Awaas Soft) இணையதளம் மற்றும் ஆவாஸ்ஆப்(Awaas App) மூலம் மேற்கொள்ளப்படுகிறது. இவ்விரண்டு தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள், இத்திட்டத்தினை ஒவ்வொரு நிலையிலும் செயல்படுத்துவதற்கான பயனுள்ள கண்காணிப்பு தொழில் நுட்பத்தை வழங்குகின்றன.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு 2011–ன் புள்ளி விவரத்தின் அடிப்படையில் கிராம சபை மூலம், திட்ட பயனாளிகள் கண்டறியப்படுகின்றனர். ஆனால் பல தகுதி வாய்ந்த பயனாளிகள் சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு பட்டியல் 2011–ல் விடுபட்டுள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது. ஒன்றிய

அரசின் அறிவுரையின்படி தகுதியுள்ள விடுபட்ட பயனாளிகளை சமூக பொருளாதார சாதிவாரி கணக்கெடுப்பு பட்டியல் 2011–ல் சேர்த்திட, மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு, 9.11 இலட்சம் தகுதியுள்ள பயனாளிகள் கண்டறியப்பட்டனர். இப்பயனாளிகளின் பெயர் மற்றும் விவரங்கள் ஆவாஸ்ப்ளஸ் (Awaas Plus) மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 2016–17 முதல் 2019–20 வரை ரூ.8,968.38 கோடி மதிப்பீட்டில் 5,27,552 வீடுகள் ரூ.5,170.01 கோடி மாநில அரசின் பங்குத் தொகையுடன் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 2,91,727 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசால் 2021–22–ஆம் நிதியாண்டிற்கு 2,89,887/– வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.2,76,570/– (ஒன்றிய அரசின் பங்குத்தொகை ரூ.72,000/– மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை ரூ.48,000/– இவற்றுடன் வீடுகளின் கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக மானியமாக மாநில அரசால் ரூ.50,000/– மற்றும் கூடுதல் நிதியாக ரூ.70,000/– வழங்கப்படுகிறது. இவற்றுடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைத்து 90 மனித

நாட்களுக்கான ஊதியம் ரூ.24,570/- மற்றும் தனிநபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்கு தூய்மை பாரத இயக்கம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் ரூ.12,000/- வழங்கப்படுகிறது). 2,89,887 வீடுகளின் கட்டுமானத்திற்கான மொத்த தொகை ரூ.8017.47 கோடி ஆகும். 2021-22-ஆம் ஆண்டிற்கான தகுதியான பயனாளிகள் ஆவாஸ் ப்ளஸ் (Awaas Plus) இணையதளத்திலிருந்து கண்டறியப்படுவர்.

### 4.3 ஜல் ஜீவன் திட்டம்

நீரானது வாழ்வில் அமுதத்திற்கு ஒப்பான ஒன்றாகும். பொது சுகாதாரம் என்கின்ற முக்கோணத்தின் மூன்று முக்கிய முனைகளாக நீர், சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் ஆகியன அமைகின்றன. இந்நேர்வில் தனி நபருக்கு நாள் ஒன்றுக்கு 55 லிட்டர் குடிநீர் பரிந்துரைக்கப்பட்ட தரத்தில் நீடித்த மற்றும் தொடர்ச்சியாக ஊரக வாழ் மக்களுக்கு மார்ச் 2024 க்குள் வழங்கிடும் உன்னத எண்ணத்துடன் ஜல் ஜீவன் திட்டம் தொடங்கப்பட்டது. திட்டமிடுதலில் சமூகத்தை ஈடுபடுத்தி குடிநீர் வழங்குதலை கண்காணித்தல் மற்றும் நிலைத்த குடிநீர் ஆதாரங்களை நீர் செறிவூட்டுதல் மூலம்

வலுப்படுத்துதல், மறு பயன்பாட்டிற்கு ஊக்குவித்தல் ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**ஜல் ஜீவன் திட்டத்தின் கூறுகள்**

i) கிராம ஊராட்சிகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கிட தேவையான உள்ளூர் அளவிலான கட்டமைப்புகளை உருவாக்குதல்.

ii) நிலையான குடிநீர் ஆதாரங்களை உருவாக்குதல் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்படுத்துவதன் வாயிலாக குடிநீர் விநியோக அமைப்புகளை நீண்ட காலத்திற்கு செயல்பட வைத்தல்.

iii) ஊரகப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவதற்காக தேவைப்படும் இடங்களில் கூட்டு குடிநீர் திட்டங்கள் போன்ற பெருவிநியோக அமைப்புகள் மூலமோ சுத்திகரிப்பு நிலையங்கள் மூலமோ தகுந்த விநியோக அமைப்புகளை உருவாக்குதல்.

iv) தற்போது செயல்பாட்டில் உள்ள தனி கிராம மற்றும் கூட்டு குடிநீர் திட்டங்களை மறுசீரமைப்பு செய்தல் வாயிலாக

குறைந்தபட்சம் 55 லிட்டர் நீரினை நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு குழாய் இணைப்பு மூலம் வழங்கிடுதல்.

v) நீரின் தரம் மாசடைந்த பகுதிகளில் தேவைப்படும் தொழில்நுட்பங்களைக் கையாண்டு நீரிலுள்ள மாசுகளைஅகற்றுதல்.

vi) கழிவுநீர் மேலாண்மை மூலம் வீடுகளிலுள்ள சமையலறை, குளியலறைகளிலிருந்து (கழிவறை மூலம் உருவாகும் நீரினை தவிர்த்து) வெளிப்படும் 80 சதவிகித கழிவுநீரை சுத்திகரித்து விவசாயத்திற்கு பயன்படுத்துதல்.

vii) ஆதரவு நடவடிக்கைகள்–தகவல், கல்வி மற்றும் தொடர்பு, கிராம அளவிலான மனிதவள மேம்பாட்டு பயிற்சி, நீரின் தரம் சோதிக்கும் ஆய்வகங்கள், நீரின் தரத்தினை கண்காணித்தல், ஆய்வு மற்றும் வளர்ச்சி, அறிவுசார் மையங்கள், சமுதாய திறன் மேம்பாடு ஆகியவற்றை மேற்கொள்ளுதல்.

**வழிமுறைகள்**

ஜல் ஜீவன் திட்டத்தின் நோக்கத்தை அடைய, பின்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

I. ஊரக பகுதிகளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமத்தின் குடிநீர் தேவை மற்றும் அத்தியாவசியத்தின் அடிப்படையில் குக்கிராம வாரியான திட்டங்களை ஒருங்கிணைத்து கிராம செயல் திட்டம் (VAP) தயாரிக்கப்பட வேண்டும். கிராம செயல் திட்டம் , ஊராட்சி குழுவின் ஒப்புதலின் பேரில் கிராம சபையின் ஒப்புதல் பெறப்படும். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் செயல் திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு மாவட்ட செயல் திட்டம் தயாரிக்கப்படும். இத்திட்டம் இறுதி ஒப்புதலுக்காக மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதாரக் குழுவிற்கு (DWSC) சமர்பிக்கப்படும்.

II. மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளின் கிராம செயல் திட்டங்கள், மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களின் செயல் திட்டங்கள், மண்டல அளவிலான குடிநீர் விநியோக திட்டங்கள், மொத்த நீர் பரிமாற்றம் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் பற்றிய விவரங்கள் தொகுக்கப்பட்டு மாநில செயல் திட்டம் தயாரிக்கப்படும். மேலும் ஒவ்வொரு ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டின்

அடிப்படையில் மாநில அளவில் ஆண்டு செயல் திட்டம் தயாரிக்கப்படும்.

III. செயல்படுத்தப்பட உள்ள அனைத்து குடிநீர் வழங்கல் ஆதார பணிகளுக்கும் கிராம சபையால் ஒப்புதல் வழங்கப்பட்ட கிராம செயல் திட்டம் முக்கிய ஆவணமாக இருக்கும். பிற திட்டங்களை ஒருங்கிணைத்து பெறப்படும் நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் கிராம செயல் திட்டத்தில் இடம் பெற்ற பணிகளாக இருக்க வேண்டும். வேறு திட்டங்களில் தனியான நிதி ஒதுக்கீடு இருப்பினும் கிராம செயல்திட்டத்தில் இல்லாத பணிகளை எடுக்க இயலாது. இந்நடவடிக்கைகள் மூலம் அனைத்து ஆதாரங்களும் உகந்த அளவு பயன்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் இலக்கினை அடைய இயலும்.

IV. இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் அனைத்து நிலைகளிலும் குறிப்பாக கிராம அளவில் பெண்களின் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.

V. ஜல் ஜீவன் திட்டத்தினை திறம்பட செயல்படுத்த கிராம, மாவட்ட மற்றும் மாநில

அளவில் அமைக்கப்பட்ட குழுக்கள், பல்வேறு தொடர்புடைய பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**மாநில அளவில் செயல்படுத்தும் துறை ( State Nodal Department)**

தமிழ்நாட்டில் ஜல் ஜீவன் திட்டத்தினை செயல்படுத்தும் துறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையும் அதன் அரசு முதன்மை செயலாளர் மாநில அளவில் பற்று அலுவலராகவும் உள்ளார்.

அரசாணை (பல்வகை) எண்.65, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை (ம.அ.தி.–1) துறை நாள்: 17.03.2020இன் படி ஜல் ஜீவன் திட்ட இயக்குநர் மற்றும் பல்வேறு குழுக்களை மாநில நீர் மற்றும் சுகாதார குழுவின் கீழ் நியமனம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மாநில நீர் மற்றும் சுகாதார குழுவின் கீழ் உள்ள மூன்று குழுக்களின் விவரம் பின்வருமாறு

1) முதன்மைக் குழு
2) மாநில அளவிலான திட்ட அனுமதிக் குழு
3) செயற்குழு

i. **முதன்மைக் குழு**

ஜல் சக்தி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி, மாநில அரசு இக்குழுவினை அமைத்துள்ளது.

இக்குழுவின் தலைவராக அரசு தலைமை செயலாளர், உறுப்பினர்–செயலராக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மை செயலாளர் மற்றும் 6 மூத்த துறை செயலாளர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள். இக்குழு கொள்கை முடிவுகளை மேற்கொள்ளுதல், வழிகாட்டுதல் மற்றும் மாநில செயல் திட்டத்தை இறுதி செய்வதற்கு உதவும்.

**ii. மாநில அளவிலான திட்ட அனுமதி குழு**

மாநில அளவிலான திட்ட அனுமதி வழங்கும் குழுவானது முதன்மை குழுவால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு தேவையான தொழில்நுட்ப அனுமதியை வழங்கும். இக்குழுவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் முதன்மை செயலர் தலைவராகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பொறியியல் இயக்குநர் உறுப்பினர்–செயலராகவும் மற்றும் 9 தொழில்நுட்ப உறுப்பினர்களும் இருப்பார்கள்.

**iii. செயற்குழு**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இயக்குநர், மற்றும் நிதித் துறையின்

உறுப்பினர் ஆகியோரை கொண்ட செயற்குழுவால் மாவட்ட நீர் மற்றும் சுகாதார குழுவினால் தயாரிக்கப்படும் செயல் திட்டம் மற்றும் திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படும்.

## நிதி

ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் ஊரக வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கான பணிகளை செயல்படுத்த 50 சதவிகித நிதியினை ஒன்றிய அரசும், 50 சதவிகித நிதியினை மாநில அரசும் வழங்கும். இருப்பினும், ஆதரவு மற்றும் நீர் தர கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு 60 சதவிகிதமும், மாநில அரசு 40 சதவிகிதமும் வழங்கும்.

## செயல்படுத்துதல்

ஜல் ஜீவன் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

I) **பல் கிராமங்களுக்கான திட்டத்தில்**, ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளில், குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்கு வெளியே இருந்தால், பல்

கிராமங்களுக்கான திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வடிவமைத்து செயல்படுத்தப்படும். இத்தகைய திட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு 55 லிட்டர் (lpcd) என்ற அளவில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி வரை குடிநீர் விநியோகிக்கப்படும்.

II) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டு குடிநீர் திட்டப் பணிகளின் நீர் ஆதாரத்தை பெருக்குதல், மின்சார, இயந்திர, கருவிகள், குழாய்கள் ஆகியவற்றை மறுசீரமைப்பு செய்வதன் மூலம் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர் குடிநீர் வழங்குவதை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பூர்த்தி செய்யும்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, குடிநீர் ஆதாரம் கிராம எல்லைக்குள் இருந்தால் குக்கிராம திட்டம் மற்றும் ஒற்றை கிராம திட்டத்தை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், மற்றும் செயல்படுத்துதல் ஆகிய பணிகளை திட்டமிட்டு செயல்படுத்தும். இப்பணிகள் நீர் ஆதாரத்தை

உருவாக்குதல், நீர் உந்தும் குழாய்கள், மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி மற்றும் இதர நீர் சேமிப்பு அமைப்புகள், தெரு விநியோக அமைப்புகள் மற்றும் வீட்டு குழாய் இணைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இதுபோன்றே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்ட பல் கிராம திட்டங்களில் கிராம உள்கட்டமைப்பு பணிகளை வடிவமைத்தல், மதிப்பீடு தயாரித்தல், செயல்படுத்துதல் ஆகிய பணிகளுடன் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்கும் பணிகளையும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேற்கொள்ளும்.

**இத்திட்டத்தின் இதர முக்கிய அம்சங்கள் :**

- பணிகளின் தரத்தினை உறுதி செய்ய மூன்றாம் தரப்பு ஆய்வு மேற்கொள்ளுதல்.
- தரம், அளவு மற்றும் ஒழுங்கு முறைக்கான செயல்பாட்டு மதிப்பீடு.
- செயல்முறை, செயல்படுத்துதல் மற்றும் செயல்பாட்டினை ஒருங்கிணைந்த தகவல் மேலாண்மை அமைப்பின் மூலம் பதிவு செய்தல்.
- கள ஆய்வு உபகரணங்களின் மூலம் நீரின் தரத்தினை உறுதி செய்தல். நீரின் தரம் கார–

அமில தன்மை (pH), கடினத்தன்மை, ப்ளூரைடு, க்ளோரைடு, சல்பேட்டு மற்றும் பாக்டீரியாக்களின் அளவு ஆகிவற்றின் அனுமதிக்கப்பட்ட அளவின் அடிப்படையில் நீரின் தரத்தினை உறுதி செய்தல்.

**திறன் மேம்பாடு மற்றும் தகவல் கல்வி தொடர்பு செயல்பாடுகள்:**

நீரினை சிக்கனமாக பயன்படுத்துதல், மழைநீர் சேகரிப்பு, நீர் ஆதார நிலைகளை பாதுகாத்து பராமரித்தல், கழிவு நீர் மேலாண்மை, மற்றும் இதர நீர் விநியோகம் தொடர்பான தகவல் கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**திட்ட மூலதனத்தில் சமூக பங்களிப்பு**

கிராம ஊராட்சியில் உள்ள நீர் விநியோக கட்டமைப்பு மற்றும் மூல ஆதாரத்தை மேம்படுத்த மலைவாழ்/வனப்பகுதிகளில் திட்ட மூலதன தொகையில் 5% மற்றும் இதர கிராம ஊராட்சிகளில் 10% பணமாகவோ/ பொருளாகவோ/உடல் உழைப்பாகவோ பொது மக்களிடமிருந்து சமூக பங்களிப்பாக பெறப்பட வேண்டும்.

## செயல்பாடு மற்றும் பராமரிப்பு

வீட்டு குடிநீர் இணைப்பின் தன்மை மற்றும் நீடித்த நிலைத்த செயல்பாட்டினை உறுதி செய்ய இயக்குதல் மற்றும் பராமரிப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. அவற்றில் பின்வரும் தொடர் செலவினங்களும் உள்ளடங்கும்:

அ) மின் நுகர்வு கட்டணம்

ஆ) குழாய் இணைப்பு உடைப்புகளை பழுது பார்த்தல்

இ) இதர பராமரிப்பு

ஈ) க்ளோரின் கலந்த நீரினை விநியோகித்தல்

உ) குடிநீர் மோட்டார் இயக்குபவர்களுக்கான ஊதியம்.

இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு கிராம ஊராட்சியே பொறுப்பாகும்.

i. அரசாணை எண்.260, ஊ.வ.(ம).ஊ.துறை, நாள்.09.12.1998–ல் குறிப்பிட்டுள்ளவாறு பயனீட்டாளர்களுக்கான குடிநீர் கட்டணம் வசூலித்தல்.

ii. அரசால் நிர்ணயிக்கப்பட்ட மொத்த நீர் அளவு பரிமாற்ற கட்டணம், சம்பந்தப்பட்ட ஊராட்சியால்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்குதல்.

## இதர திட்ட நிதிகளை ஒருங்கிணைத்தல்

மாவட்ட நீர் மற்றும் சுகாதார குழுவால் ஆண்டு செயல் திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட திட்டப் பணிகளை செயல்படுத்த மாவட்ட அளவில் கிடைக்கக் கூடிய நிதிகளை ஒருங்கிணைத்து திட்ட பணிகளை மேற்கொள்ளுதல் மாவட்ட நீர் மற்றும் சுகாதார குழுவின் பொறுப்பாகும். மாவட்ட ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் 15வது நிதி குழு மானியம் மற்றும் 5வது மாநில நிதி குழு மானியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் மாவட்ட குடிநீர் மற்றும் சுகாதார குழுவால் ஒப்புதல் வழங்கப்பட்ட ஆண்டு செயல் திட்டத்தில் உள்ள பணிகளாக இருக்க வேண்டும்.

## ஜல் ஜீவன் திட்டத்தில் எடுக்கப்பட்டுள்ள பணிகள்

### 1. ஒற்றை கிராம திட்டம்:

i. ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 35 மாவட்டங்களில் 15,860 குக்கிராமங்களுக்கு ரூ.2006.06 கோடி மதிப்பீட்டில் 19,74,985, குடிநீர் இணைப்புகள் வழங்க ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

ii. 31.03.2021 அன்று ரூ.804.39 கோடி செலவினத்தில் 9,60,536 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

iii. மீதமுள்ள 11,19,728 குடிநீர் இணைப்புகள் 2021–22ம் ஆண்டில் ரூ.1201.67 கோடி, மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது.

**2. பல் கிராம திட்டங்கள்:**

ஜல் ஜீவன் திட்டத்தில் 2020–21ஆம் ஆண்டில் ரூ.2,878.16 கோடி மதிப்பீட்டில் 10 புதிய கூட்டு குடிநீர் திட்டங்களின் மூலம் 8 மாவட்டங்களில் (ஈரோடு, கரூர், தஞ்சாவூர், திருப்பத்தூர், திருநெல்வேலி, தென்காசி, விழுப்புரம் மற்றும் சேலம்) 3068 குக்கிராமங்களிலுள்ள 2,55,723 வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் 1,26,89,045 வீடுகள் உள்ளன, அவற்றில் தற்போது 83.92 லட்சம் ஊரக வீடுகளில் குடிநீர் குழாய் இணைப்புகள் இல்லாமல் உள்ளது. ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 2024 ஆண்டு மார்ச் இறுதிக்குள் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்படும். நடப்பாண்டில் ரூ.2000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.4. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MPLADS)

1993ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது தொடங்கப்பட்டு, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்பிட இத்திட்டம் வழிவகை செய்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு கீழ் ஒரு தொகுதிக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படும் பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு (புள்ளியியல் (ம) திட்ட செயலாக்கத் துறை) நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை 2020–21 மற்றும் 2021–22 ஆகிய நிதி ஆண்டுகளுக்கு செயல்படுத்துவதை நிறுத்தியுள்ளது. அத்தொகையினை கோவிட்–19 தொடர்பாக ஏற்பட்டுள்ள சவால்களை சமாளித்திட ஒன்றிய நிதி அமைச்சகத்திற்கு ஒதுக்கியுள்ளது.

## 4.5. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் (SAGY)

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, செயல்படுத்தி அந்த கிராமங்களை மாதிரி கிராமங்களாக மாற்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில், 3,000 முதல் 5,000 வரை மக்கள்

தொகை கொண்ட கிராம ஊராட்சிகளையும் மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1,000 முதல் 3,000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவரின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை

உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015–ன்படி திட்ட செயல்பாடுகளை கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மாதிரி கிராமத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் வளர்ச்சிக்கு இத்திட்டத்தின் கீழ் தனியாக நிதி ஒதுக்கீடு புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமான திட்டங்கள் ஏதும் இன்றி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒன்றிய, மாநில அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து தேவையான பணிகளை மேற்கொள்ளலாம்.

## 4.6 பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் I**

இணைப்புச் சாலை வசதி இல்லாத 500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்புடைய இணைப்புச் சாலை வசதி வழங்குவதே பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–I–ன் நோக்கமாகும். ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் குறைந்த பட்சம் ஒரு சாலை இணைப்பு வசதியினை வழங்கும் வகையில் ஏற்கனவே உள்ள இணைப்பு சாலை அமைப்பு கண்டறியப்பட்டு, இதனடிப்படையில் இணைப்புச் சாலைவசதி இல்லாத 500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட குக்கிராமங்களுக்கு இணைப்பு சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், ஏற்கனவே இருக்கும் பழுதடைந்த ஊரகச் சாலைகளும் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், 500–க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட இணைப்புச் சாலை வசதி இல்லாத 1,986 குக்கிராமங்களுக்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் I–ன் மூலம் இணைப்புச் சாலை வசதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு பிரதம மந்திரி சாலைத் திட்டம்–I–ன் கீழ் 11 கட்டங்களில் 2000–01 முதல் 2018–19 வரை

அனுமதி வழங்கப்பட்டு, மொத்தத்தில் 16,296 கி.மீ நீளமுள்ள 7,678 ஊரக சாலைகள் மற்றும் 98 பாலங்கள் ரூ.4,586 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II**

ஊரக சந்தை மற்றும் வளர்ச்சி மையங்களுக்கு செல்லும் சாலைகளை மேம்படுத்துவதற்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II, ஒன்றிய அரசால் 2013–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின் கீழ் 2,940 கி.மீ நீளமுள்ள 860 சாலைப்பணிகள் மற்றும் 34 பாலங்கள் ரூ.1,434 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் III**

குக்கிராமங்களை அருகில் உள்ள சந்தை, உயர்நிலை/மேல்நிலை பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் போன்றவற்றுடன் இணைக்கும் பிராதன சாலைகள் மற்றும் முக்கிய ஊரக இணைப்பு சாலைகளை மேம்படுத்துவதற்கு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III–ஐ ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–III–ன் கீழ், தமிழ்நாட்டிற்கு 7,375 கி.மீ நீளமுள்ள ஊரக சாலைகளை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. இதுவரை, தமிழ்நாட்டிற்கு 3,198 கி.மீ நீளமுள்ள சாலைகளுக்கு ரூ.1,817 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**நிதி ஆதாரம்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் தொடக்கத்தில் 100% ஒன்றிய அரசு நிதியுடன் செயல்படுத்தப்பட்டது. 2015–ஆம் ஆண்டு முதல் 60% ஒன்றிய அரசு பங்குத் தொகை மற்றும் 40% மாநில அரசு பங்குத் தொகை என நிதி பங்கீடு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகளைப் பராமரித்தல்**

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, இச்சாலைகளின் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு, இச்சாலைகளை அமைத்த அதே ஒப்பந்ததாரரால் செய்யப்பட வேண்டும். 5 ஆண்டுகால தொடர் பராமரிப்புக்கான நிதி மாநில

அரசால் வழங்கப்பட வேண்டும். பிரதம மந்திரி கிராம சாலைகளின் பராமரிப்பு ஒன்றிய அரசால் அறிமுகம் செய்யப்பட்ட இமார்க் (eMARG) எனப்படும் தனிப்பட்ட இணைய முகப்பின் மூலம் கண்காணிக்கப்படுகிறது. மேலும் 5 ஆண்டுகால தொடர் பராமரிப்பு முடிவுற்ற பிறகு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஊரகச் சாலைகள், மாநில அரசின் இதர திட்டங்களின் கீழ் காலமுறை பராமரிப்பு செய்யப்படுகிறது.

**மாற்று தொழில் நுட்பங்கள்**

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ், மாற்று தொழில்நுட்பங்களை கொண்டு சாலைகளை மேம்பாடு செய்திட விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. இந்திய சாலை கட்டமைப்பு செயல் விதிகளின் கீழ் (IRC Codes) கொண்டு வரப்பட்டுள்ள மாற்றுப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டு குறைந்தது 10% பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில், மண் பலப்படுத்துதல் (Soil Stabilization), நெகிழிச் சாலைகள் (Plastic Roads), குளிர் கலவை (Cold Mix), நிலக்கரி சாம்பல் (Fly Ash), உருளை கொண்டு கனப்படுத்தப்பட்ட சிமெண்ட் சாலைகள் (Roller Compacted Cement Concrete), சிறு கட்டங்களாக நிரப்பப்பட்ட கான்கிரீட் சாலைகள்

(Cell Filled Concrete) போன்றவை அடங்கும். இதே போன்று, 5% பணிகள் இந்திய சாலைகள் கட்டமைப்பின் அங்கீகாரம் மற்றும் காப்புரிமை பெற்ற தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாலைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இவற்றில் பெரும்பாலும் வணிக சமநிலைப்படுத்தும் இரசாயனங்களை கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. இந்த மாற்று தொழில்நுட்பங்கள், வழக்கமான தொழில்நுட்பத்துடன் செயல்படுத்தப்படும் சாலைகளில் பயன்படுத்தப்படும் பொருட்களின் அளவை குறைப்பதன் மூலம் கரிம அடிச்சுவட்டின் அளவை குறைத்தல் உட்பட பல்வேறு நன்மைகளை வழங்குகிறது.

### 4.7 தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)

"தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" 2014 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டு, மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார வசதிகள் அனைவருக்கும் முழுமையாக 2019 – ஆம் ஆண்டுக்குள் சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு இது தொடர்பான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வியக்கம் தற்போது பகுதி II ஆக நீட்டிக்கப்பட்டு திறந்த வெளியில் மலம்

கழித்தலற்ற நிலையின் கூடுதல் நடவடிக்கைகளான எந்தவொரு குடும்பமும் விடுபடாமல் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல், மற்றும் ஊரகப் பகுதிகளில் சுகாதார நிலையினை மேம்படுத்திட திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 4.7.1 திட்டத்தின் நோக்கங்கள்

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டம் II – ன் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்தல் – ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து குடும்பங்கள் மற்றும் நிறுவனம்/பொது இடங்களில் பாதுகாப்பான சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் மக்களிடையே தொடர்ச்சியான நேரடி தகவல் பரிமாற்றின் மூலம் மன மாற்றத்தினை கொண்டு வருவதை உறுதிசெய்தல்.
2. திடக் கழிவு மேலாண்மை – போதுமான திடக் கழிவு மேலாண்மை உள்கட்டமைப்புகளை உருவாக்கி குப்பைகளை சேகரித்தல், குப்பைகள் தரம் பிரித்தல், மக்கும் குப்பைகளை மறுசுழற்சி செய்தல், மக்காத குப்பைகள் மற்றும் நெகிழி

கழிவுகளை கையாளுதல் உள்ளிட்ட அனைத்திலும், தனித் தனி குடும்பங்கள் மற்றும் நிறுவனங்களின் பங்கேற்புடன் திறம்பட திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை நிர்வகித்தல்.

3. திரவக் கழிவு மேலாண்மை – திரவக் கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு நீர் மேலாண்மை பணிகளான தனி நபர்/சமுதாய உறிஞ்சுக் குழிகள் அமைத்தல், கழிவு நீர் கால்வாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளுதல்.
4. தூய்மையான கிராமத் தோற்றம் – ஊரகப் பகுதிகளிலுள்ள வீடுகளின் அருகில் மற்றும் பொது இடங்களில் குப்பைகள் சேருவதை குறைத்தல், தண்ணீர் தேங்குதலை தடுத்தல் மற்றும் நெகிழி கழிவுகள் சேராமல் தடுத்தல் போன்றவற்றை உறுதி செய்வதன் மூலம் தூய்மையான கிராமத் தோற்றத்தினை உருவாக்கிட வழி வகை செய்யப்படும்.

### 4.7.2 தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) – திட்டத்தின் கூறுகள்

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

ஆகியவை தூய்மை பாரத இயக்கத் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும். தூய்மை பாரத இயக்கத் திட்டம் பகுதி II–ன் செயல்பாட்டு வழிகாட்டுதல்களின்படி, தனிநபர் இல்லக் கழிப்பறைகள் அமைத்தல் கூறு தவிர ஏனைய கூறுகள் 15வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்துப்படுகிறது.

**(அ) தனி நபர் இல்லக் கழிப்பறை**

அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். முழுமையாக முடிக்கப்பட்ட தனி நபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். கண்டறியப்பட்ட தகுதி வாய்ந்த குடும்பத்திற்கு தனி நபர் இல்ல கழிப்பறை கட்ட ரூ. 12000/– ஊக்க நிதியாக வழுங்கப்படுகிறது.

**(ஆ) சமூக சுகாதார வளாகங்கள்**

திறந்த வெளி மலம் கழித்தலற்ற ஊராட்சி என்ற நிலையினை தக்கவைக்க கிராமங்களுக்கு வந்து செல்லும் மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக, குறைந்த பட்சம் ஒரு சமுதாய சுகாதார

வளாகம் இருத்தல் அவசியமானதாகும். ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியாக உள்ள சுகாதார வளாகங்களில், போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள், கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகிறது.

### (இ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு முக்கியக் கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) பகுதி II –ன் கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு கிராம ஊராட்சியின் மொத்த தனி நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.மேலும் அனைத்துப் பணிகளும் 15வது நிதிக் குழு மானியம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்துப்படுகிறது.

## 4.8. "ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன்" இயக்கம்

கிராமத் தொகுப்புகளை நகர்ப்புறங்களுக்கு இணையான வளர்ச்சி உடையதாக ஏற்படுத்த "**ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் இயக்கம்**" ஒன்றிய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய "**ரூர்பன் தொகுப்பினை**" உருவாக்குவதாகும்.

[

### 4.8.1. ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்

ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் வழிகாட்டுதலின் படி "**ரூர்பன் தொகுப்பு**" என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் 25,000 முதல் 50,000 வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் பத்தாண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி, பத்தாண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு, சுற்றுலா மற்றும் புனித இடங்களின் முக்கியத்துவம் மற்றும் போக்குவரத்து வழித்தட அருகாமை போன்ற காரணிகளின்

அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு முன்னுரிமை வரிசைப்படி 50 வட்டாரங்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்த முன்னுரிமை வரிசைப்படி பின்வரும் காரணிகளின் அடிப்படையில் ரூர்பன் திட்ட செயலாக்கத்திற்கான மாவட்டம் மற்றும் கிராம தொகுப்புகள் மாநில அரசால் தேர்வு செய்யப்படுகின்றது.

| காரணிகள் | முக்கியத்துவம் |
|---|---|
| • 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி<br>• நிலங்களின் மதிப்பு உயர்வு<br>• 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு<br>• மேல்நிலைப் பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம் | 80 சதவீதம் |
| • பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின்கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம்.<br>• தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் செயல்பாடு | 20 சதவீதம் |

தமிழ் நாட்டிற்கு மூன்று கட்டங்களாக 11 தொகுப்புகள் (Cluster) ஒன்றிய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒரு கூடுதல் தொகுப்பு ஏப்ரல் 2021-இல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி மொத்தம் 12 தொகுப்புகள் தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் ஒன்றிய அரசால் 2023 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 4.8.2. நிதி செயல்பாடு

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதி, மாநில மற்றும் ஒன்றிய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட 'இடைநிரவல் நிரப்பு நிதியினை' (Critical Gap Fund) ஒன்றிய அரசு வழங்குகிறது. 'இடைநிரவல் நிரப்புநிதி' திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்பிற்கும் வழங்கப்படுகிறது.

ஷியாம பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் திட்டத்திற்கான 'இடைநிரவல் நிரப்புநிதி' பகிர்வானது ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஒன்றிய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் 'இடைநிரவல் நிரப்பு நிதியின்' மூலம் பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப்பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவகழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெருவிளக்கு, சாலை வசதி, போக்குவரத்து,

சமையல் எரிவாயு இணைப்பு, கணினி எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தின் திட்ட செயல்பாடுகளைக் கண்காணிக்க ரூர்பன்சாஃப்ட் (RurbanSoft) என்ற இணையதள மென்பொருள் ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டம் (ICAP), விரிவான செயல்திட்ட அறிக்கைகள் (DPRs) மற்றும் மாதாந்திர முன்னேற்ற அறிக்கை (MPRs) ஆகியன ரூர்பன்சாஃப்ட் இணையதளத்தில் பதியப்படுகின்றன. ரூர்பன்சாஃப்ட்–இல் பொதுநிதி மேலாண்மை அமைப்பின் (PFMS) செலவினத் தொகுப்பு முறையைப் பயன்படுத்தி நிதிச் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 4.9. புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டம் (NNBOMP)

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டமான, புதிய தேசிய கரிமவாயு மற்றும் உயிர் உர மேலாண்மைத் திட்டத்தின் நோக்கமானது, ஊரகப் பகுதிகளில் இயற்கைக் கழிவுகளைத் திறம்பட பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்வதே ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசு வகுத்துள்ள முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு –

I. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளாக உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

II. ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

III. கிராமப்புறங்களில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

IV. மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் / அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல் / உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

V. திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு

சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கு 100 விழுக்காடு நிதியளிக்கிறது.

## மானியக் கூறுகள் விவரம்

| வ.எண் | பிரிவுகள் | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்கள் (NNBOMP) அமைப்பதற்கான மானிய விவரம் (ரூபாயில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1 கன அடி | 2–6 கனஅடி | 8–10 கன அடி | 15 கனஅடி | 20–25 கன அடி |
| 1. | பொது பிரிவு | 7,500 | 12,000 | 16,000 | 20,000 | 25,000 |
| 2. | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | 10,000 | 13,000 | 18,000 | 21,000 | 28,000 |
| 3. | கால்நடை கழிவுகள் மற்றும் தனிநபர் வீடுகளில் உள்ள கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம் – ரூ. 1600 /– | | | | இல்லை | இல்லை |
| 4. | பணி கட்டணம் (Turn key Cost) | ஒரு கலனுக்கு ரூ. 2,500/– வீதம் | | | | |

இத்திட்டத்திற்கான 2021 –22 ஆம் ஆண்டு செயல் இலக்கு ஒன்றிய அரசினால் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

# 5. ஊரக வளர்ச்சித் துறையின் பணியமைப்பு

## 5.1. அரசிதழ் பதிவு பெற்ற பணியமைப்பு

மாநில மற்றும் ஒன்றிய அரசு நிதி மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பலமடங்கு அதிகரிக்கப்பட்டு, கிராம பகுதிகளில் அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்குதல், சுகாதாரம், வீட்டு வசதி, வாழ்வாதாரம் மற்றும் கிராம ஊராட்சிகள் நிர்வாகம் உள்ளிட்ட பணிகளை செயல்படுத்தும் முக்கிய துறையாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை விளங்குகிறது. மேற்கண்ட பணிகளை முறையாக செயல்படுத்திடவும், திட்டமிடவும், கண்காணிக்கவும் மாநில மற்றும் மாவட்ட அளவில், அலுவலர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை 5.1**

**வகைவாரியான பணியாளர்கள் விபரம்**

**அரசிதழ் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 22 | ரூ..123400–216300 (நிலை 29) |
| 2. | இணை இயக்குநர் | 97 | ரூ.61900–196700 (நிலை 26) |
| 3. | உதவி இயக்குநர் | 438 | ரூ.56100–177500 (நிலை 22) |

| | | | |
|---|---|---|---|
| 4. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1117 | ரூ.37700–119500 (நிலை 20) |
| | **மொத்தம்** | **1674** | |

- கூடுதல் இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 5 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இணை இயக்குநர் நிலையில், இதர துறைகளில் மாற்றுப்பணியில் 5 அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.2. பொறியியல் பணியமைப்பு

கிராம பகுதிகளில் ஊரக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான தொழில்நுட்ப அம்சங்களை தொழில்நுட்ப அலுவலர்களை கொண்ட பொறியியல் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**அட்டவணை 5.2.**

**வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் | 2 | ரூ.125200–219800 (நிலை 31) |
| 2. | கண்காணிப்பு பொறியாளர் | 3 | ரூ..123100–215900 (நிலை 28) |

| | | | |
|---|---|---|---|
| 3. | செயற்பொறியாளர் | 46 | ரூ.61900–196700 (நிலை 26) |
| 4. | உதவி செயற்பொறியாளர் | 195 | ரூ.59300–187700 (நிலை 25) |
| 5. | உதவிப் பொறியாளர் | 944 | ரூ.56100–177500 (நிலை 22) |
| 6. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 37 | ரூ.37700–119500 (நிலை 20) |
| 7. | இளநிலைப் பொறியாளர் | 314 | ரூ.35900 – 113500 (நிலை 13) |
| 8. | பணிமேற்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2622 | ரூ.35400 – 112400 (நிலை 11) |
| 9. | சாலை ஆய்வாளர் | 1151 | ரூ.19500–62000 (நிலை 8) |
| | **மொத்தம்** | **5314** | |

- இத்துறையில் 46 செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 8 செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.
- இத்துறையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் 195 உதவி செயற்பொறியாளர்கள் உள்ளனர். அவற்றில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 14

உதவி செயற்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

- இத்துறையில் 944 உதவிப் பொறியாளர்களும், 314 இளநிலைப் பொறியாளர்களும், 37 முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், 2,622 பணி மேற்பார்வையாளர்கள்/இளநிலை வரைதொழில் அலுவலர்களும் 1,151 சாலை ஆய்வாளர்கள் உள்ளனர். இத்துறையில் உள்ள 944 உதவிப் பொறியாளர்களில் இதர துறைகளில் மாற்றுப்பணியில் 18 உதவிப்பொறியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்**

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், தமிழ்நாடு மாநில வளர்ச்சி கொள்கை குழு (SDPC), கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, தொழில்முனைவோர் மேம்பாட்டு

நிறுவனம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), சிப்காட் (SIPCOT) பேரூராட்சிகள் இயக்ககம், தேசிய ஊரக நலவாழ்வு சங்கம் (NRHM), தேசிய ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை (NRIDA), தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் (TNCSLS), இந்து சமய அறநிலையத் துறை (HR&CE), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கழகம் போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு இதர துறைகளில் பணிபுரிவதன் மூலம் பெறப்படும் அனுபவங்கள் பொதுமக்களுக்கு சேவை புரிவதில் தங்களது அறிவு மற்றும் திறமையை வளர்த்துக் கொள்ள உறுதுணையாக உள்ளது.

### 5.3. அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் அடிப்படை பணி விதிகள், தமிழ்நாடு அமைச்சுப்பணி மற்றும் ஊரக வளர்ச்சி சார்நிலை பணி விதிகள் மற்றும் அத்தகைய பணியாளர்களின் பணியமைப்பு, அரசிதழ்

பதிவு பெறாத பணியமைப்பு பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனுடன் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பணியாளர்களின் விவரம் அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதிய நிலை ஆகியவை கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.3**

**அரசிதழ் பதிவுபெறா பணியாளர்களின் விபரம்**

| **வ. எண்.** | **பதவியின் பெயர்** | **அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை** | **ஊதிய நிலை** |
|---|---|---|---|
| | | **அரசுப் பணியாளர்கள்** | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3977 | ரூ. 36900–135100 |
| 2 | உதவியாளர் | 5668 | ரூ.20600–75900 |
| 3 | இளநிலை உதவியாளர் | 3194 | ரூ.19500–71900 |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 198 | ரூ.20600–75900 |
| 5 | தட்டச்சர் | 1073 | ரூ.19500–71900 |
| 6 | ஓட்டுநர் | 935 | ரூ.19500–71900 |

| | | | |
|---|---|---|---|
| 7 | பதிவுரு எழுத்தர் | 152 | ரூ.15900–58500 |
| 8 | அலுவலக உதவியாளர் | 709 | ரூ.15700–58100 |
| 9 | இரவுக் காவலர் | 134 | ரூ.15700–58100 |
| 10 | மசால்ஜி | 14 | ரூ.15700–58100 |
| **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | | |
| **அ) ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஓட்டுநர் | 776 | ரூ.19500–71900 |
| 2 | பதிவுரு எழுத்தர் | 390 | ரூ.15900–58500 |
| 3 | அலுவலக உதவியாளர் | 1533 | ரூ.15700–58100 |
| 4 | இரவுக் காவலர் | 380 | ரூ.15700–58100 |
| 5 | மசால்ஜி | 9 | ரூ.15700–58100 |
| **ஆ) கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12525 | ரூ.15900–58500 |
| 2 | தூய்மை பணியாளர் | 26404 | ரூ.4100–12500 |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 40419 | ரூ.4,000/– தொகுப்பு ஊதியம் |

## 5.4 புதிய மாவட்டத்திற்கு பணியிடங்கள் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிய பொறியியல் உபகோட்டம் மற்றும் பணியிடங்கள் உருவாக்கம்

நாகப்பட்டினம் மாவட்டத்தினை இரண்டாகப் பிரித்து புதியதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.4**

**புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திற்கு உருவாக்கப்பட்ட பணியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 1 | இணை இயக்குநர் | 2 | ரூ. 61900–228100 |
| 2 | செயற்பொறியாளர் | 1 | ரூ. 61900–196700 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 3 | ரூ. 59300–187700 |
| 4 | உதவி இயக்குநர் (கணக்கு அலுவலர் உட்பட) | 8 | ரூ. 56100–205700 |
| 5 | வட்டார வளர்ச்சி அலுவலர் | 6 | ரூ. 37700–138500 |
| 6 | உதவி பொறியாளர் | 4 | ரூ. 56100–177500 |
| 7 | முதுநிலை வரைவு அலுவலர் | 1 | ரூ. 37700–138500 |
| 8 | துணை வட்டார | 6 | ரூ. 36900–135100 |

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| | வளர்ச்சி அலுவலர் | | |
| 9 | இளநிலை வரைவு அலுவலர் | 4 | ரூ. 35400–130400 |
| 10 | உதவியாளர் | 22 | ரூ.20600–75900 |
| 11 | இளநிலை உதவியாளர் | 14 | ரூ.19500–71900 |
| 12 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 4 | ரூ.20600–75900 |
| 13 | தட்டச்சர் | 7 | ரூ.19500–71900 |
| 14 | ஓட்டுநர் | 9 | ரூ.19500–71900 |
| 15 | பதிவுரு எழுத்தர் | 4 | ரூ.15900–58500 |
| 16 | அலுவலக உதவியாளர் | 13 | ரூ.15700–58100 |
| 17 | இரவுக் காவலர் | 2 | ரூ.15700–58100 |
| | **கூடுதல்** | **110** | |

மேலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேதாரண்யத்தினை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக ஒரு பொறியியல் உபகோட்டம் பின்வரும் பணியிடங்களுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை 5.5
## நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வேதாரண்யம் உபகோட்டத்திற்கு உருவாக்கப்பட்ட பணியிடங்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய நிலை |
|---|---|---|---|
| 1 | உதவி செயற்பொறியாளர் | 1 | ரூ. 59300–187700 |
| 2 | உதவி பொறியாளர் | 1 | ரூ.56100–177500 |
| 3 | இளநிலை வரைவு அலுவலர் | 1 | ரூ.35400–130400 |
| 4 | உதவியாளர் | 1 | ரூ.20600–75900 |
| 5 | இளநிலை உதவியாளர் | 1 | ரூ.19500–71900 |
| 6 | ஓட்டுநர் | 1 | ரூ.19500–71900 |
| 7 | அலுவலக உதவியாளர் | 2 | ரூ.15700–58100 |
| 8 | இரவுக் காவலர் | 1 | ரூ.15700–58100 |
| | **கூடுதல்** | **9** | |

இப்பணியிடங்கள் உருவாக்கத்தின் மூலம் மக்கள் நலத்திட்டங்களை இம்மாவட்டங்களில் சிறப்பாக செயல்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

# 6. வாழ்வாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்

## 6. வாழ்வாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்

வளர்ச்சிப் பாதையை உள்ளடக்கிய திட்டங்களே பொருளாதார வளர்ச்சியின் வெற்றிக்கு அடிப்படையாகும். ஏழை, எளிய, நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள், முதியோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு அரசின் திட்டங்கள் சென்று அடைவதே வளர்ச்சியின் வெளிப்பாடு ஆகும். இக்குறிக்கோளை நேரடியாகவும் உறுதியாகவும் அடைய இலக்கு மக்கள் வாழ்வாதார செயல்பாடுகளில் ஈடுபடும் போது தான் இதனை முழுமையாகப் பெற முடியும்.

அடிதட்டு மக்களின் வாழ்வாதாரத்தை வழிநடத்தி, ஊக்குவித்து, வாழ்வாதாரத் தொழில்களில் ஈடுபடுத்துவதே அரசாங்கத்தின் முக்கியப் பணியாகும். இம்மகத்தான பணியினை வாழ்வாதார செயல்பாடுகளுக்கான ஊக்குவிப்பை பெரிய அளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் செயல்படுத்துகிறது.

அ. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

i. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ii. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

iii. தேசிய ஊரக பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்

iv. தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா

ஆ. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

இ. தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்

ஒவ்வொரு ஏழை, எளிய குடும்பத்தில் இரண்டு அல்லது மூன்று தொழில்களை மேம்படுத்துவதே இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இதனை செயல்படுத்துவதற்கு ஏழைக் குடும்ப உறுப்பினர்களுக்கு திறன் பயிற்சி, தொழில் முனைவோருக்கான பயிற்சி, பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழில்களில் பயிற்சி அளித்து, அவர்களை இத்தொழில்களில் ஈடுபடுத்தி நிலையான வருமானத்தை உருவாக்குவதை உறுதி செய்து, வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேல் கொண்டு வருவதே வாழ்வாதார திட்டத்தின் நோக்கமாகும்.

## 6.1. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் தன்னம்பிக்கை மூலம் மகளிரின் நிலையை மேம்படுத்தும் நோக்கில் 1983 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு

வறுமை ஒழிப்புத் திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கி, வலுவான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, நிதி இணைப்புகளையும் தொழில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தி, பெண்களின் ஆற்றல் மேம்பாட்டை அதிகரித்து, சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பின்வரும் நான்கு முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

i. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:**
   ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

ii. **தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்:**
   நகர்ப்புற ஏழை மக்களுக்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

iii. **தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்:**
   தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணையாக ஏழைகளின் வாழ்வு மேம்படும் வகையில், தேசிய

ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டமானது 2019 ஆம் ஆண்டு முதல் 5 மாவட்டங்களில் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

iv. **தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU–GKY):**

இத்திட்டமானது ஊரக ஏழை இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து, வேலைவாய்ப்பினை வழங்கும் வகையில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதாசாரத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது.

**6.1.1. நிறுவன ஏற்பாடுகள்**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு அரசு முதன்மைச் செயலர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஊரகம் மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின் செயல் இயக்குநர், கருப்பொருள் வல்லுநர்களான கூடுதல் இயக்குநர்கள்,

இணை இயக்குநர்கள் மற்றும் இதர அலுவலர்களுடன் மாநில அளவில் முன்னின்று வெற்றிகரமாக செயல்படுத்துகிறார்கள்.

மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்டங்களில் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவர்கள் உதவியுடன் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வட்டார மேலாண்மைப் பிரிவானது ஊரகப் பகுதிகளில் திட்டத்தைச் செயல்படுத்திட, கருப்பொருள் வல்லுநர்களான வட்டார இயக்க மேலாளர்கள் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உதவியாக உள்ளனர்.

நகர்ப்புறங்களில், 3,000 ஏழைக் குடும்பங்களை உள்ளடக்கிய பகுதிகளுக்கு ஒரு சமுதாய ஒருங்கிணைப்பாளர் நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தினை கண்காணித்து செயல்படுத்துவார்.

### 6.2. மகளிர் திட்டம்

இந்தியாவிலேயே முதல் முறையாக முத்தமிழறிஞர் டாக்டர். மு. கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் தமிழக அரசால் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தர்மபுரி மாவட்டத்தில் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி

நிதி (IFAD) உதவியுடன் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களை அமைக்கத் தொடங்கியது. பின்பு இத்திட்டம் சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்பான செயல்பாடுகளின் காரணமாக தமிழ்நாடு அரசு அனைத்து மாவட்டங்களுக்கும் மகளிர் திட்டம் என்ற பெயரில் மகளிரின் முன்னேற்றத்திற்காக, இத்திட்டத்தைப் படிப்படியாக செயல்படுத்தியது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழுக்களை, நிதி மற்றும் சமூக வழிகாட்டுதல் மூலம் சிறப்பாச் செயல்பட வழிவகை செய்கிறது. இதனால் மகளிர் திட்டம் தமிழ்நாட்டில் ஒரு மாபெரும் இயக்கமாக உருப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசின் தொலைநோக்குப் பார்வையால் 1989 ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தில் முதல் முறையாகத் தொடங்கப்பட்ட இத்திட்டம் பிற மாநிலங்களால் பின்பற்றப்பட்டு வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக விளங்குகிறது.

சமூக, பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கு மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும்

தொழில் தொடங்கத் தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தி சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்த இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்படும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு, முறையான பயிற்சி மற்றும் கூட்டமைப்புகள் மூலம் வங்கிகளுடன் நிதி இணைப்பு ஏற்படுத்தி, வருமானம் ஈட்டும் தொழில்களில் ஈடுபட்டு சமூக, பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளனர். சமீபகாலமாக நலிவுற்றோரை ஒருங்கிணைத்து சிறப்புக் குழு ஏற்படுத்தவும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களைக் கொண்டும் குழுக்கள் அமைக்கப்படுகிறன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் பிற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் யாவும் மகளிர் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட வடிவங்களேயாகும்.

### 6.2.1. சுய உதவிக் குழுக்கள் – ஒற்றுமையே பலம்

ஒற்றுமை பல தடைகளைத் தாண்டி இலக்கினை அடைவதற்கு உதவுகிறது. இதன் அடிப்படையில் ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தையும், அவர்களுக்குள்ளேயே உள்கடன் வழங்குதலையும், ஒன்று கூடி ஒற்றுமையாகவும் மற்றும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் பழக்கத்தை ஊக்கப்படுத்துவதும் சுய உதவிக் குழுக்களின் நோக்கங்களாகும். மகளிரின் பொருளாதார மற்றும் சமுதாய மேம்பாட்டினை உறுதிசெய்யும் பொருட்டு சுய உதவிக் குழுக்கள் முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடனைத் திரும்பச் செலுத்துதல், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல் ஆகிய பஞ்ச சூத்திரங்களைக் கடைப்பிடித்து சிறப்புடன் செயல்பட பயிற்சி வழங்கப்படுகிறது.

# அட்டவணை 6.1
## சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 7.22 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 106.68 இலட்சம் |
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.80 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 70.97 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 2.42 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 35.71 இலட்சம் |
| 4 | சுய உதவிக் குழுக்களின் மொத்த சேமிப்பு | 8,921 கோடி ரூபாய் |
| 5 | **சுழல் நிதி குழுவிற்கு ரூபாய் @ 15.000/-** | |
| | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 6.33 இலட்சம் |
| | சுழல் நிதி தொகை | 664.09 கோடி ரூபாய் |
| 6 | **சமுதாய முதலீட்டு நிதி குழுவிற்கு ரூபாய் @ 50,000/-** | |
| | சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,01,211 |
| | சமுதாய முதலீட்டு நிதி தொகை | 492.57 கோடி ரூபாய் |
| 7 | **நலிவுநிலைக் குறைப்பு நிதி நபருக்கு ரூபாய் @ 10,000 – 25,000/- வரை** | |
| | தனிநபர்களின் எண்ணிக்கை | 1,53,081 |
| | நலிவுநிலைக் குறைப்பு நிதி தொகை | 157.80 கோடி ரூபாய் |
| 8 | சுய உதவிக் குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு | 96,419 கோடி ரூபாய் |
| 9 | **சமுதாய சார்ந்த அமைப்புகள் – ஊரகம்** | |
| | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 12,524 |
| | வட்டார அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 386 |

| | | |
|---|---|---|
| 10 | **சமுதாய சார்ந்த அமைப்புகள் – நகர்ப்புறம்** | |
| | பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 1,644 |
| | நகர அளவிலான கூட்டமைப்புகளின் எண்ணிக்கை | 300 |

## 6.3. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் 2012–13 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்றோரே இலக்கு மக்கள் ஆவர். சிறப்பு சுய உதவிக் குழுக்கள் மற்றும் முதியோர் சுய உதவிக் குழுக்களில் இருபாலரும் உறுப்பினார்களாகச் சேர்க்கப்படுவர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு, ஒரு இலட்சத்திற்கும் அதிகமான சுய உதவிக் குழுக்களில் 12 இலட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் 809.79 கோடி

ரூபாய் செலவில் 2021 – 22 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

**6.3.1. முக்கிய அம்சங்கள்:**

- மிகவும் ஏழைகள், ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்தில் சிறப்பு கவனம் செலுத்துதல்.
- விடுபட்ட ஏழை மக்களைக் கண்டறிந்து அவர்களை சுய உதவிக் குழுக்களில் ஒருங்கிணைத்தல்.
- ஊரகப் பகுதிகளில் ஏழை மக்களின் வளர்ச்சிக்காக சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி வலுப்படுத்துதல்.
- சமூக மேம்பாட்டிற்கான திறன் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.
- சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்தும் வசதியினை எளிதாக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு, குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.
- ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்

கூடிய திறன்மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.

- பல்வேறு அரசுத்துறைகளின் நலத்திட்டங்களின் நடவடிக்கைகளுடன் ஒருங்கிணைந்து அவர்களின் நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை மேம்படுத்தி திறம்பட செயல்பட வழிவகை செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 6.3.2. செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ்நாட்டின் 37 மாவட்டங்களில் 388 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அட்டவணை 6.2

## தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் தற்போது செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்


| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சி கள் |
|---|---|---|---|---|
| 1 | முதற்கட்டம் | 20 | 60 | 2,250 |
| 2 | இரண்டாம் கட்டம் | 32 | 110 | 3,391 |
| 3 | மூன்றாம் கட்டம் | 27 | 98 | 2,472 |
| 4 | நான்காம் கட்டம் (புதுவாழ்வுத் திட்ட வட்டாரங்கள்) | 32 | 120 | 4,174 |
| **கூட்டுத்தொகை** | | **37** | **388** | **12,287** |
| 5 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD) | (12) | (60) | 238 |
| **மொத்தம்** | | **37** | **388** | **12,525** |

### 6.3.3. உயர்நிலைக் குழு அமைப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளைக் கண்காணித்தல் போன்ற பணிகளுக்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின்

தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு முதன்மைச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், தலைமைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தினைச் செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

## 6.3.4. திட்டச் செயல்பாடுகளின் வரிசை



### 6.3.5. திட்ட செயல்பாடுகள்

அனைத்து ஊராட்சியிலும் திட்டத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு செயல்படுத்தப்படுகின்றன.

**விழிப்புணர்வு முகாம்**

கலை நிகழ்ச்சிகள், தெரு நாடகங்கள், பேரணி, ரத ஊர்வலம் போன்றவற்றின் மூலமும் சுவர் ஓவியங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் கிராமங்களிலுள்ள மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

**சுய உதவிக் குழுக்கள் அடிப்படை விவரக் கணக்கெடுப்பு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயலாற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சுய உதவிக் குழுக்களின் புள்ளி விவரக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ள குழுக்கள், செயல்படாத மற்றும் கலைந்த குழுக்கள் போன்றன கண்டறியப்பட்டுள்ளன. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களைத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலமாக, மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**மக்கள் நிலை ஆய்வு**

2013–14 முதல் 2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டங்களாக அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள மிகவும் ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரைக் கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய மக்கள் பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமூக வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு குழுக்களில் சரிபார்க்கும் முறை போன்ற வழிமுறைகளைப் பின்பற்றி மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வின் மூலம் தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து குக்கிராமங்களிலும் உள்ள முக்கியமான இடங்களில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு, சேர்த்தல் மற்றும் விடுதல் ஏதேனும் இருப்பின், அவற்றையும் பெற்று,

இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் வைத்து ஒப்புதல் பெறப்பட்டது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் மூன்று கட்ட கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு இப்பட்டியலே அடிப்படையாக உள்ளது. தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மேற்கொண்ட மக்கள் நிலை ஆய்வு இத்திட்டத்தில் நான்காம் கட்ட செயல்பாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

**கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மிகவும் ஏழைகள், ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் போன்ற இலக்கு மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு சங்கமாகும். 11 முதல் 19 உறுப்பினர்களை கொண்ட இச்சங்கம், இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களுக்குத் தனிநபர் கடன் வழங்கி அவர்களை வறுமையில் இருந்து மீட்கவும், அவர்களின் நலிவுநிலையைக் குறைக்கவும் உதவுகின்றது.

இதுவரை **12,734** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (பழங்குடியினருக்கான **472** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட) திட்ட செயலாக்கப் பகுதிகளான **388** வட்டாரங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

**சமூகத் தணிக்கை குழு ஏற்படுத்துதல்**

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும், சமூகத் தணிக்கை குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் **5** முதல் **7** உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகளை இக்குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கையாக சமர்ப்பிக்கின்றது.

**புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்**

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை, மிகவும் ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின் உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தக பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது.

சுய உதவிக் குழுக்கள் முறையான கூட்டம் நடத்துதல், சேமித்தல், உள்கடன் வழங்குதல், கடனைத் திரும்பச் செலுத்துதல், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல் ஆகிய பஞ்சசூத்திரங்களை கடைப்பிடித்து, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பல்வேறு உதவிகளைப் பெற்று, பொருளாதார முன்னேற்றம் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது. 2021-22 ஆம் ஆண்டில் 12,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களை தரமதிப்பீடு செய்து, சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் நலிவுநிலைக் குறைப்பு நிதி போன்ற நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு**

கிராம அளவிலுள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் இணைத்து, அவர்களுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து வழங்குவதற்கும் மற்றும் வங்கிக்கடன் பெறுவதை எளிதாக்குவதற்கும் ஏதுவாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975-ன் கீழ் பதிவு செய்ய அரசு உத்தரவிட்டது. இருப்பினும், அரசாணை நிலை எண்.111 வணிக வரிகள் மற்றும் பதிவு (எம் 1)

துறை, நாள் 17.11.2008ல் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975 பிரிவு 25 மற்றும் 42ன் படி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வருவாய் ஈட்டும் தொழிலை மேற்கொண்டு அவற்றிலிருந்து பயன்கள் அடையும் வகையில் ஒரு நிறுவன அமைப்பாக உருவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த அமைப்பானது, ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம மக்களுக்கும் இடையே மிக முக்கியமான இணைப்புப் பாலமாக செயல்பட்டு வருகிறது.

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் கடமைகள் மற்றும் பொறுப்புகள்**

- மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட தகுதிவாய்ந்த மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்.
- சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார உதவிகளைப் பெற்றுத் தருதல்.
- தகவல்களைப் பரவலாக்குதல் மூலம் சுய உதவிக் குழுக்களை வலிமைப்படுத்துதல் மற்றும் வழிநடத்துதல்.
- சுய உதவிக் குழுக்களின் கணக்கு மற்றும் பதிவேடுகளை பராமரித்தல், தணிக்கை செய்தல்,

குழுக்களைத் தரம் பிரித்தல், கடன் மதிப்பீட்டிற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் வங்கிகளிலிருந்து நேரிடையாக கடன் பெற்று, சுய உதவிக் குழுக்களுக்குக் குறைந்த வட்டியிலான கடன் அளிப்பதன் மூலம் இடைநிலை நிதி நிறுவனமாகச் செயல்படுதல்.

- அரசின் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து மகளிரின் வளர்ச்சி மற்றும் ஆற்றல் மேம்பாடு தொடர்பான சமூகப் பிரச்சனைகள், சுகாதாரம், ஊட்டச்சத்து, மற்றும் பாலின பிரச்சினைகள் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.

**துணைக் குழுக்கள்**

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, சமுதாயத்திற்காகவும் மற்றும் அவர்களின் உறுப்பினர்களின் நலனுக்காகவும் பல்வேறு பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டு, கீழ்க்காணும் நான்கு வகையான துணைக் குழுக்களை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

- குழு அமைத்தல் மற்றும் வலுப்படுத்துதல்.
- கடன் இணைப்பு மற்றும் கடன் கண்காணிப்பு.
- வாழ்வாதார மேம்பாடு.
- சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

மொத்தம் 388 வட்டாரங்களில், 12,524 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு வட்டாரத்திலுள்ள பலாமூர் ஊராட்சியை தவிர) அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.3**

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் விபரம்**

| வ. எண் | திட்டம் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 388 | 12,287 | 12,286 |
| 2 | சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டம் (IFAD) | – | 238 | 238 |
| **மொத்தம்** | | **388** | **12,525** | **12,524** |

## வட்டார அளவிலான கூட்டமைப்பு

தமிழ்நாட்டில், 386 வட்டாரங்களில் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் (தருமபுரி மாவட்டத்தில் ஏரியூர் மற்றும் கடத்தூர் வட்டாரங்கள் தவிர) அமைக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டுள்ளன. வட்டாரத்தில் உள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை

முதன்மையாகக் கொண்டு வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

**வட்டார அளவிலான கூட்டமைப்பின் பணிகள்**

அ. வங்கிக்கடன் இணைப்பைப் பெறுவதில் சுய உதவிக் குழுக்களின் திறனை மேம்பாடு அடையச் செய்தல்.

ஆ. வங்கிக்கடனை, குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்துவதை உறுதி செய்தல்.

இ. நிலையான வருமானம் தரத்தக்க இலாபகரமான வாழ்வாதாரத் தொழில் நடவடிக்கைகளைக் கண்டறிதல்.

ஈ. சமூக உள்ளாக்கத்தை உறுதி செய்தல் மற்றும் பாலின சமத்துவம், மகளிருக்கான பல்வேறு அரசு நலத் திட்டங்களில் உள்ள உரிமைகள் மற்றும் உதவிகளைப் பெற வழிவகை செய்தல்.

உ. திட்டம் குறித்த பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைச் சமுதாய வளப் பயிற்றுநர் மூலம் அளிக்கும் பயிற்சி நிறுவனமாக வட்டார அளவில் செயல்படுதல்.

**சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி**

மூன்று மாதம் நிறைவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக

குழு ஒன்றுக்கு ரூ.15,000/- வீதம் வழங்கப்படுகிறது. இந்த சுழல் நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

**ஆ. சமுதாய முதலீட்டு நிதி**

சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதாரச் செயல்பாடுகளுக்காக இத்திட்டத்தின் கீழ், கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதியாகும். சமுதாய முதலீட்டு நிதியானது, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டு, அவைகளின் மூலம் தகுதியான சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.50,000/- முதல் ரூ.1,10,000/- வீதம் ஆண்டிற்கு 9 சதவீத வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. சமுதாய முதலீட்டு நிதி வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் குறைந்தபட்சம் 50 சதவீதம் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக விடுவிக்கப்படுகிறது. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பானது, 100 சதவீதம் கடனைத் திருப்பவும், முறையான பயன்பாடு மற்றும்

சமுதாய முதலீட்டு நிதியினை சுழற்சி முறையில் அனைத்துக் குழுக்களும் பெறுவதை உறுதிசெய்யும் பணியினை மேற்கொள்ளும்.

### இ. நலிவுநிலைக் குறைப்பு நிதி

மக்கள் நிலை ஆய்வின் போது மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோர் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு நலிவுற்றோர் மேம்பாட்டு நிதியாக ரூ.10,000/– முதல் ரூ.25,000/– வரை தனிநபர் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. நலிவுற்றோருக்கான நிதியானது மாற்றுத்திறனாளிகளின் உணவுப் பாதுகாப்புக்கும், வாழ்வாதார செயல்பாடுகளுக்கும், உடல் நலக்குறைவு அல்லது எதிர்பாரா மருத்துவ செலவிற்கும் மற்றும் இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டோரின் மறுவாழ்விற்கும் பயன்படுத்தப்படுகிறது. நலிவுநிலைக் குறைப்பு நிதியானது. கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் தனிநபர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 6.3.6. திறன் மேம்பாடு

#### பணியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பணியாளர்களுக்கு அவசியத் தேவையாக வாழ்வாதார இயக்கம் குறித்து பல்வேறு கூறுகளில் கீழ்க்கண்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- தூண்டல் பயிற்சி–I (நிறுவனக் கட்டமைப்பு)

- தூண்டல் பயிற்சி–II
- இவ்வியக்கத்தின் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளை அறிந்து கொள்ள பணியாளர்களுக்கு திட்ட குறித்த கருப்பொருள் சார்ந்த பயிற்சி வழங்குதல்.

**சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கான திறன் பயிற்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கு சமுதாயம் சார்ந்த அமைப்புகளே அடிப்படையாக விளங்குகின்றன. பொதுவாக இப்பயிற்சிகளின் முக்கிய நோக்கமாக சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நிர்வாகமும் நிதி மேலாண்மையும் திகழ்கின்றன. ஏழை மக்களின் அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், வட்டார அளவிலான கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையம் (மகமை) போன்றவை தங்கள் உறுப்பினர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு தங்களுக்கு தேவையான பயிற்சிகளை தொடர்ந்து மேற்கொள்கின்றன.

- சுய உதவிக் குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி

- புதிதாக அமைக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயிற்சி
- புதிதாக துவக்கப்பட்ட முதியோர் சுய உதவிக் குழுக்கான அடிப்படை பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கான நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடுகள் விளக்கப் பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்கள் மற்றும் சமூகத் தணிக்கைப் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- வட்டார அளவிலான கூட்டமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் பயிற்சி

**முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்கள்**

எந்த ஒரு சமுதாய வளர்ச்சி திட்டத்திற்கும் சமூக மூலதனம் என்பது ஒரு மிகப்பெரிய அம்சமாகும். சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப திட்டத்தினை உறுதிப்படுத்திட, வளப் பயிற்றுநர்கள் பல்வேறு நிலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அதில்

மிகச்சிறந்த செயல்திறன் படைத்த வளப்பயிற்றுநர்கள் அடையாளம் காணப்பட்டு, முதன்மைப் பயிற்றுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை பயிற்றுநர்கள் பிற வளப்பயிற்றுநர்களுக்குத் திட்டம் சார்ந்த கருப்பொருட்களை விளக்கும் பயிற்சியாளர்களாக செயல்படுகின்றனர். இவர்களிடம் பயிற்சி பெற்ற வளப்பயிற்றுநர்கள் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்குப் பயிற்றுநர்களாக செயல்படுகின்றனர்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட பயிற்றுநர்கள் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் அவர்களின் கருப்பொருள் சார்ந்த பயிற்சிகளை அளிப்பார்கள். இப்பயிற்றுநர்களை உருவாக்கிடும் முனைப்பில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சீரிய முறையில் செயல்பட்டு, திட்டம் சார்ந்த பயிற்சிகள் அனைத்து பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல்வேறு சமுதாய பயிற்றுநர்கள் விபரம் பின்வருமாறு.

- **சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் (CSTs) –** சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர்கள் சுய உதவிக் குழுக்களின் உருவாக்கம் மற்றும் அக்குழுக்களின்

செயல்பாடு குறித்த தொடர் கண்காணிப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திட கண்டறியப்படுகின்றனர். இவர்கள் அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆவர். கிராம அளவில் துடிப்புடன் செயல்படும் சுய உதவிக் குழுவில் இருந்து சிறப்பாக செயல்படும் உறுப்பினர்கள் அடையாளம் காணப்பட்டு, அவ்வுறுப்பினர்கள் தொடர் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு, திறன் மேம்பாடு பெற்று சுய உதவிக் குழுக்களின் கண்காணிப்பு மற்றும் அக்குழுக்களுக்கான தேவை சார்ந்த நிகழ்வுகளில் உதவி புரிகின்றனர். சுய உதவிக் குழுக்களின் சிறப்பான செயல்பாட்டையும், அவர்கள் பஞ்சசூத்திரத்தை கடைப்பிடிப்பதையும் மேற்பார்வையிடுதல் இவர்களின் முக்கிய பணியாகும். இவர்கள் சுமார் 10 முதல் 15 குழுக்களைக் கண்காணித்து வருகின்றனர்.

- **சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர்கள் (CDFs)** – ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் ஒருவர் என்ற முறையில் சமுதாய மாற்றுத் திறனாளிகளுக்கான வழிநடத்துநர் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிகள் வழங்கப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு

மேலாண்மைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள். இவர்கள் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளைக் கண்டறிந்து, நிறுவனம் சார்ந்த தேவையான மறுவாழ்வு பயிற்சிகளை வழங்கி, மாற்றுத் திறனாளிகளுக்கான பல்வேறு அரசுத் துறை சார்ந்த சேவைகளை ஒருங்கிணைத்து, உதவிகள் பெற்றுத் தந்திட வழிவகை செய்வர்.

- **சமுதாய வளப் பயிற்றுநர்கள்–வேலை வாய்ப்பு (CRP–Jobs) –** இளைஞர்களுக்கான பல்வேறு திறன் சார்ந்த பயிற்சிகளை செவ்வனே செயல்படுத்தி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது இளைஞர்களுக்கான திறன் பயிற்சிகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இப்பயிற்சிகளை வழங்குவதற்காக கிராமங்கள் தோறும் இளைஞர்களை திரட்டுவதற்கு சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். இவ்வளப் பயிற்றுநர்கள் கிராம அளவில் தகுதிடைய இளைஞர்களைத் தேர்வு செய்வதோடு அவர்களைப் பற்றிய அடிப்படைத் தகவல்களை திரட்டி, அந்த தகவல்களின் அடிப்படையில் தகுதியான இளைஞர்களை அவர்கள் விருப்பப்படும் தொழில் சார்ந்த பயிற்சி பெற வழிவகை செய்வதோடு

அவர்களின் முன்னேற்றத்தையும் கண்காணிக்கின்றனர்.

**2021-22 ஆம் ஆண்டில் திறன் வளர்ப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்**

- 5,234 புதிய சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர்களுக்கு 2,617 தொகுப்புகளில் (தொகுப்பிற்கு 30 உறுப்பினர்கள்) பயிற்சிகள் வழங்கப்பட்டது.
- 2,820 புதிய முதியோர் சுய உதவிக் குழுக்களுக்கு அடிப்படை பயிற்சி வழங்கப்பட்டது.

**6.3.7. நிதி உள்ளாக்கம் மற்றும் நுண்கடன்**

**சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக்கடன் இணைப்பு**

சுய உதவிக் குழு வங்கிக்கடன் இணைப்புத் திட்டத்தின் மூலம் முறையான வங்கி மற்றும் நிதி சேவைகள் ஏழை, எளிய மக்களைச் சென்றடைந்து அவர்களுக்கு "கடன் பெறும் உரிமை" உள்ளது என்பதை உறுதி செய்துள்ளது. இந்த கடன் பெறும் உரிமை, வங்கிகளைச் சுலபமாக அணுகுதல் மட்டும் அல்லாமல் போதுமான கடன் அளவு, உரிய நேரத்தில்

மற்றும் குறைந்த வட்டி விகிதத்தில் கிடைப்பதை உறுதி செய்கிறது. வங்கிக்கடன் இணைப்பு எண்ணற்ற குடும்பங்கள் கடன் சுமையிலிருந்து மீளவும், வருமானம் ஈட்டக்கூடிய பல்வேறு தொழில்களைத் தொடங்கி நடத்திடவும், வீட்டின் வருமானத்தைப் பெருக்கி குடும்ப சூழ்நிலையை நல்ல முறையில் அமைத்துக் கொள்ளவும் மற்றும் வறுமையின் மீளாச்சுழற்சியிலிருந்து விடுபடவும் உதவிகரமாக உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும் மற்றும் வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டு, பொருளாதாரத் தொழில்களைத் தொடங்கி நடத்திடவும், அதிக அளவு கடன்கள் தொடர்ச்சியாக பெறவும் சுய உதவிக் குழு வங்கிக்கடன் இணைப்புத் திட்டம் வழிவகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வட்டிமானியம் சுய உதவிக் குழுக்களின் கடன் சுமையை மேலும், குறைக்க உதவுவதன் மூலம் நமது மாநிலத்தில் பெண்களுக்கு பொருளாதார அதிகாரம் கிடைக்கப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், அதிகபட்ச வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களைத்

தொடங்கி, குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் குறிக்கோளாகும்,

**வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வங்கிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் போதிய அளவு தொடர்ந்து கடன்களை வழங்கிட வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட ஆறு வங்கிகளுடன் இது வரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**அட்டவணை – 6.4**

| வ. எண் | வங்கியின் பெயர் |
|---|---|
| 1 | ஐ.டி.பி.ஐ. (IDBI Bank) |
| 2 | ஐ.சி,ஐ.சி.ஐ வங்கி (ICICI Bank) |
| 3 | பேங்க் ஆப் பரோடா (BOB) |
| 4 | பாரத ஸ்டேட் வங்கி (SBI) |
| 5 | யூகோ வங்கி (UCO) |
| 6 | தமிழ்நாடு கிராம வங்கி (TGB) |

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கீழ்க்கண்ட முக்கிய கூறுகளை உள்ளடக்கியது**

- மத்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவுறுத்தலின்படி வங்கிக் கிளைகள் சுய உதவிக் குழுக்களுக்கு காலதாமதமின்றி, போதுமான அளவு கடன்கள், தொடர்ந்து மறுகடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்க வேண்டும்.
- பூனாவில் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான இந்திய பயிற்சி நிறுவனம் (Indian Institute of Banking and Finance–IIBF, Pune) மூலம் வங்கி வணிக தொடர்பாளர்களுக்கான (BC–Sakhi) பயிற்சி பெறப்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை வங்கிகள் நேரிடையாகவோ அல்லது வங்கியின் பெரு நிறுவன வணிக தொடர்பாளர்கள் (Corporate BC) மூலமாகவோ நியமிக்க வேண்டும்.
- வங்கிகள், IIBF மூலமாக பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களை, வணிக வசதிகள் வழங்கும் (Business Facilitators) தொடர்பாளர்களாக நியமித்து, வங்கி சார்பாக பொது மக்களிடமிருந்து சேமிப்பு, கடன்

திரட்டுதல் மற்றும் நிலுவை கடன்களை வசூலிக்கும் முகவர்களாக நியமிக்க வேண்டும்.

நடப்பாண்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சுய உதவிக் குழு கடன்களுக்கான ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்**

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் படி சுய உதவிக் குழுக்கள், அவர்களின் தேவையின் அடிப்படையில், தவணைக் கடன்கள் (Term Loan) அல்லது ரொக்கக்கடன் (Cash Credit Limit–CCL) அல்லது இரண்டு வகை கடன்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**தவணைக்கால கடன் (Term Loan)**

வங்கிகள் தவணைக்கடன்: தொகைகளை கீழே குறிப்பிட்டுள்ள அளவுகளின் அடிப்படையில் கடன் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

முதல் தவணை கடன் அளவு :– குழுவின் தொகுப்பு நிதியின் 6 மடங்கு (அ) குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய், இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை.

இரண்டாம் தவணைகடன் அளவு:– குழுவின் தொகுப்பு நிதியின் 8 மடங்கு அல்லது குறைந்தபட்சம் இரண்டு

இலட்சம் ரூபாய் இவை இரண்டில் அதிகம் உள்ள தொகை

மூன்றாம் தவணை கடன் அளவு:– மகளிர் சுய உதவி குழுக்கள் தயாரித்து அளிக்கும் நுண்கடன் திட்டம் மற்றும் கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பரிந்துரையின் அடிப்படையில் குறைந்தபட்சம் ரூபாய் 6 இலட்சம்.

நான்காம் தவணை அதற்கு மேலும் கடன் அளவு:– மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்து அளிக்கும் நுண்கடன் திட்டம் மற்றும் கடந்த கால கடன் திரும்ப செலுத்திய வரலாறு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பரிந்துரையின் அடிப்படையில் ரூபாய் 6 இலட்சத்திற்கு மேல்.

தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மீண்டும் மீண்டும் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்ய வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ரொக்கக்கடன் (Cash Credit Limit–CCL):** ரொக்கக்கடன் திட்டத்தின் கடன் உதவி பெற தகுதி பெற்ற சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் குறைந்தபட்சம் 6.00 இலட்சம் ரூபாய் கடன் தொகையை 3 ஆண்டு காலத்திற்கு கடன் தொகையாக வழங்கிடவும், ஆண்டு வாரியான பணம் எடுக்கும் கடன் அளவு (Drawing Power)

முறையை பின்பற்றவும் வேண்டும் என்று வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**சமுதாய பங்கேற்புடன் கடன் திரும்ப பெறும் குழு (CBRM)**

வங்கிகள், சமுதாயத்தினரை வங்கியின் செயல்பாட்டில் இணைத்துக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும் மற்றும் வங்கிகளுக்கும் உதவிகரமாக இருப்பதற்கும் ஏற்படுத்தப்பட்டதே இக்குழுவாகும்.

வங்கிகள் போதுமான கடன் அளவு கொடுப்பதற்கும், அதனைத் திறம்பட கண்காணிப்பதற்கும், கடன் தவணை தொகைகளை திரும்ப செலுத்துவதையும் மற்றும் வாராக்கடன்களை திரும்ப பெறும் முறைகளை சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் ஒவ்வொரு வங்கிக் கிளைகளிலும் இக்குழு துவக்கப்படுகிறது. இக்குழு, வங்கிக்கடன் இணைப்பு பற்றிய பிரச்சினைகளை மாதந்தோறும் கூட்டங்கள் நடத்தி, ஆராய்ந்து, தீர்வு காணவும், வங்கிக்கடனைச் சமுதாய பங்கேற்புடன் திரும்பப் பெறும் முறைகளைச் செயல்படுத்தும் இந்நடைமுறைகள் 7,019 வங்கிக்கிளைகளில் துவங்கப்பட்டுள்ளது.

**சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம்**

ஏழை எளிய மக்கள் வறுமையிலிருந்து விடுபட நிதி உள்ளாக்கக் குழு அறிக்கையின்படி தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், வட்டிமானிய திட்டத்தை மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெறும் மொத்த வங்கிக் கடன்களில் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்காக வழங்கப்படும்.

வட்டி மானிய திட்டம் 2 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பிரிவு – 1**

வட்டி மானிய திட்டம் ஒன்றிய அரசால் நேரிடையாக 250 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இதில், தமிழ்நாட்டில் 9 மாவட்டங்களான தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில் ஒன்றிய அரசால் இந்த வட்டி மானியத் திட்டம் நேரிடையாக செயல்படுத்தப்படுகிறது. இந்த மாவட்டங்களில் வங்கிகள் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு 7 சதவீதம் வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்க வேண்டும். 3 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக கொடுக்கப்பட்டுள்ள கடன்களுக்கு வங்கிகள் தங்கள் வங்கியின் நடைமுறையில் உள்ள

வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கும். காலதாமதமின்றி கடன்களைத் திரும்ப செலுத்திய குழுக்களுக்கு 3 சதவீதம் கூடுதல் வட்டிமானியம் வழங்கப்படுகிறது. மகளிர் சுய உதவிக்குழுக்களின் வங்கிக்கடன் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு நிகர வட்டி 4 சதவீதம் மட்டுமே. இதற்கான வட்டி மானியம் ஒன்றிய அரசால், பொறுப்பு (Nodal bank) வங்கியின் மூலம் வழங்கப்படும்.

**பிரிவு – 2**

மீதமுள்ள 28 மாவட்டங்களில் வட்டி மானிய திட்டம் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு ஆகியவை முறையே 60:40 விழுக்காடு பங்கேற்புடன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் நடைமுறையிலுள்ள வட்டி விகிதத்தில் கடன் வழங்கும். கடன் தொகையை காலம் தவறாமல் திரும்ப செலுத்திய சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ள கடன்களில் 3 இலட்சம் ரூபாய் வரை உள்ள கடன்களுக்கு வங்கியின் வட்டி விகிதத்தில் 7 சதவீதத்திற்கு மேல் விதிக்கப்பட்டுள்ள வட்டியில் அதிகபட்சமாக 5.5 சதவீதம் வரை 3 இலட்சம் ரூபாய் கடன் தொகைக்கு வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

இதில் 3 இலட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு நிகர வட்டி 7 சதவீதம் மட்டுமே ஆகும்.

மாதத் தவணையை குறிப்பிட்ட காலத்தில் நிலுவை தவணையின்றி திருப்பிச் செலுத்திய மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு காலாண்டு அடிப்படையில் வட்டி மானியம் கணக்கிடப்படுகிறது. கடன் தவணையை காலதாமதமாக திரும்ப செலுத்திய சுய உதவி குழுக்கள் கடன் கணக்கு இயல்பு நிலைக்கு வரும் வரை வட்டிமானியம் பெற இயலாது.

தற்போது சாதனையாக அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களையும் (PACCS) இணைத்துக் கொண்டு மகளிர் சுய உதவி குழுக்களின் கடன் விவரங்களை தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணையத்தில் (Portal) பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது. மொத்த கடன் தொகையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் கடன் அளவு சுமார் 10 சதவீதம் ஆகும். இவ்வங்கிகளுடன் இணைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களும் வட்டிமானியத்தை பெற முடியும்.

2021-22 ஆம் நிதியாண்டில் 40 கோடி ரூபாய் வரை வட்டிமானியம் வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு போதுமான அளவு வங்கிக்கடன்கள் கிடைக்கப் பெறாத போது அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனத்தில் கடன் பெறுவதை தடுக்கவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன்கள் பெற்று, சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க பெருங்கடன் திட்டம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் 10.00 இலட்சம் ரூபாய் முதல் 1.50 கோடி ரூபாய் அல்லது அதற்கும் மேல் வங்கிகளில் பெருங்கடனாக பெற்று கூட்டமைப்பில் உள்ள குழுக்களின் அதிகபட்ச கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. 2021-22 ஆம் ஆண்டில், 23.89 கோடி ரூபாய் பெருங்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## சிறு தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதி (CGFMU)

ஒன்றிய அரசின் நிதி அமைச்சகம் சுய உதவிக் குழுக்களுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் 20 இலட்சம் ரூபாய் வரையில் வழங்கப்படும் கடன்கள் சிறு

தொழில்களுக்கான கடன் உத்திரவாத நிதி மையத்தின் கீழ் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- அதிக வருடங்களாக இயங்கி வரும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கி கடன் இணைப்பில் தற்போதுள்ள அதிகபட்ச கடன் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் கடன்கள் பெற இயலும்.
- இத்திட்டத்தின் கடன் அளவு 10 இலட்சம் ரூபாய்களுக்கு மேல் 20 இலட்சம் ரூபாய் வரை ஆகும்.
- மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது சிறிய தொழில் செயல்பாடுகளை தொழில் நிறுவனங்களாக (Enterprises Activities) மாற்றி அமைக்க இயலும்.
- வங்கிகள் வாராக் கடன்களை, தேசியக் கடன் உத்திரவாத கழகத்திடமிருந்து மீளப் பெற முடியும்.

### 6.3.8. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது ஒன்றுக்கும் மேற்பட்ட வாழ்வாதார செயல்பாடுகள் ஏழை மக்களுக்குத் தேவை என்பதை

அங்கீகரிக்கிறது. ஊரக ஏழை மக்களின் தற்போதைய வாழ்வாதார செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் விரிவாக்குதல், இதன் முக்கிய அம்சமாகும். ஊரகப் பகுதிகளில் 70 சதவீதத்திற்கும் மேலான மக்கள் விவசாயியாகவோ அல்லது விவசாயக் கூலியாகவோ வாழ்கின்றனர். இது தவிர, வேளாண்மையைச் சார்ந்த தொழில்களாகிய கால்நடை வளர்ப்பு ஊரக மக்களின் முக்கிய வாழ்வாதார செயல்பாடிற்காக மேற்கொள்ளப்படுகிறது.

வேளாண் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான முக்கிய நோக்கங்கள்:

- ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் குறைந்தபட்சம் 2 விதமான வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
- இரண்டு ஆண்டுகள் தொடர் ஆதரவின் மூலம் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ.50,000க்கு அதிகமாகக் கிடைப்பதை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் ஒவ்வொரு குடும்பத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல்.
- வருடம் முழுவதும் தொடர்ந்து வருமானம் கிடைக்கச் செய்தல்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது, மேற்கண்ட குறிக்கோள்களை எய்திட முழு முனைப்புடன் பணியாற்றி வருகிறது.

மாநில அளவிலான கடன் உத்திரவாதத் திட்டத்தின் மூலம் அதிக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் குறிப்பாக நுண் நிறுவனங்களுக்கு கடன் கிடைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மின்னனு தகவல் தரவுகள் அடிப்படையிலான கடன் மதிப்பீட்டு முறை வட்டார அளவில் ஏற்படுத்தப்படும்.

பங்குச் சந்தைகள் மூலம் முதலீட்டைப் பெற முயலும் இந்நிறுவனங்களுக்கு 30 இலட்சம் ரூபாய் வரை பட்டியல் இடும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

துணிநூலுக்கான தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் திறம்பட செயல்படுத்தப்படும்.

2021–22 ஆம் ஆண்டில், 49 வட்டாரங்களில் உள்ள 4,20,000 பெண் விவசாயிகள் பயன்பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**வாழ்வாதார நடவடிக்கைகளுக்கான செயல்பாட்டு உத்திகள்**

பண்ணை சார்ந்த வாழ்வாதார உத்திகளை செயல்படுத்துவதன் முக்கிய நோக்கம், நீடித்த நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், உள்ளூரிலேயே கிடைக்கும் இடுபொருட்களை பயன்படுத்துதல், வேளாண் சாகுபடியில் உள்ள பிரச்சனைகளை குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை ஆகும். இதன் மூலம் ஒரு கிராமப்புற குடும்பத்தின் நிகர வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், குறைந்த செலவிலான, நீடித்த நிலைத்த இயற்கை வேளாண் சாகுபடி முறைகளான, இயற்கை முறை பயிர்பாதுகாப்பு முறைகள், ஒருங்கிணைந்த பண்ணை முறை, காலநிலை மாற்றங்களுக்கேற்ற வழிமுறைகள், மண்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை, நீர்வளப் பாதுகாப்பு, பல்வகை பயிர்களின் சாகுபடியினை மேற்கொள்ளுதல் மற்றும் பாரம்பரிய இரகங்களை பரவலாக்கம் செய்வதன் மூலம் தகுந்த வேளாண் சூழலை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், ஏழை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி வளர்ப்பு முதலான கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளது. வாழ்வாதாரக் குழுவை பலப்படுத்துவதன் மூலம் ஒருங்கிணைந்த பண்ணை முறையை ஊக்குவித்து கால்நடை வளர்ப்பை வேளாண்மையுடன் சேர்த்து மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

ஒவ்வொரு கிராம அளவிலும் குடும்ப அளவிலும் செயலாக்கப்படவுள்ள வாழ்வாதார உத்திகள் கீழ்வருமாறு:

**அ. குடும்ப அளவில்**

- குடும்ப உறுப்பினர்களின் ஊட்டச்சத்துப் பாதுகாப்பிற்கும், நிரந்தரமான வருமானம் பெறவும் ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம் அமைத்தல்.
- இயற்கை விவசாயத்திற்குத் தேவையான இயற்கை இடுபொருட்களைத் தயாரித்தல்.

**ஆ. கிராம ஊராட்சி அளவில்**

- ஒருங்கிணைந்த பண்ணைமுறை மாதிரிகளை உருவாக்குதல்.
- இயற்கை வேளாண் தொகுப்புகளை உருவாக்குதல்.
- உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குதல்.

இந்த வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராமத்திலும் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் சிறந்த அனுபவமுள்ள நபர்களை, வேளாண்மைக்கு ஒருவர் மற்றும் கால்நடைக்கு ஒருவர் என சமுதாய வளப் பயிற்றுநர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலமாக வாழ்வாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு ஒன்றியத்திலும், வாழ்வாதாரத் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- சிறு மற்றும் குறு விவசாயிகள் முன்னுரிமை அடிப்படையில் பயனாளிகளாகத் தேர்ந்து எடுக்கப்படுவர். அதிலும் நலிவுற்ற மற்றும் கைவிடப்பட்டபெண்களை குடும்பத்தலைவியாகக் கொண்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை பெற்ற பயனாளிகளாகத் தேர்வு செய்யப்படுவர்.
- அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பயனாளிகளை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் நிறுவனங்களாக உருவாக்குதல்.
- திறன் மேம்பாட்டுப்பயிற்சி அளித்து அவர்களை தற்சார்பு மிக்கவர்களாக மாற்றுதல்.

- சமுதாய மூலதனத்தை உருவாக்கிடவும், புதிய பகுதிகளில் வாழ்வாதாரத் திட்டத்தை விரிவுபடுத்திட சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்.
- வேளாண்மையையும், கால்நடையையும் ஒருங்கிணைத்து மக்களின் முழுமையான வாழ்வாதாரத் தேவையை பூர்த்தி செய்தல்.

**முதன்மை உற்பத்தியாளர் குழுக்கள்**

தனிநபர் விவசாயிகள் தங்கள் தடைகளைக் கடந்து வரவும், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விலையினை தாங்களே நிர்ணயம் செய்யும் திறனை மேம்படுத்தவும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது கூட்டு அணுகு முறையினை ஊக்கப்படுத்திட, விவசாயிகளை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்குகிறது. வேளாண் மற்றும் கால்நடைத் தொழிலில் ஈடுபட்டு, விளைபொருட்களை சந்தைப்படுத்தி வரும் மகளிர் விவசாயிகள் குழுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு 'உற்பத்தியாளர் குழு' உருவாக்கப்படுகிறது.

இந்த உற்பத்தியாளர் குழுக்கள் சாகுபடி செய்யும் பிரதான பயிருக்கேற்ப, அவர்களுக்கு நீடித்த நிலையான சாகுபடி முறைகளான நுண்ணீர்பாசனம், இயற்கைப்

பண்ணையம், ஒருங்கிணைந்த பண்ணையம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவற்றிற்கான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் செயல் விளக்கங்கள், சம்மந்தப்பட்ட வேளாண்மை மற்றும் கால்நடைத் துறை மூலமாக ஒருங்கிணைத்து வழங்கப்படுகிறது.

இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 4,700 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு 1,01,019 மகளிர் விவசாயிகள் இணைந்துள்ளனர். உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள், தங்களுக்குத் தேவையான மூலப் பொருள்கள் மற்றும் பிற உள்ளீடுகளைக் கூட்டாகக் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டலுக்காக விளைபொருட்களைத் திரட்டி சேகரித்தல் போன்ற கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

இத்திட்டத்தின் வேளாண் சார்ந்த செயல்பாடுகள் 2021–22 ஆம் ஆண்டில், மேலும் 1,663 கிராம ஊராட்சிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டு, 4.20 இலட்சம் பயனாளிகளை இந்த திட்டத்தில் இணைக்கவும், கூடுதலாக 5,700 உற்பத்தியாளர் குழுக்களை, 194 வட்டாரங்களை சேர்ந்த 6,535 கிராம ஊராட்சிகளிலிருந்து உருவாக்கவும்

திட்டமிடப்பட்டுள்ளது. மூலப்பொருட்களை வாங்குதல், உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்தல். சந்தைப்படுத்துதல் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவதற்கு செயல்பாட்டு மூலதன மற்றும் உள்கட்டமைப்பு நிதி மானியமாக ஒவ்வொரு தயாரிப்பாளர் குழுவிற்கும் 2 இலட்சம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும்.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்**

தற்போதுள்ள சந்தையில் போட்டியிட்டு நீடிக்கவும், மதிப்புக்கூட்டு சங்கிலியில் உள்ள வாய்ப்புகளைக் கண்டறிந்து அவற்றை திறம்பட தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் ஏதுவாக உழவர் உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளது. இந்த உற்பத்தியாளர் நிறுவனங்கள் கம்பெனி சட்டம் அல்லது கூட்டுறவு சட்டம் பிற பொருத்தமான சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும். இத்தகைய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உயரிய சேவைகள் வழங்கும் விதமாக, உற்பத்திப் பொருட்களின் மதிப்புக் கூட்டலுக்கான செயல்முறைகளை மேற்கொள்ளுதல், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை, தேவைப்படும் இடுபொருள் வாங்கி வழங்குதல், சந்தைப்படுத்துதல் மற்றும் இதரபிற சேவைகளையும் வழங்கி

விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கிட உதவிடும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் 60 விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்களை (FPO) உருவாக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**இயற்கை வேளாண் தொகுப்புகளை ஏற்படுத்துதல்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண் சாகுபடியில் நீடித்த நிலைத்த இயற்கையான சாகுபடி முறைகளையும், முன்னோடியான கால்நடை பாரமரிப்பு முறைகள், மரம் நீங்கலான வனப்பொருட்களை சேகரித்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்றவற்றின் மூலமாக ஏழை, எளிய மக்களின் வாழ்வாதார முறைகளை வலுப்படுத்தி வருகிறது. விவசாயிகளை அடுத்த நிலைக்கு முன்னேற்றுவதற்கு இயற்கை வேளாண்மை சான்று பெறுவதும், சந்தைப்படுத்துதலில் இலாபகரமான விலை பெறவும் வழிவகை செய்ய வேண்டும்.

இயற்கை வேளாண் தொகுப்புகள் கீழ்க்கண்ட நான்கு வரையறுக்கப்பட்ட திட்ட செயலாக்க நடவடிக்கைகள் மூலம் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளன.

1. இயற்கை விவசாயம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்ட அருகருகாமையில் உள்ள தொகுப்பு கிராமங்களை தேர்வு செய்வது.
2. ஆர்வமுள்ள மகளிர் விவசாயிகளை தேர்வு செய்வது.
3. அங்ககச் சான்றிதழ் (Organic Certification) வழங்கும் நடைமுறை தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்பு துறையுடன் சேர்ந்து இயற்கை வேளாண் தொகுப்பின் பயனாளிகளுக்கு அங்கக வேளாண்மை பயிற்சியும், அங்கக சான்றிதழ் வழங்கும் நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
4. இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு உரிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

2021–22 ஆம் ஆண்டில் மேலும் 5,000 விவசாயிகளை உள்ளடக்கிய 50 இயற்கை வேளாண் தொகுப்புகள் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஊட்டச்சத்து காய்கறித் தோட்டம்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், கிராமப்புற மக்களிடையே குறிப்பாக ஏழை எளிய மக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை

மேம்படுத்துவதற்கான சிறப்பு முயற்சியான ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு உருவாக்கப்பட்டு, ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கத் தேவையான விதைகள் மற்றும் நாற்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. பயனாளிகள் தங்கள் வீட்டின் பின்புறம் அல்லது வீட்டின் மேல்பகுதியில் அல்லது அவர்களுக்கு இருக்கக்கூடிய வேறு எந்த இடத்திலும் ஊட்டச்சத்து தோட்டத்தை நிறுவ வேண்டும். பப்பாளி, முருங்கை, எலுமிச்சை, கறிவேப்பிலை, மணத்தக்காளி கீரை, மா, கொய்யா, வாழை ஆகியவை ஊட்டச்சத்து தோட்டத்தின் கீழ் வளர்க்கப்படும் முக்கிய காய்கறி மற்றும் பழங்களாகும்.

2021-22 ஆம் ஆண்டில், கூடுதலாக இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு இத்திட்டம் விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள்**

வேளாண்மை தொழில்களிலிருந்து நிலையான வருமானம் பெறுவதற்காக, வேளாண் மகளிர் விவசாயிகள் தொழிலுடன் கால்நடை வளர்ப்பையும் சேர்த்து ஒருங்கிணைந்த பண்ணை முறை விவசாயத்தை மேற்கொள்ள ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். ஒவ்வொரு ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பு உருவாக்கப்படும். 2021-22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆண்டு செயல் திட்டத்தின் கீழ் ஒரு ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பு 20 இலட்சம் ரூபாய் வீதம் 185 ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்பிலும் இயந்திர வாடகை மையம், இயற்கை விவசாய இடுபொருட்களை தயாரித்து விற்பனை செய்யக் கூடிய அங்காடி, விவசாயத்துடன் கறவை மாடுகள் வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்றவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணை, தாவர மற்றும் மண் மாதிரிகளில் பூச்சி மருந்து மற்றும் இரசாயன உரங்களின் மிச்சத்தினை

கண்டுபிடிப்பதற்கான பண்ணை ஆய்வுக்கூடம் ஆகியவை இருக்கும்.

**தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் பண்ணை சாரா நிறுவனங்களை ஊக்குவித்தல்**

தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்டங்களின் கீழ் பண்ணை சாரா தொழில் நிறுவனங்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஓரிட சேவை மையம் மற்றும் வட்டார வணிக வளமையம் மூலம் தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோருக்கு தேவையான உதவியளிக்கும் திறன் கொண்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் – தொழில் மேம்பாடு ஆகியோர்களை உள்ளடக்கியதாக ஓரிட சேவை மையம் மற்றும் வட்டார வணிக வள மையங்கள் விளங்கும். தொழில்முனைவோர்களுக்கு சாத்தியமான தொழில் வாய்ப்புகளை அடையாளம் காணவும், வணிகத் திட்டத்தைத் தயாரிக்கவும், சமூக நிறுவன நிதி அல்லது வங்கிக்கடனை பெற்றுத்தரவும் ஆவண செய்யப்படும்.

உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் பெண்களால் நடத்தப்படும் 150 நிறுவனங்களை முறையான நிறுவனங்களாக வளர்க்க ஒரு நிறுவனம்

தேர்ந்தெடுக்கப்படும். தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் அடைகாக்கும் மையம் (CEDI) என்பது திருச்சியின் தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT) மூலம் ஊக்குவிக்கப்படும் ஒரு தன்னாட்சி நிறுவனம் ஆகும். மாநிலம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 நிறுவனங்களை மூன்று வருடங்களுக்கு மேம்படுத்துவதற்காக வழிநடத்தும் வணிக வழிகாட்டி மையமாக இந்நிறுவனம் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த வணிக வழிகாட்டி மையத்தை ஈடுபடுத்துவத்தின் மூலம் ஒவ்வொரு நிறுவனத்தின் வருமான அளவும் மூன்று ஆண்டுகளில் 15% உயர்த்தப்பட வேண்டும்.

2021–22 ஆம் நிதியாண்டில் 8,250 பண்ணை சாரா தொழில் நிறுவனங்களை, ஓரிட சேவை மையம் மற்றும் வட்டார வணிக வள மையம் மூலம் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 36 மாவட்டங்களில் 150 தொழில் நிறுவனங்கள் வணிக வழிகாட்டி மையங்கள் மூலம் மேம்படுத்தப்படும் மற்றும் 144 சிறிய தொகுப்பு நிறுவனங்கள் உருவாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது (ஆயத்த ஆடை தயாரிப்பு தொழில் தொகுப்பு மற்றும் இதர சிறிய தொழில் தொகுப்பு).

**கிராமியத் தொழில் முனைவோர் திட்டம்**

கிராமிய தொழில் முனைவோர் திட்டம் என்பது பண்ணை சாரா வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் முதல் கட்டமாக, திருப்போரூர் (செங்கல்பட்டு மாவட்டம்) மற்றும் உளுந்தூர்பேட்டை (கள்ளக்குறிச்சி மாவட்டம் ) ஆகிய இரண்டு ஒன்றியங்களில் ரூ.10.18 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 3,096 குறுந்தொழில்கள் துவங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டமாக இத்திட்டம், திருமங்கலம் (மதுரை மாவட்டம்) மற்றும் இராசிபுரம் (நாமக்கல் மாட்டம்) ஆகிய இரண்டு வட்டாரங்களில் செயல்படுத்த ஒன்றிய ஊரக வளர்ச்சித் துறையிடம் அனுமதி பெறப்பட்டு, இவ்விரண்டு வட்டாரங்களிலும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

பயிற்சி பெற்ற தொழில் மேம்பாட்டு சமுதாய வளப் பயிற்றுநர்கள் கிராமப்புறங்களில் இலாபமும், வேலை வாய்ப்பும் ஈட்டித்தரக் கூடிய, சேவை, உற்பத்தி மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்புகளை கண்டறிய உதவுவார்கள். சுய உதவிக் குழு

உறுப்பினர்களால், தேர்வு செய்யப்பட்ட தொழிலில் அவர்களுக்கு உள்ள ஆர்வம் மற்றும் அடிப்படை அறிவை வைத்து அவர்களுக்குத் தேவையான வணிகத் திட்டத்தை சமுதாய வளப் பயிற்றுநர் மூலம் (தொழில் மேம்பாடு) தயாரித்து வழங்கப்படும். பயனாளிகளுக்குத் தேவையான வழிகாட்டுதலையும் ஆதரவையும் மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உருவாக்கிச் செயல்படுத்தும்.

தொழில் திட்டம் ஒப்புதல் ஆன பிறகு அத்தொழில் துவங்குவதற்குத் தேவையான நிதியை, சமுதாய முதலீட்டு நிதி அல்லது சமுதாய தொழில் நிதி மூலமும் மற்றும் முத்ரா கடன் மூலமும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராமியத் தொழில் முனைவோர் திட்டத்தின் முதல் கட்ட வட்டாரங்களில் திருப்போரூர் (செங்கல்பட்டு மாவட்டம்) மற்றும் உளுந்தூர்பேட்டை (கள்ளக்குறிச்சி மாவட்டம்) ஆகிய இரண்டு மாவட்டங்களில், இதுவரை 2,788 குறுந்தொழில் முனைவோர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு தேவையான வணிக மேம்பாட்டு பயிற்சி, களப்பயணம், தொழில் திட்ட அறிக்கை தயாரித்தல், மக்கள் அமைப்புகளில் ஒப்புதல் பெறப்பட்டு, அதில் 1,035 தொழில் முனைவோர்களுக்கு சமுதாய தொழில்

நிதி அல்லது முத்ரா கடன் பெற்று தரப்பட்டு தொழில் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது.

**சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு**

**அ. கண்காட்சிகள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை கண்காட்சிகள், கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் மூலம் சந்தைப்படுத்திட ஆதரவு அளித்து வருகிறது. இக்கண்காட்சிகள் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு கூடுதல் விற்பனை வாய்ப்புகளையும், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகின்றன.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கைவினைப்பொருட்கள், செயற்கை அணிகலன்கள், சணல் பொருட்கள், தோல் பொருட்கள், சிறுதானியங்கள் போன்ற மகளிர் சுய உதவிக்குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பொருட்களை விளம்பரப்படுத்தி, சந்தைப்படுத்திடவும் ஒவ்வொரு ஆண்டும் "சுய உதவிக் குழு விற்பனை விழா" என்ற பெயரில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி பண்டிகை காலங்களில் மாநில அளவிலான மூன்று கண்காட்சிகளை நடத்துகின்றது.

மேலும் மாவட்ட அளவிலான விற்பனை கண்காட்சி அந்தந்த மாவட்டத்திற்குட்பட்ட உள்ளூர் திருவிழா காலங்களிலும் மற்றும் பண்டிகை காலங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**சாராஸ் மேளா**

சாராஸ் (Sales of Articles of Rural Artisans Society) என்பது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்ற ஊரக கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் தேசிய அளவிலான கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் நாடு முழுவதிலிருந்தும் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள் உற்பத்தி செய்த சிறந்த கைவினைப் பொருட்கள் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படுகிறது.

**ஆ. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை வலுப்படுத்துதல்**

பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்த மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை கண்டறிந்து அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்திடும் வகையில் தொழில் வாய்ப்பை அளித்து சங்கங்களை பராமரிக்க முயற்சி எடுத்துள்ளது.

இதுவரை 4,300 உற்பத்தியாளர் குழுக்கள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் 4,000 ஒத்த தொழில்

குழுக்கள் புதுவாழ்வு திட்டத்தின் மூலமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்ட ஆண்டு அறிக்கைகளில் தற்போதுள்ள சூழ்நிலையில் மேலும் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் உதவியுடன் இடைவெளி நிதி ரூ.5.00 இலட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்திற்கு அளித்து வேளாண் உற்பத்தி குழுக்கள் மூலம் பொருட்கள் விற்பனை செய்வதை விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் நிதியாண்டில் 50 இலட்சம் ரூபாய் நலிவடைந்த மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தை வலுப்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயம் சாராத பொருட்களை விட, விவசாயம் சார்ந்த பொருட்களின் உற்பத்தி அளவு அதிகமாக இருக்கும் காரணத்தினால் விவசாயப் பொருட்களின் சந்தைப்படுத்தலை முன்னிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே வேளாண் விற்பனைப் பொருட்கள் ஊரகப் பகுதியில் நல்ல விற்பனை வாய்ப்பைப் பெற்றுள்ளது.

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் இந்நிதியை வேளாண் விற்பனை சந்தைக்குப் பயன்படுத்தி, அதன் மூலம் ஒவ்வொரு வருடமும் பல சுழற்சியின் மூலம் குறைந்தது 20 சதவிகிதம் வருமானத்தை பெற முடியும். இதில் வரும் வட்டி வருமானத்தை கொண்டு மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் நிர்வாக செலவிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் இம்மாவட்டங்களிலுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மற்ற சந்தை இணைப்புகளை பயன்படுத்தி வியாபார நோக்கில் சுய வருமானம் ஈட்டும் வருமான மாதிரியாக உருவாக்க வேண்டும்.

**இ. மதி அங்காடி ( Mathi KIOSK)**

மதி அங்காடிகள் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சிறப்பு ஏற்பாடாகும். நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலாத் தலங்கள், பேருந்து நிலையங்கள், கோவில்கள், அரசு அலுவலகங்கள், இதர நிறுவனங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்கள் ஆகிய 137 இடங்களில் மதி அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இதில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களான மூலிகைப் பொருட்கள், அலங்கார

சணல் பொருட்கள், கைவினைப்பொருட்கள், சிறுதானியங்கள், செயற்கை நகைகள் மற்றும் கைவினை பொம்மைகள் போன்ற பொருட்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டும் வருகிறது.

மேலும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் ஊரகம் மற்றும் நகர்ப்பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சி அலுவலகம் மற்றும் நகராட்சி அலுவலகம் அமைந்துள்ள இடங்கள், பேருந்து நிலையம், ஆலயங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களில் 2021–22 ம் நிதி ஆண்டில் 500 மதி விற்பனை அங்காடிகள் 350 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**ஈ. சந்தையியலை மேம்படுத்த வணிக வழிகாட்டி (Incubator) மையம் உருவாக்குதல்**

4,000 சுய உதவிக் குழுக்கள் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு வணிகம், சேவை மற்றும் உற்பத்தி தொழில்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றிலிருந்து, ஒவ்வொரு மாவட்டமும் தேவைகள் மற்றும் தனித்துவம் வாய்ந்த 20 பொருட்கள்

கண்டறிந்து தேர்வு செய்கின்றனர். இதற்கு மாநில அளவில் ஒரு அங்கீகாரம் பெற்ற வணிக வழிகாட்டி மையம் உதவி செய்ய வேண்டும்.

வரும் 2021–22 ஆம் நிதியாண்டில், மாநில அளவில் புகழ்பெற்ற ஒரு வணிக வழிகாட்டி மையத்தை 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வணிக வழிகாட்டி மையமானது சுய உதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருட்களை ஒன்றிணைப்பது, பொட்டலமிடுதல் மற்றும் வணிக முத்திரை மூலம் சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை விரிவுப்படுத்த இயலும்.

**உ. விற்பனையை மேம்படுத்த சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சியளித்தல்**

சுய உதவிக்குழுக்கள் பாரம்பரியமாக பயன்படுத்தப்பட்டு வரும் பொருட்கள், கைத்தறி, சணல், மண்பாண்டங்கள் மற்றும் ஆயத்த ஆடை போன்ற நவீன பயன்பாட்டில் உள்ள பல பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர். எனவே, நவீன யுக்தி மற்றும் இயந்திரங்களை பயன்படுத்தி தரமான மற்றும் மேம்படுத்தப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் சுய உதவிக் குழுக்களிலிருந்து 1,000

உற்பத்தியாளர்கள் தொகுப்பு மையங்களாக மேம்பாடு அடைய தொழில்நுட்ப ஆதரவு நிறுவனங்கள் / வணிக வழிகாட்டி மையங்கள் மூலம் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்படும்.

**ஊ. அறிவுப் பகிர்வு மற்றும் கற்றல் நோக்கத்திற்காக பிறமாநிலங்களில் களப்பயணம் மேற்கொள்ளுதல்**

சுய உதவிக் குழு தயாரிப்புகளின் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அறிவு பகிர்வு மற்றும் கற்றல் நோக்கத்திற்காக, பிற மாநிலங்களுக்கு அதன் அடிப்படையில் களப் பயணம் ஏற்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**6.3.9. ஒருங்கிணைப்பு – சமூக உள்ளாக்கம் மற்றும் சமுதாய வளர்ச்சி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சமூக உள்ளாக்கத்தின் கீழ் சிறப்பு முயற்சியாக நலிவுற்றோர் குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்கள், நிலமற்றோர், இடம் பெயர்ந்த தொழிலாளர்கள், ஆதிபழங்குடியினர் மற்றும் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தொலைதூர

மற்றும் தனித்த கிராமப் பகுதிகளில் வாழும் நலிவுற்றோர் குடும்பங்களை மக்கள் நிலை ஆய்வின் மூலம் அடையாளம் கண்டு சமூக மேம்பாட்டிற்காக ஒன்று திரட்டி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

**அ. சமூக உள்ளாக்கத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோரை மேம்படுத்துதல்**

சமூக உள்ளாக்க உத்தியின் மூலம் சமுதாயம் சார்ந்த பணிகளை விரிவுப்படுத்தி அதன் வாயிலாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரை மேம்படுத்த 2020–21 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக மாநில வாழ்வாதார இயக்கம் மூலம் 5 மாவட்டங்களில் 1,020 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 24 ஊராட்சி ஒன்றியங்களில் 8.35 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும் மற்றும் தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் (NRETP) மூலம் 5 மாவட்டங்களில் 80 கிராம ஊராட்சிகளை உள்ளடக்கிய 5 ஊராட்சி ஒன்றியங்களில் 99.30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும் செயல்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

திறன்பெற்ற நபராகிய எனப்படும் சமூக மாற்றுத்திறனாளி ஒருங்கிணைப்பாளர் வட்டார அளவிலான மாற்றுத்திறன் குறைப்பு மற்றும் மறுவாழ்வு

வசதி செய்யும் நிறுவனம் (BDMRFA – Block disability mitigation and Rehabilitation Facilitating Agencies) மூலம் ஒவ்வொரு வட்டாரத்திற்கு ஒருவர் தேர்வு செய்யப்பட்டு, நலிவுற்றோர்களின் தேவையினை அறிந்து, அவர்களது நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக மாற்றுத்திறனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருதல், தேவையின் அடிப்படையில் புனர்வாழ்வினை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் மற்றும் இதர நலிவுற்றோரைக் கொண்டு சிறப்புக் குழுக்கள் அமைத்து அதன் மூலம் அவர்களது இடர்களைக் களைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ. சமுதாயம் சார்ந்த மனநலத் திட்டம் – மனம் இனிது**

உலக சுகாதார நிறுவனத்தின் வரையறை படி மனநலம் என்பது "ஒரு தனி நபர், அவள் (அ) அவருடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மன அழுத்தத்தை கையாளும் விதம், ஆக்கபூர்வமாகவும், பயனுள்ளதாகவும் பணியாற்றும் விதம் மற்றும் சமூகத்திற்கு அவள் அல்லது அவருடைய பங்களிக்கும் தன்மையை

பொருத்து மன நலம் அமைகிறது" எனப்படுகிறது. எனவே தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM) "மனம் இனிது" எனப்படும் மன நலம் சார்ந்த திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், சமுதாயம் சார்ந்த மனநல ஆலோசகர்களை உருவாக்கி திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள ஊராட்சிகளில் நலவாழ்வுத் துறை, தேசிய நலவாழ்வு இயக்கம், தொண்டு நிறுவனங்கள் மற்றும் பிற சார்பு நிறுவனங்களின் உதவியோடு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் மனநலமும் நலவாழ்வும் சார்ந்த ஆலோசனை வழங்குவதாகும்.

இத்திட்ட செயல்பாட்டிற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கு மனச்சிதைவு ஆராய்ச்சி மையம், SCARF (Schizophrenia Research Foundation) சென்னை உடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 2021-22 ஆம் நிதியாண்டில் 352.55 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் கீழ்க்கண்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- கிராம ஊராட்சிகளில் உள்ள சமுதாய வளப் பயிற்றுநர்களை பயிற்சிக்கு பின்னர் மனநல ஆலோசகர்களாக உருவாக்குதல்.
- முகாம் மற்றும் குடும்ப வாரியான ஆய்வு மூலம் மனநலம் பாதிக்கப்பட்டவரை கண்டறிந்து பரிந்துரை செய்தல்.
- மனநல ஆலோசகர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.
- கிராம ஊராட்சியில் உள்ள சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் போன்றவைகளுக்கு மனநலமும் நலவாழ்வும் பற்றி எடுத்துரைத்தல்.

இத்திட்டமானது 15 மாவட்டங்களில் உள்ள 17 வட்டாரங்களில் 594 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

**தொடர் செயல்பாடுகள்:**

பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, மனநல ஆலோசனை பயிற்சிப் பெற்ற சமுதாய வளப் பயிற்றுநர்களை கொண்டு தேவையான குடும்ப ஆலோசனை, பாதிப்பிற்குள்ளானவர்கள் தங்களை

தாங்களே நிர்வகித்துக் கொள்ள உதவி செய்தல், மருத்துவ நடவடிக்கையை தொடர்தல் மற்றும் சமூகம் சார்ந்த ஆதரவினை ஏற்படுத்துதல் முதலிய திட்டப் பயன்பாடுகளை உறுதி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சமுதாயம் சார்ந்த அமைப்புகளால் வாழ்வாதாரம்/தொழில் சார்ந்த பயிற்சிகளும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதன்பொருட்டு, மனநல பாதிப்புக்கு உள்ளானவர்கள் தங்களுக்குள்ள பிரச்சனைகளை உடனடியாக தெரிவிப்பதற்கும் அதனடிப்படையில் அவர்களை சம்பந்தப்பட்ட துறைக்கு பரிந்துரை செய்து தீர்வு காண்பதற்கும் உறுதுணையாக இருக்கும்.

**இ. உணவு, ஊட்டச்சத்து, உடல் நலம் தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணும் திட்டம்**

நல்ல ஊட்டச்சத்தானது, முழுமையான வாழ்க்கைக்கு அடிப்படையாகும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உணவு, ஊட்டச்சத்து, உடல்நலம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் தொடர்பான செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அதில் உள்ள பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளைக் சமுதாய அமைப்புகளுடன் கண்டறிய இத்திட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளது.

இத்திட்டத்தினை நலவாழ்வுத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்துறை, கல்வித்துறை மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது விழிப்புணர்வு ஏற்படுத்தி அதனடிப்படையில், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெறும் வகையில் முன் மாதிரி (Model) ஊட்டச்சத்து மையம் உருவாக்கப்படவுள்ளது. அதன் மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் வளர்ச்சியின்மை, உடல் மெலிவு மற்றும் உடல் எடைக் குறைவு போன்ற குறைபாடுகளுடன் பிறப்பதை குறைக்க முடியும். மேலும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து மகளிர் குழுக்களுக்கும் இதைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

இத்திட்டமானது நடப்பாண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் 10 மாவட்டங்களிலுள்ள 10 வட்டாரத்திலுள்ள 166 ஊராட்சிகளிலும் மற்றும் தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டத்தில் 3 மாவட்டங்களிலுள்ள 3 வட்டாரத்திலுள்ள 90 ஊராட்சிகளிலும் 346.82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## ஈ பாலின வேறுபாடுகளைக் களைதல்

பாலின வேறுபாடுகளைக் களைதல் தொடர்பான திட்டத்தினை தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் 2020-21 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. தற்போது அதிகரித்து வரும் பொருளாதார வளர்ச்சியில், சமூகத்தில் நீடிக்கும் பாலின இடர்பாடுகளில் இருந்து விடுபட வேண்டியது அவசியம் ஆகும். மேலும் குழந்தைத் திருமணம், குடும்ப வன்முறை மற்றும் பாலியல் அடிப்படையிலான இடர்பாடுகளிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளைக் காக்க வேண்டியதும் அவசியமாகும். இவற்றை கவனத்தில் கொண்டு சமூக பாலின வேறுபாடுகளை களைவதற்கான பல்வேறு செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 10 மாவட்டங்களிலுள்ள 10 வட்டாரங்களில் 129 ஊராட்சிகளிலும், தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்படும் 2 மாவட்டங்களிலுள்ள 2 வட்டாரங்களில் 38 ஊராட்சிகளிலும் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**உ. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு**

சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து சமுதாயம் சார்ந்த அமைப்புகள் உருவாக்கப்பட்டது. ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு, அக்கிராம ஊராட்சிக்கும் சுய உதவிக் குழுக்களை உள்ளடக்கிய சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கும் இடையேயான ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் கிராம ஊராட்சி அளவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

- கிராம ஊராட்சிகள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு திட்டங்களை விரிவுப்படுத்துதல்.
- நலிவுத்தன்மை குறைப்புத் திட்டம் (Vulnerability Reduction Plan) தயார் செய்து அதனை கிராம ஊராட்சியின் வறுமை குறைப்புத் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல்.
- கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்ட உருவாக்கத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை பங்கேற்கச் செய்தல்.

- கிராம சபைக் கூட்டங்களில் சுய உதவிக் குழுக்களை அதிக அளவில் பங்கேற்கச் செய்தல்.
- அரசின் முன்னோடித் திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல்.

இத்திட்டமானது 2021–22 ஆம் ஆண்டில் 37 மாவட்டங்களில் 12,525 கிராம ஊராட்சிகளில் 4.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**6.3.10. மேலாண்மை தகவல் அமைப்பு**

சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு சமூக பொருளாதார நிலையான வளர்ச்சிக்கான கருவியாக அவைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பம் (IT) மிக முக்கியமானதாகவும் திறம்பட பயனுள்ளதாகவும் மாறியுள்ளதால், தமிழ்நாடு மகளிர் மேம்பட்டு நிறுவனதில் கற்றல், பகிர்வு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் அனைத்து நிலைகளிலும் முடிவெடுப்பதற்கு ஆதரவாக தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களின் ஒரு முழுமையான பயன்பாடு உருவாக்கப்படுகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பட்டு நிறுவனம் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்த மேலாண்மை தகவல்

அமைப்பை பல நிலைகளில் வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பட்டு நிறுவனம் சுய உதவிக் குழுக்கள், பிற சமுதாயம் சார்ந்த அமைப்புகள் குறிப்பாக அவர்களின் பரிவர்த்தனைகள் மற்றும் நிர்வாக விவரங்களை கொண்டு திட்டமிடல் மற்றும் முடிவெடுப்பதற்காக மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) மூலம் பெருமளவில் சமூக–பொருளாதாரத் தரவுகளை நிர்வகிக்கிறது.

இ–மதியானது (e–Mathi) சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் நடைமுறை மின்னணு பரிவர்த்தனை மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான இணையதளமாகும். மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சமுதாயம் சார்ந்த அமைப்புகள் தங்களையும் திட்டத்தையும் சிறப்பாக நிர்வகிக்கவும், அதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய முடிவெடுப்பதற்கான ஆதரவு அமைப்பாகவும் இ–மதி செயல்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இ–மதி இணையதளம் மற்றும் தகவல் தளம் மேம்படுத்தப்பட்டு சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் கூட்டங்கள்,

சேமிப்பு, கடன், கடனை திரும்ப செலுத்துதல் மற்றும் கணக்கு புத்தகங்கள் பராமரிப்பு போன்ற நடைமுறை விவரங்களைச் சேகரித்து தகவல்கள் வழங்கி வருகிறது.

## 6.4. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (TNULM)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

தமிழ்நாடு நகர்புற வாழ்வாதார இயக்கமானது 60:40 என்ற விகிதத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் நிதியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புற உறைவிடமற்றோருக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய உறைவிடத்தை ஏற்படுத்தித் தருதல், நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கு அவர்களின் வியாபாரத்தினை மேம்படுத்துவதற்கு உதவும் வகையில் பொருத்தமான இடம் ஒதுக்கீடு செய்தல், நிதி அமைப்புகள் மூலம் கடன் வசதி

ஏற்படுத்துதல், சமூகப் பாதுகாப்பு அளித்தல் மற்றும் திறன் வளர்ப்பு மூலம் வளர்ந்து வரும் சந்தை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட உதவுதல் போன்றவற்றை இந்த இயக்கம் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

**இத்திட்டத்தின் கூறுகள்**

1. சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு **(SMID)**
2. சுய வேலைவாய்ப்பு திட்டம் **(SEP)**
3. வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு **(ESTP)**
4. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி **(CBT)**
5. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதார திட்டம் (SUSV)
6. நகர்ப்புற வீடற்றோருக்கு உறைவிடம் (SUH)
7. புதுமை மற்றும் சிறப்புத் திட்டங்கள் (ISP)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வதார இயக்கம் (TNULM) ஆரம்ப கட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் செயல்படுத்தப்பட்டது. தற்போது இத்திட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 6.4.1 சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன மேம்பாடு (SMID)

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் நகர்ப்புற ஏழைகள் மற்றும் நலிவுற்றோரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து ஒட்டுமொத்த சமுதாயத்தினை மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. பொதுவாக ஏழை மற்றும் நலிவுற்ற குடும்பங்களில் உள்ள மகளிரைக் கண்டறிந்து அவர்களில் 10 முதல் 20 வரை உள்ள மகளிரை உறுப்பினர்களாக்கி சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் குறிப்பாக தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள், சிறுபான்மையினர், மகளிரைத் தலைவியாகக் கொண்ட குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைப் பெண்கள், இடம் மாறிவந்த தொழிலாளர்கள், மிகவும் நலிவுற்றோர், தெருவோர வியாபாரிகள், குப்பை சேகரிப்பவர்கள், வீட்டுவேலை செய்பவர்கள், பிச்சை எடுப்பவர்கள் மற்றும் கட்டிடத் தொழிலாளர்கள் ஆகியோரின் நலனில் அக்கறைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்கள் மாற்ற இயலாத ஐந்து குறிக்கோள்களைக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. அவைகளாவன அ) முறையான

கூட்டங்கள், ஆ) முறையான சேமிப்பு, இ) முறையான உள்கடன், ஈ) முறையான கடன் திருப்பம் மற்றும் உ)நாளது தேதி வரை கணக்குகளை பதிவேடுகளில் பதிவு செய்தல்.

**அ. சுய உதவிக் குழு அமைத்தல் மற்றும் சுழல்நிதி வழங்குதல்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு, மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்பு, தரமதிப்பீட்டின் அடிப்படையில் அக்குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்படுகிறது. இந்நிதியினைக் கொண்டு அவர்களின் சேமிப்பைப் பெருக்கி அக்குழு உறுப்பினர்கள் முறையான உள்கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

2021-22 ஆம் நிதியாண்டில் 20,000 சுய உதவிக் குழுக்கள் அமைத்து, அக்குழுக்களுக்கு 20 கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படும். 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜூலை 2021 வரை 5948 சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டு 4.43 கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல் மற்றும் சுழல் நிதி வழங்குதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்பு குறைந்த பட்சம் 10 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து குடிசைப் பகுதி / வார்டு அளவில் ஏற்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும் அ) முறையான வட்டி விகிதத்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், ஆ) சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளை கண்காணித்தல், இ)திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் ஈ) தூய்மை இந்தியா இயக்கத்தில் பங்கேற்றல்
ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்களுக்கு வழிகாட்டியாய் உள்ளது.

2021-22 ஆம் நிதியாண்டில் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அமைத்து அக்கூட்டமைப்புகளுக்கு 1.50 கோடி ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும். 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜுலை 2021 வரை 31 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 0.15 கோடி ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது

**இ. நகர அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல்**

பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு நகர அளவிலான

கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இக்கூட்டமைப்புகள் நகர மற்றும் மாநகரப் பகுதிகளில் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும் உதவியாகவும், அவைகளின் மிக முக்கியமான தேவைகளை நிறைவேற்றவும் துணைபுரிகின்றன.

2021–22 ஆம் நிதியாண்டில் 20 நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்படும். 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜுலை 2021 வரை 02 நகர அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

**ஈ. நகர்ப்புற வாழ்வாதார மையங்கள்**

நகர்ப்புற வாழ்வாதார மையங்களின் நோக்கமானது ஒரு நகர்ப்புற ஏழைக்கு அவரது பணியினை சந்தைப்படுத்துவதற்கும், தேவையான தகவல்கள் மற்றும் பயன்களைப் பெறுவதற்கும் அடித்தளமாக இருக்கும். நகர்ப்புற வாழ்வாதார மையம் அனைத்து நகர வாசிகளுக்கும், அவர்களின் தேவைப் பணிகள் நிறைவு பெறவும், நகர்ப்புற ஏழைகளுக்கு தங்களின் சேவைகளை அதிகப்படுத்திக் கொள்ளவும், அவர்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்து மேம்பாடு அடையவும் ஓரிட வணிக மையமாக (One – Stop Shop) அமைகிறது.

நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்புகள் குறித்து உரிய தகவல்கள் தேடுபவர்களுக்கு உதவும் ஆதார மையமாகவும் உருவாக்கப்படும்.

2021–22 ஆம் நிதியாண்டில் 25 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் அமைக்கப்படும். 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜுலை 2021 வரை 11 நகர்ப்புற வாழ்வாதார மையங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**உ. சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு பயிற்சி அளித்தல்.**

சமூக அணிதிரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SMID) திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள், அதன் கூட்டமைப்புகள் மற்றும் துணைக் குழுக்கள் உட்பட அனைத்திற்கும் வங்கி தொடர்பு, புத்தகப் பராமரிப்பு மற்றும் கணக்குகள், நுண் திட்டமிடல், நுண்நிதி முதலீட்டு முறை குறித்த பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

இப்பகுதியின் கீழ் உள்ள பயிற்சி விவரங்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| அ) | சுய உதவிக்குழு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் பயிற்சி | 3 கையேடுகள் | 3 நாட்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆ) | சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி | 4 கையேடுகள் | 2 நாட்கள் |
| இ) | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் / நகர அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை மற்றும் ஆளுமை பயிற்சி | 2 கையேடுகள் | 4 நாட்கள் |

### 6.4.2 வேலைவாய்ப்புடன் கூடிய திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வுத் திட்டம் (ESTP)

நகர்ப்புற ஏழைகளின் சுயவேலைவாய்ப்பு திறன் மற்றும் ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு ஆகியவைகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வளர்ச்சி மற்றும் திறமைகளை வளர்க்கிறது. நகர்ப்புற ஏழைகள் மிகவும் இடர்பாடு சூழ்நிலைகளில் பணியாற்றுவதைத் தவிர்ப்பதைக் குறிக்கோளாக கொண்டு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி மற்றும் பணியமர்வு வழங்கப்படுகிறது.

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி மற்றும் பணியமர்வு திட்டத்தில் மகளிர் பயனீட்டாளர்கள் 30 சதவிகிதத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும்,

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மாநகர / நகர ஏழை மக்கள் தொகைக்கு ஏற்ப பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சதவிகிதத்திற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிறுபான்மை சமூக மக்களுக்கும் 15 சதவிகிதமும் ஒதுக்கப்படுகிறது. இதுதவிர நலிவுற்றோர் பிரிவைச் சார்ந்த பிச்சை எடுப்பவர்கள், குப்பை சேகரிப்பவர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், ஆதரவற்றோர்கள் உள்ளிட்டோருக்கும் திறன் மேம்பாட்டில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

2021–22 ஆம் ஆண்டிற்கு 15,000 நபர்களுக்கு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்வு வழங்கப்படும்

**6.4.3 சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP)**

இத்திட்டமானது நகர்ப்புற தனி நபர் ஏழை மற்றும் சுயஉதவிக்குழுக்களுக்கு அவரவர் திறன் வளர்ப்பு பயிற்சி, உள்ளூர் நிலைமைக்கு ஏற்றார்போல் சுய வேலைவாய்ப்பு மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கு நிதி உதவி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தங்கள் தகுதிக்கு குறைவான வேலையிலுள்ளோர் மற்றும் வேலை

வாய்ப்பில்லாதோர், அவரவர் உள்ளூர் தேவைக்கு ஏற்ப உற்பத்தி, சேவை மற்றும் வியாபாரம் தொடர்பான சிறு நிறுவனங்கள் தொடங்க இத்திட்டமானது ஊக்கமளிக்கிறது.

**அ .தனிநபர் சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP–I)**

ஒரு நகர்ப்புற ஏழை, தனது சுயவேலைவாய்ப்புக்காக தனியாக ஒரு நுண் நிறுவனத்தை நிறுவுவதற்கு வங்கிகளில் வட்டி மான்யத்துடன் கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2021–22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 8,000 தனி நபர்களுக்கு 60 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜுலை 2021 வரை, 2,071 தனிநபர்களுக்கு 8.52 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆ. குழு சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SEP–G)**

ஒரு சுய உதவிக் குழு அல்லது அதன் சில உறுப்பினர்கள் இணைந்தோ அல்லது நகர்ப்புற ஏழைகள் குழுவாகவோ, சுய வேலைவாய்ப்பிற்கான சிறு தொழில் துவங்குவதற்கு வங்கிகளில் வட்டி

மான்யத்துடன் கடன் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகை செய்கிறது.

2021-22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கான ஒத்த விருப்பக் குழு 1,500 உட்பட 7,500 தொழில் குழுக்களுக்கு 127.50 கோடி ரூபாய் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜூலை 2021 வரை 899 தொழில் குழுக்களுக்கு 32.32 கோடி ரூபாய் வங்கிக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**இ. சுய வேலைவாய்ப்புத் திட்டம் (வங்கி இணைப்பு) (SEP-BL)**

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியுடன் தொடர்பு கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்த வழிமுறைகளின் படி, வட்டி மான்யத்துடன் கூடிய கடன் பெற வழிவகை உள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1,000 சிறப்பு சுய உதவிக்குழுக்கள் உள்ளிட்ட 21,000 சுய உதவிக்குழுக்களுக்கு 610 கோடி ரூபாய் வங்கிக்கடன் உதவியாக வழங்கப்படும். 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜூலை 2021 வரை 97 சிறப்பு சுய

உதவிக்குழுக்கள் உள்ளிட்ட 2,082 சுய உதவிக்குழுக்களுக்கு 85.05 கோடி ரூபாய் வங்கிக்கடன் உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஈ. தேவைக்கேற்ற கடன் மற்றும் வட்டி மானியம் பெறுவதற்கான இணைய முகப்பு (PAiSA Portal)**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மான்யத்துடன், வங்கிக்கடன் அளிக்க வழிவகை செய்கிறது. நகர்ப்புற ஏழை மக்களின் சுய உதவிக் குழுக்கள் பெறும் கடன் மீது வட்டி மான்யம் என்பது, ஒரு வங்கியின் நடைமுறையில் உள்ள வட்டி விகிதம் மற்றும் வருடத்திற்கு 7 சதவிகிதம் வட்டி பிடித்தம் செய்வதற்கும் உள்ள வித்தியாசமாகும். சுய உதவிக் குழுக்கள் பெறும் வங்கிக்கடனில் மேற்படி வித்தியாசத் தொகை பயனீட்டாளர்களுக்கு மாத அடிப்படையில் திருப்பி வழங்கப்படும். மேலும் சுய உதவிக் குழுக்களுக்கு, அவர்கள் உரிய காலத்தில் தங்களது கடன் தொகையினை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில், கூடுதலாக 3 சதவிகிதம் வட்டி மான்யம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. வட்டி மான்யம் வழங்குவது என்பது பெறப்பட்ட வங்கிக்கடன் தொகையினை உரிய காலத்தில் திருப்பி

செலுத்துவதற்கும் (வங்கியின் திருப்பி செலுத்தும் அட்டவணைப்படி) வங்கிகள் மாவட்ட இயக்க மேலாண்மை அலகில் இருந்து உரிய தகுதி சான்று பெறுவதற்கும் உட்பட்டதாகும்.

2021–22 ஆம் ஆண்டில் 32 கோடி ரூபாய் சுய வேலை வாய்ப்பு திட்ட பயனாளிகளுக்கு வட்டி மானியமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 01 ஏப்ரல் 2021 முதல் 31 ஜூலை 2021 வரை 4.48 கோடி ரூபாய் சுய வேலை வாய்ப்புத் திட்ட பயனாளிகளுக்கு வட்டி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 6.4.4 திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

இத்திட்டமானது மேலாண்மை நிர்வாகத்தில் உயர்ரக தொழில்நுட்ப உதவியை பயன்படுத்தி நகர்ப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் நகர்ப்புறத்தில் வறுமை ஒழிப்பை செயல்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- மாநில இயக்க மேலாண்மை அலகு, மாநில மேலாண்மை இயக்குநரின் தலைமையின் கீழ் 6 தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுகிறது.
- ஒவ்வொரு மாவட்ட அலகும் மாவட்ட இயக்க மேலாண்மை அலகாக திட்ட இயக்குநர்

தலைமையின் கீழ் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்களின் உதவியுடன் செயல்படுகிறது.

- மாநில இயக்க மேலாண்மை அலகின் கீழ் உள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள், மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ் உள்ள உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் ஆகியோருக்கு அடிப்படை தொழில்நுட்ப பயிற்சியானது தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்றுநரைக் கொண்டு மாநில மற்றும் மாவட்ட அளவில் பயிற்சி நடத்தப்படுகிறது.

2021-22 ஆம் நிதி ஆண்டில் திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியின் கீழ் 25.00 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கீழ்கண்ட திட்டங்கள் நகராட்சி நிர்வாக இயக்குனரகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் இத்திட்டங்களை ஒருங்கிணைத்து நிதியுதவி வழங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1. நகர்ப்புற தெருவோர வியாபாரிகளுக்கான வாழ்வாதாரம்
2. நகர்ப்புற வீடற்றோர்க்கு உறைவிடம் (SUH)
3. பிரதம மந்திரி சுய சார்பு நிதி (PM SVANidhi)

## 6.5. தேசிய ஊரகப் பொருளாதாரப் புத்தாக்கத் திட்டம்

தேசிய ஊரகப் பொருளாதார புத்தாக்கத் திட்டம் ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் 2019−20 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு நிதியானது ஒன்றிய மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் பங்களிப்பு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக மிகவும் ஏழைகள் சார்ந்த தொழில் முதலீடுகளையும், திறன் சார்ந்த தொழில் நுட்பங்கள் மூலம் வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படும்.

இத்திட்டமானது பகுதி / வட்டார அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல், மதிப்புக் கூட்டு வளர்ச்சியினை ஊக்குவித்தல், பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாரா துறையில் தனிநபர் மற்றும் கூட்டுத் தொழில் செய்தல், ஊரக தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் நிதிசார்பு சேவைகளை மேம்படுத்துதல் போன்ற உயர்மட்ட செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

மேலும் பண்ணை சார்ந்த வாழ்வாதாரமானது, உற்பத்திக் குழுக்கள் மற்றும் உற்பத்தி சார்ந்த நிறுவனங்களை வலுப்படுத்துதல், இயற்கை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு தொகுப்பு கிராமங்களை உருவாக்குதல், மதிப்புக் கூட்டுதலுக்கான செயல்பாடுகள் முதலியவற்றை உள்ளடக்கியதாக அமையும். மேற்கண்ட வாழ்வாதார செயல்பாடுகளோடு முன்மாதிரி பகுதி அளவிலான கூட்டமைப்புகளால் மேற்கொள்ளப்படும் உணவு, ஊட்டச்சத்து, உடல் நலம் மற்றும் சமூகப் பாலினம் போன்ற சமூக வளர்ச்சி சார்ந்த செயல்பாடுகள் ஒருங்கிணைப்பு செய்யப்படவுள்ளது.

முன் மாதிரி வட்டார/பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கும் நிதி உள்ளாக்க உத்திகள், காப்பீடு மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள், உற்பத்திக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் போன்றவற்றிற்கும் இடையே நெருங்கிய உறவினை ஏற்படுத்துதல் இத்திட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

இத்திட்டமானது முன்னோட்டமாக, மாநிலத்தில் கடலூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் தலா 4 வட்டாரங்கள் என மொத்தம் 20 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

மேற்கண்ட வட்டாரங்கள் கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- இரண்டு வருடங்களுக்கும் மேலாக சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பு செயல்பாட்டில் இருத்தல்.
- 50 சதவீதத்திற்கும் மேலான குழுக்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதோடு அக்கூட்டமைப்பின் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கியிருத்தல்.
- பண்ணை சார்ந்த மற்றும் பண்ணை சாராத வாழ்வாதார நடவடிக்கைகள் செயல்பாட்டில் இருத்தல்.
- பலதரப்பட்ட துறைகளில் சிறந்து விளங்கும் சமுதாய வளப் பயிற்றுநர்கள் தேவையான அளவில் ஈடுபட்டிருத்தல்.

2021-22 ஆம் ஆண்டு இத்திட்டத்திற்கென ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக (60%) 18.00 கோடி ரூபாயும், மாநில அரசின் பங்குத் தொகையான (40%) 12.00 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 30.00 கோடி ரூபாய் நிதியாண்டு செயல் திட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### 6.5.1. முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் கீழ், ஐந்து மாவட்டங்களின் இருபது வட்டாரங்களில் உள்ள 729 ஊராட்சிகளில் இருந்து 50 சதவீதம் ஊராட்சிகளான 365 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு, முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் / பகுதி அளவிலான கூட்டமைப்புகள் 3 கட்டங்களில் கீழ்க்கண்டவாறு உருவாக்கப்படும்.

**அட்டவணை – 6.6**

| கட்டங்கள் | வட்டாரங்கள் | ஊராட்சிகள் | உத்தேச காலம் |
|---|---|---|---|
| I | 5 | 80 | ஏப்ரல் 2019 – மார்ச் 2020 |
| II | 7 | 122 | ஏப்ரல் 2020 – மார்ச் 2021 |
| III | 8 | 163 | ஏப்ரல் 2021 – மார்ச் 2022 |

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை ஒரு முன்மாதிரியான கூட்டமைப்பாக தோற்றுவிக்க கீழ் வரும் உத்திகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

### அ. உட்கட்டமைப்பு நிதி ஏற்படுத்துதல்

அடிப்படை கட்டமைப்புகள் உதாரணமாக சொந்த / வாடகை கட்டிடங்கள் அலுவலக தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள், மின்னணு உபகரணங்கள் முதலியவை ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் அடிப்படை

கட்டமைப்பு நிதியாக முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றுக்கும் வழங்கப்படும்.

2021-22 ஆம் நிதியாண்டில் 163 முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த 2.05 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ. முன்மாதிரி ஊராட்சி / தொகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு செயல் திறன் இடைவெளி நிதி**

2021-22 ஆம் ஆண்டு 50% செயல் திறன் இடைவெளி நிதியாக ஒரு கூட்டமைப்பிற்கு 1.50 இலட்சம் ரூபாய் வீதம் முதல் கட்டமாக 365 முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 5.48 கோடி ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மேற்கண்ட நிதியிலிருந்து அப்பகுதியிலுள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு 9% வட்டி விகிதத்தில் ஒரு சுய உதவிக் குழுவிற்கு தலா ரூ.50,000/- என வழங்கி கூட்டமைப்பின் வருமானத்தை பெருக்கவும், சந்திக்கும் செலவினங்களை ஈடுகட்டவும் பயன்படுத்தலாம்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் செயல்திறன் இடைவெளி நிதியாக 3.00 இலட்சம் ரூபாய் மூன்று

ஆண்டுகளில் 50:30:20 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி விடுவிக்கப்படும். இத்தொகை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் வரவு செலவினங்களுக்கு இடையே ஏற்படும் இடைவெளியை பூர்த்தி செய்ய உதவும்.

**இ. சமுதாயத்தில் நிர்வகிக்கப்படும் பயிற்சி மையங்கள்**

முன்மாதிரி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், பயிற்சி மையங்களை நிர்வகிப்பதன் மூலம் பல்வகை பயிற்சிகளை உறுப்பினர்களுக்கு வழங்கிட இயலும். வட்டார அளவிலான பயிற்சி மையம் அமைக்க தக்க இடம் கண்டறியப்பட்டது. இதன் செயல்பாட்டின் அடிப்படையில் 2021–22 ஆம் ஆண்டு ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தும் 6 மாவட்டங்களில் தலா ஒரு வட்டார பயிற்சி மையம் அமைப்பதற்காக ஒரு மையத்திற்கு 8.00 இலட்சம் ரூபாய் வீதம் 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஈ. மின்னனு நிதி சேவை (Digital Finance)**

மகளிர் சுய உதவிக் குழுக்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் அதன் உறுப்பினர்களின் இருவரால் இயக்கப்படும் (Joint Account) வங்கி கணக்குகளை வங்கிகளில் இணைத்து. (Mapping) வங்கி முகவர்களிடம் பரிவர்த்தனை செய்ய வங்கிகளுக்கு

அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் தொலைதூர வங்கி கிளைகளுக்கு சுய உதவிக்குழு உறுப்பினர்கள் நேரடியாக பயணம் செய்யும் நேரம், பயண செலவு மற்றும் அன்றைய ஊதிய இழப்பு போன்றவைகளிலிருந்து மீள முடிகிறது. இது மட்டுமல்லாது, உறுப்பினர்களிடையே பணப்பரிவர்த்தனை செய்யும் முறை தவிர்க்கப்படுகிறது. வங்கி முகவர்களிடம் அல்லது வங்கிகளில் நேரடியாக மின்னணு மூலம் பரிவர்த்தனைகள் செய்வதால் வங்கி கணக்குகளில் பதிவிறக்கப்படுகிறது **(Transaction History).** இப்பதிவிறக்கங்களின் அடிப்படையில் வங்கிகள், அதிக அளவில் கடன்கள் வழங்க உதவிகரமாக உள்ளது.

## 6.6. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

உலகளவில் தொழிலாளர் பற்றாக்குறை நிலவும் நிலையில், திறன் மேம்பாட்டின் மூலம் மக்கள் வள உபரியை, மக்கள் வள மூலதனமாக மாற்ற தமிழ்நாட்டிற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும். தொழிற்துறையில் சமீப காலத்தில் பெரிய அளவில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியானது அத்துறையில் திறன் பெற்ற மனித சக்திக்குப் பெரும் தேவையை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவைத்

துறையில் பரந்த வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

திறன் பயிற்சியானது வளர்ந்து வரும் பொருளாதார சூழலில் வேலைவாய்ப்புகளை கண்டறிவற்கான முன் தகுதியாக உள்ளது. மேலும் திறனற்ற / பகுதி திறன்பெற்ற இளைஞர்களை வேலைக்கேற்றவர்களாகவும் உருவாக்குகிறது.

### 6.6.1. தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU–GKY)

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இத்திட்டமானது மாநில அரசின் வாயிலாக 60:40 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்காக மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. "ஊரக ஏழை இளைஞர்களைப் பொருளாதார ரீதியாக சுதந்திரம் உடையவர்களாவும் மற்றும் உலகளவில் பொருத்தமான தொழிலாளர் சக்தியாகவும் மாற்றுவதே" இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டம் 18 முதல் 35 வயதிற்கு உட்பட்ட ஊரக ஏழை இளைஞர்களுக்கு நிலையான மாத வருமானம் ஈட்டும் வகையில் திறன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தருவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஊரகப் பகுதியின் ஏழைக் குடும்பங்களில் உள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள் (நலிவடைந்த பிரிவினரான பழங்குடியினர், விதவைகள், கைவிடபட்ட பெண்கள், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு வயது வரம்பு 45 ஆகும்).
- நிரந்தர பதிவெண் பெற்ற வேலைவாப்புடன் கூடிய பயிற்சியில் நிபுணத்துவம் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் / தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தின் கீழ் திட்ட செயலாக்க முகமையாக விண்ணப்பிக்கவும், பயிற்சி வழங்கவும் தகுதியானவர்களாக அனுமதிக்கப்படுகின்றனர்.
- சமூகத்தில் பின் தங்கிய பிரிவினர்களான தாழ்த்த்ப்பட்ட வகுப்பினர் 62%, பழங்குடியினர் 3%, சிறுபான்மையினர் 16%, மாற்றுத்திறனாளிகள் 3% மற்றும் மகளிர் 33% (அனைத்து பிரிவுகளிலும் சேர்த்து) ஆகியோரைக் கட்டாய ஒதுக்கீடு மூலம் சமூக உள்ளாக்கத்தின் கீழ் சேர்ப்பது

இத்திட்டத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.

- பயிற்சி பெற்ற 70% இளைஞர்களுக்கு கட்டாய பணியமர்வு வழங்கப்படும்.
- தொழிற்பயிற்சி பிரிவு, திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பு சந்தையின் தேவைக்கேற்ப பயிற்சி காலமானது 3 முதல் 12 மாதங்கள் வரை வேறுபடும்.
- உண்டு உறைவிடப் பயிற்சியாகவும், உண்டு உறைவிடம் அல்லாத பயிற்சியாகவும் வழங்கப்படுகிறது.
- இளைஞர்களைப் பயிற்சிக்காக ஒன்றுதிரட்டுவதும், சமுதாய அடிப்படையிலான கண்காணிப்பும் களப்பணியாளர்களான சமுதாய வளப் பயிற்றுநர் (வேலைவாய்ப்பு) மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் – (திறன்) மூலம் எளிதாக்கப்பட்டுள்ளது.
- பயிற்சியானது தொழிற்சார்ந்த திறன்கள் மற்றும் தொழிற்சாரா திறன்களான ஆங்கில அறிவு, அடிப்படை கணினி அறிவு, மென் திறன்கள் மற்றும் பணியிடப் பயிற்சி (OJT) ஆகியவற்றிற்கான பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாகும்.

- பயிற்சியில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மதிப்பீடு மற்றும் சான்றிதழ்கள் அரசு நிறுவனங்களான தேசிய தொழிற்பயிற்சி குழு (NCVT) மற்றும் திறன் பிரிவு குழுவின் மூலம் (SSC) வழங்கப்படுகிறது.
- குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000/– அல்லது மாநிலத்தில் பகுதித் திறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறையாமல், பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களுக்கு பணியமர்வின் போது ஊதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.
- இத்திட்டம் பணியமர்வுக்கு பின்பான உதவித் தொகை, பணி முன்னேற்றம் மற்றும் இடம்பெயர்வு ஆதரவு மையம் ஆகிய வசதிகளோடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பணியமர்வுக்கு வழிவகை செய்கிறது.
- பணியமர்வுக்கு பின் ஓராண்டு தொடர் கண்காணிப்பு செய்யப்படுகிறது.
- இளைஞர்களை ஒன்று திரட்டும் நிகழ்வில் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கப்படுகிறது.

அரசு முதன்மை செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட திட்ட ஒப்புதல் குழு மூலம் இளைஞர்களுக்கு பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு திட்டங்கள் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்த திட்ட செயலாக்க முகமைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் 1,026.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 84,000 இளைஞர்கள் பயிற்சி பெற்றிட ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. கோவிட்–19 தொற்று காரணமாக ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஆண்டு செயல் திட்ட காலத்தை 2023 வரை நீட்டித்துள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 84,000ல் இதுவரை 17,493 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் 6,561 இளைஞர்கள் பணிமர்த்தப்பட்டுள்ளனர். தொழில் பிரிவு வாரியாக பயிற்சி பெற்ற விபரம் பின்வருமாறு:

**அட்டவணை 6.7**

| வ. எண் | தொழில் பிரிவின் பெயர் | பறிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை | 91 |
| 2 | ஆயத்த ஆடை | 176 |
| 3 | வாகனங்கள் சார்ந்த பயிற்சி | 1,037 |
| 4 | வங்கி, நிதி சேவை மற்றும் காப்பீடு | 507 |
| 5 | அழகு கலை | 534 |

| வ. எண் | தொழில் பிரிவின் பெயர் | பறிற்சி பெற்றவர்கள் |
|---|---|---|
| 6 | மூலதன பொருட்கள் | 231 |
| 7 | மின்னியியல் | 291 |
| 8 | சுகாதாரம் | 2,795 |
| 9 | தகவல் தொழில்நுட்பம் | 3,834 |
| 10 | சில்லரை வணிகம் | 1,256 |
| 11 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | 1,798 |
| 12 | ஆயத்த ஆடை வடிவமைப்பு மற்றும் வீட்டு அலங்காரம் | 1,992 |
| 13 | மின்னணுவியல் மற்றும் வன்பொருள் | 546 |
| 14 | கருவியல், ஆட்டோமேஷன், கண்காணிப்பு மற்றும் தொடர்பு | 99 |
| 15 | தளவாடங்கள் | 2,057 |
| 16 | துணிநூல் மற்றும் கைத்தறி | 249 |
| **மொத்தம்** | | **17,493** |

### 6.6.2. திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலி (கௌசல் பஞ்சி)

18 முதல் 35 வயதிற்குட்பட்ட கிராமப்புற இளைஞர்களின் திறன் விபரங்களை சேகரித்து பதிவு செய்திட ஒன்றிய அரசின் ஊரக மேம்பாட்டு அமைச்சகம் திறன் வளர்ப்பு பயிற்சிக்கான பதிவு செயலியை (கௌசல் பஞ்சி) துவக்கியுள்ளது. திட்ட செயலாக்க முகமைகள் இச்செயலி மூலம்

பயிற்சியாளர்களின் திறன் தேவைகளை பதிவு செய்வதில் பங்களிக்க முடியும்.

ஒரு இளைஞர் ஏற்கனவே உள்ள சமூக பொருளாதார சாதி வாரியான கணக்கெடுப்பின் (SECC) விவரங்களை பயன்படுத்தியோ அல்லது புதிய விண்ணப்பதாராகவோ விவரங்களை உள்ளிடுவதன் மூலம் தன்னை பதிவு செய்யலாம்.

இச்செயலி மூலமாக 5.71 லட்சம் இளைஞர்களின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடத்தை பெற்றுள்ளது.

### 6.6.3. ஊரக சுய வேலை வாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் (RSETIs)

கிராமப்புற இளைஞர்களிடையே வேலையின்மையைக் குறைக்கும் நோக்கத்தோடு கனரா வங்கி மற்றும் சிண்டிகேட் வங்கியால் ஊரக வளர்ச்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு பயிற்சி (RUDSETI) நிறுவனங்கள் பெங்களூரு, மதுரை போன்ற நகரங்களில் ஆரம்பிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரகப் பகுதிகளில் கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சியளித்து சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி அவர்களை தொழில் முனைவோராக உருவாக்கிட பல்வேறு வங்கிகள் மூலம் ஊரக சுய வேலைவாய்ப்பு

பயிற்சி நிறுவனங்கள் (RSETIs) அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற பயனாளிகள் அனைவரும் சுய வேலைவாய்ப்பு மேற்கொள்ளவும், அதற்கான வங்கிக்கடன் உதவி பெற வழிகாட்டவும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

இந்நிறுவனங்களில் பயிற்சி பெறும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள இளைஞர்களுக்கான பயிற்சி செலவினத்தையும், பயிற்சி நிறுவனத்தின் உள்கட்டமைப்பிற்கான நிதி உதவியையும் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் வழங்குகிறது. மாநில அரசுகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) போன்ற மேம்பாட்டு நிறுவனங்களும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் (RSETIs) பயிற்சித் திட்டங்களுக்கு நிதி உதவிகளை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் 30 ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் மூலமாக ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களைப்

பயிற்சிக்காக ஒன்று திரட்டுவதிலும், அதற்கான நிதி மீளவழங்குதல் மற்றும் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதிலும் முக்கியப் பங்கு வகித்து வருகிறது.

### 6.7. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) 2001 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இச்சங்கம் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் பதிவு செய்யப்பட்டதாகும். இம்மையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாக, திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள் மற்றும் மாநில / மாவட்ட / வட்டார அளவிலான முதன்மைப் பயிற்றுநர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குதல், திட்டத்திற்கான பயிற்சி உபகரணங்கள் / கையேடுகள், மற்றும் பயிற்சி சார்ந்த பிற புத்தகங்கள் உருவாக்குதல், சமூக, பொருளாதார மேம்பாடு தொடர்பான சமுதாயம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்ட பல்வேறு

திட்டங்களின் நடவடிக்கைகளின் சிறந்த முயற்சிகள், உத்திகள், படிப்பினைகள் மற்றும் விளைவுகளுக்கான அறிவுசார் மையமாக செயல்படுதல் ஆகும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தேசிய நலவாழ்வு குழுமம் (**NHM**) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் தொகை அடிப்படையிலான தொற்றா நோய்கள் (**NCD**) கண்டறியும் திட்டம் டி.என்.வி.ஆர்.சி மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 35 மாவட்டங்களில் உள்ள 91 வட்டாரங்கள் மற்றும் 2 மாநகராட்சிகளில் (கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி) 1,902 சமுதாய வளப் பயிற்றுநர்களைக் (சுகாதாரம்) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தின் மூலம் உருவாக்கிய சமூக மூலதனமான சமுதாய வளப் பயிற்றுநர்களை தொடர்ந்து வலுப்படுத்துவதின் விளைவாக செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் பயன்களை டி.என்.வி.ஆர்.சி, வாயிலாக, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சென்னை மாவட்டத்தின் நதிகள் சீரமைப்பு திட்டப் பகுதிகளான, செம்மஞ்சேரி, கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் (சுனாமி நகர்) பகுதிகளில்

மறுகுடியமர்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் சென்றடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கமானது, அவர்கள் இயல்பு நிலையினை அடைந்திடவும், மறுகுடியமர்த்தப்பட்டதன் மூலம் ஏற்பட்ட சிரமங்களிலிருந்து மீளும் திறனைப் பெற்றிடவும் இக்குடியிருப்புவாசிகளை நல்வழிப்படுத்துவது ஆகும்.

**TNVRC** தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால், தேசிய வள மையமாக (**NRO**) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தேசிய வள மையத்தின் முக்கிய நோக்கமானது மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான செயல்பாடுகள், முதியோர் பாதுகாப்பு, பண்ணை மற்றும் பண்ணைசாரா வாழ்வாதாரம், நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் உயர்நிலைக் கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகளை பிற மாநில ஊரக வாழ்வாதார இயக்கங்களுக்கு வழங்கும்.

### 6.8. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம் மாத இதழ்

பெண்களுக்கு மிகவும் தேவையான பயனுள்ள செய்திகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்

திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்த விபரங்களைத் தெரிவிக்கும் தகவல், கல்வி மற்றும் தொடர்பு சாதனமாக செயல்பட ஓர் மாத இதழ் தேவைப்பட்டது. அதன் விளைவாக முற்றம் சங்கம், தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் 27வது பிரிவின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டு முதல் முற்றம் மாத இதழ் மாதந்தோறும் நன்முறையில் வெளியிடப்பட்டு வருகிறது. முதலில் முற்றம் மாத இதழ் 10,000 பிரதிகளுடன் வெளியிடப்பட்டது. தற்போது, முற்றம் மாத இதழ், நவீனப்படுத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் சந்தா செலுத்திய 80,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு இதன் மூலம் 18 இலட்சம் உறுப்பினர்களைச் சென்றடைகிறது. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தொடர்பான பல்வேறு செய்திகளை இவ்விதழ் வெளியிட்டு விழிப்புணவுர்களை ஏற்படுத்துகிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த செயல்பாடுகள் மற்றும் மகளிருக்கான அனைத்து திட்டங்கள்

தொடர்பான விபரங்களைச் சேகரித்து, அதை அனைத்துத் தரப்பினருக்கும் தொடர்ச்சியாக சென்றடையும் விதமாக முற்றம் இதழில் பதிவிட்டு வெளியிடச் செய்வதே இதன் முக்கிய குறிக்கோள் ஆகும். முற்றம் மாத இதழில், மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் உன்னத வெற்றிக் கதைகள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் போன்றவற்றின் சாதனைகள் மற்றும் மகளிர் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு துறைகளின் திட்டங்கள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான உரிமைகள், பெண் கல்வி, பெண்கள் பாதுகாப்புச் சட்டங்கள், வறுமை ஒழிப்புச் செயல்பாடுகள், சேமிப்பின் முக்கியத்துவம், பெண் தொழில் முனைவோர் முன்னேற்ற செயல்பாடுகள், கூட்டுத்தொழில் நடவடிக்கைகள், இயற்கை வேளாண்மை, உடல் நலம் மற்றும் கைதேர்ந்த மருத்துவக் குறிப்புகள், உணவு, ஊட்டச்சத்து, சுகாதாரம், பாலின சமத்துவம், தன் சுத்தம் குறித்த ஆலோசனைகள், மாற்றுத் திறனாளிகளின்

செயல்பாடுகள், மனநலம் மற்றும் தேவைகள் சார்ந்த பயிற்சிகள் போன்ற தகவல்கள் இடம் பெறுகின்றன.

### 6.9. சிறந்த சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள் மற்றும் வங்கிகளுக்கான விருது

சிறந்த சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் பங்களிப்புகளை அங்கீகரித்து அவர்களை பாராட்டும் விதமாக விருதுகள் வழங்கப்படுகின்றன. மாநில அளவில், ஊரகப் பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், 5 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், 5 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், நகர்ப்புறப் பகுதிகளில் 10 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், 5 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும் சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், ஊரகப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா இருபத்தி ஐந்தாயிரம் ரூபாயும், ஒரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், ஒரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும், நகர்ப்புறப் பகுதிகளில் சிறப்பாக செயல்படும் 3 சுய உதவிக் குழுக்களுக்கு தலா இருபத்தி ஐந்தாயிரம் ரூபாயும், ஒரு பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு ஒரு இலட்சம் ரூபாயும் சான்றிதழ்களுடன் கூடிய விருதுகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், சுய உதவிக் குழு இயக்கத்திற்கு முழு ஆதரவு நல்கி அவைகளின் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும் வங்கிகளின் சேவையினைப் பாராட்டி ஊக்குவிக்கும் விதமாக சான்றிதழ்களுடன் கூடிய விருதுகள் வழங்கப்படுகின்றன.

## மின்மதி – இணையவழிக் கற்றல் மற்றும் மின் வானொலிக்கான கைபேசி செயலி

தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வெற்றிக்கதைகள், வழிகாட்டு ஆலோசனைகள், அறிவுரைச் செய்திகள், எண்ணங்கள்

பரிமாற்றம், முக்கிய தகவல்கள் போன்ற விவரங்கள் அடங்கிய மின்கற்றல் தளம் (e–Learning platform) ஒன்று உருவாக்கப்பட்டு, அவைகளை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கைபேசி வாயிலாக அறிந்து கொள்ளவும், கற்றுக்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. துவக்கத்தில், இந்த இணையவழிக் கற்றல் நடைமுறையில் உள்ள மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விபரங்களை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அறிந்து கொள்ள உறுதுணையாக இருக்கும். பிறகு இதுவே எதிர்காலத்தில் தகுதியான வளப்பயிற்றுநர்களை இணையதளம் வாயிலாக உரிய தேர்வுகள் நடத்தி தேர்ந்தெடுக்க, மின் சான்றிதழ் திட்டத்துடன் இணைக்கப்படும். அதன் மூலம் இக்கற்றல் முறை முக்கியமான பயிற்சி வழிமுறையாக மாறி பிற சமூக ஊடகங்களுடன் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக நேரத்தையும், நிதியையும் சேமிக்கும் தளமாக விளங்குகிறது.

சுய உதவிக் குழுக்களின் ஆளுமை, நிதி உள்ளாக்கம், வாழ்வாதாரம், திறன் வளர்ப்பு பயிற்சி, தொழில் மேம்பாடு, சந்தைப்படுத்துதல், ஊராட்சி அமைப்புகள் – சமுதாயம் சார்ந்த அமைப்புகள் கூட்டாண்மை போன்றவைகளுக்காக இணையவழிக் கற்றல் பாடங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

இணையவழிக் கற்றலுக்கான இப்பாடங்களுடன் எதிர்காலத்தில் சுய உதவிக் குழு மகளிரின் முழுமையான வளர்ச்சியினை இலக்காக கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த செய்திகளுடன் சமுதாய வானொலியும் விரைவில் செயல்படவுள்ளது.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த வறுமைக் கோட்டிற்கான இணையதள சேவைகள் (TIPPS)

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வறுமைக் கோட்டிற்கான இணையதள சேவைகள் என்ற பிரத்யேக இணையதளத்தினை உருவாக்க தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தினால் சிறப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்விணையதளத்தின் முக்கிய நோக்கங்கள்:

- ஒருங்கிணைந்த வறுமைக்கோட்டிற்கான விவரங்களைப் பராமரித்தல் மற்றும் நிர்வாகித்தல்.
- மாநில அரசால் வழங்கப் பெறும் பயன்கள் மற்றும் சேவைகளை பயனாளிகள் பெறுவதற்கு ஒருங்கிணைப்பு செய்தல்.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வறுமைக் கோட்டிற்கான இணையதள சேவையில் மாநிலத்திற்கான வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் விவரங்கள் பராமரிக்கப்படுகிறது.

## 6.10. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) ஊரகப் பகுதிகளில் தொழில் மேம்பாடு, நிதி சேவைகளுக்கு வழிவகை செய்தல் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் ஊரக சமுதாயத்தில் நிலையான வளர்ச்சி மற்றும் வளத்தினை உருவாக்க பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 70:30 என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் சீரமைக்கப்பட்டு 2021-22 ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ. 212.69 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### திட்டத்தின் நோக்கங்கள்

தமிழ்நாட்டிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியங்களில் ஊரகத் தொழில் முனைவுகளை உருவாக்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.

**திட்ட செயலாக்கப் பகுதிகள்**

இத்திட்டமானது 31 மாவட்டங்களில் (சென்னை, தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், தர்மபுரி, கன்னியாகுமரி மற்றும் திருப்பத்தூர் நீங்கலாக) 120 ஒன்றியங்களில் 3994 கிராம ஊராட்சிகளில் 6 வருடங்களில் (2017 முதல் 2023 வரை) செயல்படுத்தப்படும்.

**நிதிப்பங்கீடு**

இத்திட்டத்திற்கான மதிப்பீடு நிதி ரூ.919.73 கோடி (142.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும். இத்திட்ட நிதியானது உலக வங்கிக்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 70:30 என்ற நிதி விகிதத்தில் அமைந்துள்ளது. இதில் உலக வங்கி கடனுதவி ரூ. 643.81 கோடி (100 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) மற்றும் தமிழ்நாடு அரசின் பங்களிப்பு ரூ. 275.92 கோடி (42.8 மில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும்.

**நிறுவன அமைப்பு**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கச் சங்கம் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975 ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இச்சங்கம் திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கிறது.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மாவட்ட ஊரகப் புத்தாக்கச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு திட்டத்தின் செயல்பாட்டிற்கு வழிகாட்டவும், துணை நிற்கவும் உதவிபுரிகின்றன. மாநில திட்ட செயலாக்க அலகிற்கு வழிகாட்டவும், கொள்கை முடிவெடுக்கவும் மற்றும் ஒத்துழைப்பு நல்கவும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கச் சங்கத்தின் பொதுக்குழு மற்றும் செயற்குழு முக்கிய அமைப்புகளாகத் திகழும். மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவிலான திட்ட மேலாண்மை அலகுகள் மூலம் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை செயல்படுத்தும் மாநில திட்ட மேலாண்மை அலகின் தலைமைச் செயல் அலுவலராக இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நிலையில் ஒருவர் நியமிக்கப்பட்டு, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் துணையுடன் திட்ட செயல்பாடுகளை செயல்படுத்துதல், மேற்பார்வையிடுதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- 24 மாவட்டத் திட்ட மேலாண்மை அலகுகள் மாவட்டச் செயல் அலுவலர் தலைமையில்

செயல்பட்டு வருகின்றன. மாவட்டச் செயல் அலுவலருக்கு திட்டச் செயலாக்கத்தில் உறுதுணையாக பணி முன்னேற்றத்தை கண்காணிக்க நான்கு செயல் அலுவலர்கள் உள்ளனர்.

- ஊராட்சி ஒன்றிய அளவிலான திட்ட மேலாண்மை அலகானது 31 மாவட்டங்களில் 120 ஒன்றியங்களில் வட்டார அணித் தலைவர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. திட்ட செயல்பாட்டில் ஊராட்சி ஒன்றிய அணித்தலைவருக்கு உறுதுணையாக மூன்று திட்டச் செயலர்கள் உள்ளனர்.

**திட்டப் பயனாளிகள்**

சுயஉதவிக்குழுப் பெண்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் முக்கிய இலக்கு ஆவர். வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத துறைகளின் உற்பத்தியாளர்கள் (திட்டப்பகுதியிலுள்ள உற்பத்தியாளர்குழு, உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்) பயனாளிகள் ஆவர்.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊரகத் தொழில்களை வளர்க்கவும், மேம்படுத்தவும்

தனிநபர் தொழில் முனைவோர்களை (நுண், குறு, சிறு) உருவாக்கவும், உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் சமுதாய திறன் பள்ளிகள் மற்றும் சமுதாய பண்ணைப் பள்ளிகள் மூலம் திறன் வளர்ப்புக்கும் ஆதரவு தரும்.

**திட்டத்தின் முதன்மைக் கூறுகள்**

இத்திட்டம் கீழ்க்கண்ட நான்கு முதன்மைக் கூறுகளை உள்ளடக்கியதாகும்.

1. ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு
2. தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்
3. திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புகள்
4. திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மைக் கட்டமைப்பு, பெண்கள் (பாலின சமத்துவம்), தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பம், கூடுகை மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவை இத்திட்டத்தில் அனைத்து கூறுகளுடனும் முழுமையாக இணைந்து செயல்படும்.

### 6.10.1. ஊரகத் தொழில் முனைவுக்கு ஏற்ற சூழல் மேம்பாடு

இத்திட்டக்கூறின் முக்கிய நோக்கம் ஊரகப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற ஏதுவான சூழலை உருவாக்குவதன் மூலம் ஏற்கனவே உள்ள தொழில்கள் மற்றும் புதிய தொழில்களை ஊக்குவித்து வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதாகும். மாவட்டப் பகுப்பாய்வு, மதிப்புத் தொடர் ஆய்வு, மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் மற்றும் ஓரிட சேவை மையம் ஆகியவை இதில் அடங்கும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய சாத்திய கூறுகள் மிக்க தொழில் வகைகளைக் கண்டறிதல், ஊரகத் தொழில்களை மேம்படுத்துதல் (குழு மற்றும் தனிநபர்), ஏற்கனவே உள்ள ஊரகத் தொழில்களை வலுப்படுத்துதல், சந்தை வாய்ப்புகள் மற்றும் மதிப்புத் தொடர் வளர்ச்சி வாய்ப்புகளைக் கண்டறிதல், தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் மற்றும் தொழில்களின் நிலைத்த தன்மையை உருவாக்குவதற்காக சிறந்த வழிமுறைகளை தெரிவித்தல் ஆகியவற்றை இக்கூறு கொண்டுள்ளது. இத்திட்டக்கூறின் கீழ் மகளிரால் நடத்தப்படும் நிறுவனங்கள் மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஏற்ற பசுமை

சார்ந்த நிறுவனங்கள் வளர்ச்சிப் பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

**உள்ளடக்கிய முதலீட்டுப் பகுப்பாய்வு உத்தி மற்றும் திட்டமிடல்**

**i. மாவட்டப் பகுப்பாய்வு:**

உள்ளூர் சூழலில் தொழில் மேம்பாட்டிற்கான முக்கிய துறைகள்/பிரிவுகள், துணைப் பிரிவுகள் மற்றும் உற்பத்திப் பொருட்களைக் கண்டறிந்து முன்னுரிமைப்படுத்துவதே மாவட்டப் பகுப்பாய்வின் முக்கிய நோக்கமாகும். மாவட்டப் பகுப்பாய்வு அறிக்கை என்பது பிற துறைகளின் ஆலோசனைகள் மற்றும் இரண்டாம் நிலை தகவல்கள் அடங்கிய ஆய்வு அறிக்கை ஆகும். இவ்வறிக்கை ஒரு மாவட்டத்தில் குறிப்பிட்ட துறைகளில், துணைப் பிரிவுகளில் மற்றும் உற்பத்திப் பொருட்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை கண்டறிந்து, ஆழமான மதிப்பீடு செய்து, அதற்கு அடுத்த நிலையான மதிப்புத் தொடர் அணுகுமுறைக்கு ஆய்வு செய்ய உதவிகரமாக உள்ளது.

மாவட்டப் பகுப்பாய்வு அறிக்கையானது, அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவினால் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

**ii. மதிப்புத் தொடர் ஆய்வு:**

ஏற்கனவே, மாவட்டப் பகுப்பாய்வு மூலம் கண்டறியப்பட்டு, முன்னுரிமைப் படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள், பல்வேறு துறைகளின் துணை பிரிவுகள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து, அதில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றை ஆழமாக புரிந்து கொண்டு பெண்கள், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்டோர்க்கு முக்கியத்துவம் தந்து, தொழில் மேம்பாட்டிற்கான உத்திகளை உருவாக்க இந்த மதிப்புத் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு, சந்தை வாய்ப்புகளையும், அதில் ஏற்படும் தடைகளையும் அறிந்து, தொழில் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தவும் உதவிகரமாக இருக்கும்.

**iii. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்:**

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் என்பது உள்ளூர் மக்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள், உற்பத்தியாளர்கள், தொழில் முனைவோர்கள், இளைஞர்கள் ஆகியோருடன் கலந்து ஆலோசனை செய்து ஊரக சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும், தொழில் மேம்பாட்டிற்காகவும் கிராம ஊராட்சி, ஊராட்சி

ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் தொழில் வளர்ச்சியினை உள்ளடக்கிய முதலீட்டுத் திட்டங்களை தயார் செய்யும் ஒரு வழிமுறையாகும். இந்த மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித்திட்டம் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென உருவாக்கப்பட்ட கைபேசி செயலியின் மூலம் 3994 ஊராட்சிகளில் 2 சமுதாய வல்லுநர்கள், சுய உதவிக்குழு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றில் இருந்து தலா ஒரு பிரதிநிதி மற்றும் 1 கிராம தொழில் முனைவோர் ஆகிய 6 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவின் மூலம் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தகவல்கள் உள்ளீடு செய்யப்பட்டு, கிராம முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கிராம முதலீட்டுத் திட்டமானது, ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றிய முதலீட்டுத் திட்டமும், மாவட்ட அளவில் ஒன்றிணைத்து மாவட்ட முதலீட்டுத் திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

**நிறுவன மேம்பாடு சார்ந்த சேவைகள்**

**i. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சேவைகள்:**

சுய உதவிக் குழு உறுப்பினர்களில் மக்களிடையே பணியாற்றிய அனுபவமுள்ள மற்றும்

சேவைகளை மக்களிடம் கொண்டு சேர்க்கக்கூடிய திறன்களை உடைய உறுப்பினர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் தொழில் சார் சமூக வல்லுநர்கள் என்று அழைக்கப்படுவர். பல்வேறு துறைகளில் அனுபவம் வாய்ந்த இவர்கள் வேலை வாய்ப்புகளை கண்டறிதல் மற்றும் தொழில் நிறுவனங்களை உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்வர். தனி நபர் நிறுவனங்கள் மற்றும் குழு நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல், திறன் பயிற்சி தேவைப்படுவோரை கண்டறிதல் ஆகியவை தொழில் சார் சமூக வல்லுநரின் முக்கிய பணியாகும். தொழில்சார் சமூக வல்லுநர்களைக் கண்டறிந்து, நியமித்து, அவர்களின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பணிகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வாயிலாக மேற்கொள்ளப்படும்.

**ii. ஓரிட சேவை மையம்:**

ஓரிட சேவை மையம் என்பது ஊரகத் தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்குவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத் தேவையான சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் சேவை மையம் ஆகும். தொழில் திட்டம் தயாரித்தல், மதிப்பீடு செய்தல், தொழில் நுட்ப விவரங்கள், திறன் பயிற்சி குறித்த விவரங்கள், சந்தை பற்றிய தகவல்கள், நிதி இணைப்புகள் ஆகிய சேவைகள்

ஓரிட சேவை மையம் மூலம் வழங்கப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் தொடர்ச்சியான அமைப்பின் அடிப்படையில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஓரிட சேவை மையம் நிறுவப்படும்.

**தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், மதிப்புச் சங்கிலி வலுப்படுத்துதல் மற்றும் கூட்டாண்மை**

**i. தனிநபர் நிறுவனங்கள்:**

தனிநபர் நிறுவனங்கள் எனப்படுபவை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இணைந்து, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும். தனி நபர் நிறுவனங்கள் நுண், குறு, சிறு நிறுவனங்கள் என வகைப்படுத்தப்படுகிறது. தொழில் நிறுவனங்களின் முதலீடு ரூ. 5 இலட்சம் வரை இருந்தால் அவை நுண் நிறுவனங்கள் என்றும், ரூ. 5 இலட்சம் முதல் ரூ. 15 இலட்சம் வரை இருந்தால் அவை குறு நிறுவனங்கள் என்றும், ரூ. 15 இலட்சம் முதல் ரூ. 30 இலட்சம் வரை இருந்தால் அவை சிறு நிறுவனங்கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் 6000 நுண் நிறுவனங்கள், 500 குறு நிறுவனங்கள், 120 சிறு நிறுவனங்கள் கண்டறியப்பட்டு, அவர்களுக்குத் தேவையான தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்குதல்,

நிதி சேவைகளுக்கு வழிகாட்டுதல், தொழில் தொடங்குவதற்கும் மற்றும் தொடர்வதற்கும் தேவையான சேவைகளை வழங்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

**ii. குழு நிறுவனங்கள்**

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தியாளர் குழு, தொழில் குழு மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்படும்

**அ. உற்பத்தியாளர் குழுக்கள்:**

உற்பத்தியாளர் குழு என்பது உற்பத்தியாளர்கள், குழுவாக ஒன்றிணைந்து உற்பத்தித் திறனை அதிகரித்தல், உபரி விளைப் பொருட்களை ஒன்று திரட்டுதல், இதர கூட்டு நடவடிக்கைகளுக்காக ஒன்றிணைந்து உற்பத்தியாளர்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கும் வகையில் கிராம அளவில் குறிப்பிட்ட பொருளுக்காக அல்லது துணைப் பொருளுக்காக செயல்படுபவை ஆகும். இந்த குழுக்கள் 30 முதல் 150 வரை உறுப்பினர் வரம்பைக் கொண்டிருக்கும். இத்திட்டத்தின் கீழ் 2021-22 நிதியாண்டில் 2000 உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.

**ஆ. தொழில் குழுக்கள்:**

தொழில் குழு என்பது ஒத்த தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அதன் மூலம் கிடைக்கும் இலாப நட்டங்களை தங்களுக்குள்ளாக பகிர்ந்து, அனைத்துத் தொழில் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துகிற கூட்டு உரிமையைக் கொண்ட உறுப்பினர்களின் குழுவாகும். இந்த குழுக்கள் 10 முதல் 30 வரை உறுப்பினர் வரம்பை கொண்டிருப்பதோடு, அது சட்ட பூர்வமாக (சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்கள் பதிவு / கூட்டாண்மை நிறுவனம் / வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனத்தின் கீழ்) பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும்.

ஒரு தொழில் குழுவின் குறிக்கோள் என்பது உற்பத்திச் செலவுகளை குறைத்தல், தரத்தை மேம்படுத்துதல் மற்றும் கூட்டு முயற்சி மூலம் வருவாயை அதிகரித்தல் ஆகும். இத்திட்டத்தின் கீழ் 2021-22 நிதியாண்டில் 500 தொழில் குழு அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.

**இ. உற்பத்தியாளர் கூட்டமைப்பு:**

உற்பத்தியாளர் கூட்டமைப்பு என்பது உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்தல், அவர்களின் பொருட்களுக்கான மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்துதல் மற்றும் அவர்களின் பொருளாதாரத்தை

அதிகப்படுத்துவதற்கான சேவைகளை வழங்கும் ஓர் உயர் நிலை அமைப்பாகும். உற்பத்தியாளர் கூட்டமைப்பில் 300 முதல் 3000 உற்பத்தியாளர்கள் ஒன்றிணைந்து செயல்படுவர். கிராம அளவில் உருவாக்கப்படும் உற்பத்தியாளர் குழுக்கள் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்படும். அனைத்து உற்பத்தியாளர் கூட்டமைப்புகளும் சட்டபூர்வமாக பதிவு செய்யப்பட்ட அமைப்பாக இருக்கும். உற்பத்தியாளர் கூட்டமைப்பானது உற்பத்தியாளர்களிடமிருந்து உற்பத்திப் பொருட்களை திரட்டுதல், அவர்களுக்கு தரமான உள்ளீடு வழங்குதல், உற்பத்திப் பொருட்களை முதன்மை மற்றும் இரண்டாம் நிலை செயலாக்கம் செய்தல், அடையாளப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற உயர் வரிசை மதிப்புக் கூட்டல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் உற்பத்தியாளர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்தும்.

இத்திட்டத்தின் கீழ் 2021-22 நிதியாண்டில் 25 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்படும்.

### 6.10.2 தொழில் முனைவுக்கான திட்ட நிதி வழங்கல்:

ஊரகப் பகுதிகளில் உருவாக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில்களுக்கு தேவையான நிதியினை இணை மானிய நிதி திட்டத்தின் (Matching Grant Program) மூலமும், பிற நிதி நிறுவனங்களின் நிதி சேவை மூலமும் பெற்றுத் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**இணை மானிய நிதி திட்டம்**

இணை மானிய நிதி திட்டமானது, கடன் பெற்றவர்கள் கடன் தொகையை முறையாக திருப்பிச் செலுத்துவதை ஊக்கப்படுத்திடவும், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் தொழில்களுக்கான கடன் தொகையினை விரைவாக வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இணை மானிய நிதி திட்டத்தில், தொழில்களுக்கு கடன் வழங்கும் வங்கிக்கு (Partnering Financial Institution) கடன் தொகையில் 30% நிதி இத்திட்டத்தின் மூலம் விடுவிக்கப்பட்டு, வங்கி இருப்பில் வைக்கப்படும். கடன் பெற்ற தனிநபர் மற்றும் குழுக்கள் முறையாக 70% கடனை திருப்பிச் செலுத்திய பின்பு மீதமுள்ள 30% திட்ட நிதியினை வங்கிக் கடனுக்கு ஈடாக செலுத்தி எஞ்சிய கடன் தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்குப் பெறலாம். இதன் மூலம் தொழில் மேம்பாட்டிற்காக கடன்

பெற்றவர்கள் தொழிலில் முழு கவனம் செலுத்தி இலாபகரமாக நடத்தவும் கடனை முழுமையாக திருப்பிச் செலுத்தவும் வழிவகை செய்யப்படுகிறது.

இணை மானிய திட்டத்தின் கீழ் முதல் தலைமுறை தொழில் முனைவுகள், மகளிரால் நடத்தப்படும் தொழில்கள், தொழில் குழுக்கள், உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், மாற்றுத் திறனாளிகளால் மேற்கொள்ளப்படும் தொழில்கள் மற்றும் நிதி பெறுவதில் இடர்பாடுள்ள தொழில்கள் ஆகியவற்றிற்க்கு நிதி ஆதாரத்தை ஏற்படுத்துதல் முக்கிய நோக்கமாகும்.

**புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்கள்**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்களான கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்:–

i. ஊரக கைவினைஞர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக நெசவுத் தொழில், மண்பாண்டங்கள் மற்றும் கைவினை தொழில்களிலும்,

ii. உணவுத் துறையை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பாக – உள்ளூர் மற்றும் பாரம்பரிய உணவுகளை பிரபலபடுத்துவதற்காக ஒரு

வேளாண் உணவு தொகுப்பு மையம் அமைப்பதிலும்,

iii. சூரிய சக்தி சார்ந்த தொழில்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பசுமைத் தொழில்களிலும் புதுமையான முறைகள் புகுத்தப்படும்.

**நுண் தொழில் நிறுவன நிதி**

இத்திட்டத்தின் மூலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வாயிலாக 88,349 நுண் மற்றும் குறு நிறுவனங்களுக்கு ரூ. 259.78 கோடி கடன் உதவி கோவிட்–19 சிறப்பு நிதி உதவி தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட கடன் தொகையினை திரும்பச் செலுத்துவதன் மூலம் பெறப்பட்ட நிதியை நுண் தொழில் நிறுவனங்களுக்கான கடனாக, நுண் தொழில் நிறுவன நிதி வழங்கப்படும். சுய உதவிக்குழு உறுப்பினர்கள் / சுய உதவிக்குழு குடும்ப உறுப்பினர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் ஊரகப்பகுதிகளில் வணிகம் மற்றும் தொழில் செய்வதற்கு ஏதுவான ஒரு சூழலை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இத்திட்டம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (PLF) மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் (VPRC)

ஆகியவற்றின் மூலம் தொழில் முனைவோர்களை கண்டறிதல், தேர்ந்தெடுத்தல், மதிப்பீடு செய்தல், ஆவணங்கள் சரிபார்ப்பது மற்றும் நிதி வழங்குதல் போன்ற வழிகாட்டு முறைகளை பின்பற்றி செயல்படுத்தபட உள்ளது.

### 6.10.3 திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் நிலையான ஊதியம் மற்றும் சுய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகும். அதிக மதிப்புள்ள விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு பொருத்தமான திறன்களை ஊக்குவித்தல் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கு உகந்த திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு மூலம் தொழில் முனைவோர்களை உருவாக்குதல் ஆகும்.

### வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கான பயிற்சிக்கு முன்னும் பின்னும் வழங்கப்படும் சேவைகள்

இத்துணைக் கூறு திறன் பயிற்சிக்கான இலக்கு இளைஞர்களை கண்டறிதல், சேர்த்தல், பயிற்சிக்கு முன்னும் பின்னும் வழங்கப்படும் சேவைகளை உள்ளடக்கியதாகும்.

**புலம் பெயர்ந்தோர் ஆதரவு மையம்:**

திறனுள்ள கிராமப்புற இளைஞர்கள் நல்ல வேலை வாய்ப்புகளுக்காகவும், சிறந்த மேம்பட்ட வாழ்க்கைத் தரத்திற்காகவும், வேலைக்கு ஏற்ற ஊதியத்திற்காகவும் பெருநகரங்களுக்கு இடம் பெயர்கின்றனர். ஆனால் பெரும்பான்மையான இளைஞர்கள், இந்த பெருநகரங்களின் அன்றாட வாழ்க்கை முறைகளுக்கும், சமூக – பொருளாதார மாற்றங்களுக்கும், தினசரி தேவைகளின் செலவுகளுக்கும் ஈடு கொடுக்கும் வகையிலான வேலை வாய்ப்புகள் கிடைக்காமல், அவற்றை அடைவதற்கான வழிவகைகளும் தெரியாமல் அவதிக்குள்ளாகின்றனர்.

இத்தகைய அடிப்படையான இன்னல்களைத் தவிர்க்கவும், இந்த இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், புலம் பெயர்ந்தோர் ஆதரவு மையம் என்ற புதுமையான முயற்சியினை தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் முன்னெடுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் செயல்படுகின்ற 120 கிராம ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமப்புற இளைஞர்கள் பயன்பெறுவர். மேலும் தொடர் மேற்பார்வை, மருத்துவம், கல்வி மற்றும் பண பரிவர்த்தனை போன்ற அடிப்படை தகவல்களும்

வழங்கப்படும். இந்த முயற்சியினை தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் பிற அமைப்புகளோடு குறிப்பாக தொழிற்கல்வி வழங்கும் அமைப்புகளோடும், தொழிற் நிறுவனங்களோடும், தொழில் நிறுவன கூட்டமைப்புகளோடும் மற்றும் சமுதாய அமைப்புகளோடும் இணைந்து செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. இவற்றின் கூட்டு முயற்சி இத்தகைய மையங்களை அமைப்பதற்கு உதவுவதோடு இத்திட்டத்தின் நீடித்த நிலைத் தன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் உதவும்.

தற்போதைய சூழ்நிலையில், தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அதிகமாக உள்ள 5 மாவட்டங்களில் இத்தகைய புலம் பெயர்ந்தோர் ஆதரவு மையங்கள் உருவாக்கப்பட உள்ளன.

**சமுதாயம் சார்ந்த பயிற்சி மற்றும் திறன் வழங்கல்**

**i. சமுதாயத் திறன் பள்ளிகள்:**

ஊரகப் பகுதிகளில் நெசவுத் தொழில், உலோகப் பணிகள், ஓவியம் தீட்டுதல், மண்பாண்டங்கள், கூடை மற்றும் பாய் முடைதல் போன்ற சில பாரம்பரிய மற்றும் அதிக வருமானம் தரும் திறன்களுக்கு அதிகத் தேவை உள்ளது.

உள்ளூரிலுள்ள அனுபவம் வாய்ந்த தனது திறன்களை மற்றவர்களுடன் பகிர்கின்ற மற்றும் கற்றுக் கொடுக்கின்ற மனப் பக்குவமும், சமூகத்தில் நன்கு அறிமுகமானவராகவும் இருக்கும் நபர்கள் இத்திட்டத்தில் பயிற்சியாளர்களாக செயல்படுவார்கள். இத்திட்டத்தின் வாயிலாக அத்தகைய அனுபவமுள்ள நபர்களைக் கண்டறிந்து அவர்களைப் பயிற்றுநர்களாகப் பயன்படுத்தி ஆர்வமுள்ள உள்ளூர் மக்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், பண்டைய கலைகளைப் புதுப்பிக்கவும், தொழில் மேம்பாட்டை உறுதிப்படுத்தவும் தேவையான குறைந்தபட்ச உள்கட்டமைப்புகளை உருவாக்க சமுதாயத் திறன் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

இதைப் போன்று இரண்டு/நான்கு சக்கர வாகனப் பராமரிப்பு, வீட்டு உபயோகப் பொருட்கள் பராமரிப்பு, கட்டுமானப் பணி, குழாய் சரிசெய்தல், வெல்டிங், மின் பணி, கைபேசி பழுது நீக்கம், கணினி தொடர்பான பணிகள் போன்ற தொழில்களுக்கு சமுதாயத் திறன் பள்ளிகள் மூலம் திறமை மிக்க, தகுதிவாய்ந்த பயிற்றுநர்கள் கண்டறியப்பட்டு, சமுதாய உறுப்பினர்களுக்கு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டு ஊரகத் தொழில் வளர்ச்சி ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 2021-22 நிதியாண்டில் 18,000

ஊரக இளைஞர்களுக்கு சமுதாய திறன் பள்ளிகள் மூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

**ii. சமுதாய பண்ணைப் பள்ளிகள்:**

இத்திட்டத்தின் மூலமாக வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துணைத் துறைகளில் சுயதொழிலுக்கான தொழில்நுட்ப சேவை வழங்கும் நிபுணர்களை (SPARKs – Skillful Personal ability Attitude Resourceful and Knowledgeable) உருவாக்கி, அவர்கள் மூலம் கிராம அளவில் சமுதாய உறுப்பினர்களிடையே திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல் ஆகும்.

நிபுணர் என்பவர் ஊரகப் பகுதிகளில் வேளாண் சார்ந்த ஒரு குறிப்பிட்ட தொழில் அறிவு, திறன், ஈடுபாடு மற்றும் சிறந்த அனுபவம் கொண்ட ஒரு பயிற்சியாளர் ஆவார். அவர் தனது சமுதாய உறுப்பினர்கள் இடையே குறிப்பிட்ட அத்தொழிலில் தங்களுடைய தொழில் சார்ந்த அறிவுத் திறனைச் சமுதாய உறுப்பினர்களுடன் கிராம அல்லது ஒன்றிய அளவில் பகிர்ந்து கொள்வதிலும், பயிற்சி அளிப்பதிலும், அதிக ஈடுபாட்டுடன் இருப்பார்.

இத்திட்டம் அத்தகைய நிபுணர்களை அடையாளம் கண்டு, சமுதாய பண்ணைப் பள்ளிகள் மூலம் மற்ற சமுதாய உறுப்பினர்களுக்கு வழிகாட்டி,

கற்பித்து, பயிற்சி அளித்து, ஆதரவு அளித்து தொடர் சேவைகள் வழங்க வழிவகை செய்யும்.

சமுதாய பண்ணைப் பள்ளிகள் விவசாயம் சார்ந்த தொழிலில் உள்ள திறன் இடைவெளிகளைக் கண்டறிந்து, அதன் தீர்வுகளுக்குத் தேவையான தொழில்நுட்ப அனுபவ அறிவை வழங்க உரிய நிபுணர்கள் மூலம் தொழில் நுட்பப் பயிற்சியினை சமுதாய உறுப்பினர்களுக்கு வழங்கும். இந்த சமுதாய பண்ணைப் பள்ளிகள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்படும் தனிநபர் மற்றும் குழு தொழில் முனைவோர்களுடன் இணைந்து செயல்படும். இத்திட்டத்தின் கீழ் 2021–22 நிதியாண்டில் உற்பத்தியாளர் குழுக்களில் உள்ள 60,000 உறுப்பினர்களுக்கு வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் சமுதாய பண்ணை பள்ளிகள் மூலம் வழங்கப்படும்.

### 6.10.4 திட்ட மேலாண்மை, விளைவுகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

இக்கூறின் நோக்கமானது, இந்தத் திட்டத்திற்கு தேவையான மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறையை மேம்படுத்துதல், நிதி மேலாண்மையினை விரைவாக நிறைவேற்றும் செயல்முறையினை உருவாக்குதல், கொள்முதல் மேலாண்மை, மனிதவள

மேலாண்மை, சமூக, சுற்றுச்சூழல், பழங்குடியினரின் சமூகப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு, தொழில் நுட்பத்தை ஏற்படுத்தி, சிறப்பான முறையில் திட்டத்தைச் செயல்படுத்துதல் ஆகும்.

**கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பது திட்டத்தில் ஏதேனும் குறைபாடுகளோ அல்லது திட்ட இலக்கில் இருந்து விலகலோ இருப்பின் அதனைக் கண்டறிந்து, குறிப்பிட்ட காலத்திற்குள் சரி செய்யத் திட்ட மேலாளர்களுக்கு உதவி செய்யவும், திட்ட செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த விபரங்களைத் தயார் செய்வதற்குத் தொடர்ந்து இயங்கும் ஒரு செயல் முறையாகும். கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு ஆய்வு திட்ட செயலாக்கத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து உண்மையான, எளிதில் புரிந்து கொள்ளத்தக்க தகவல்களை உடனுக்குடன் தெரிந்து கொள்ள உதவும்.

**மின்னணு தகவல் மேடை உருவாக்குதல்**

தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பம் என்பது திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து உடனடிக் கண்காணிப்பு மேற்கொள்ளவும், திட்டம் செவ்வனே செயல்படவும், ஒரு மின்னணு தகவல் மேடையை உருவாக்குவது திட்டத்தின் தவிர்க்க இயலாத ஒரு

பகுதியாக அமைந்துள்ளது. தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் இதற்கான ஒரு மென்பொருள் செயலியை உருவாக்குவதிலும், வடிவமைப்பதிலும் செயல்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளது.

இந்த செயலி, திட்டத்தின் தகவல் மேலாண்மை முறையினை நிலைப்படுத்தவும், வலுப்படுத்தவும் மேலும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் குறித்த அனைத்து தகவல்களுக்கான களஞ்சியமாக இருக்கவும் உதவும்.

**செலவினம்**

இத்திட்டத்தின் கீழ் ஜூலை 31, 2021 வரை 372.12 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**6.11. சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்**

2004 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோரப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மீட்கும் நடவடிக்கையாக பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டம் தமிழக அரசால் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக ஆறு கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஜனவரி 2008 முதல்

செப்டம்பர் 2019 வரையும், இரண்டாம் கட்டமாக மற்ற ஆறு கடலோர மாவட்டங்களான திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஏப்ரல் 2017 முதல் டிசம்பர் 2020 வரை ரூ.563.18 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. 238 கடலோர ஊராட்சிகளில் உள்ள 12 இலட்சம் கடலோர மக்கள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. திட்ட வடிவமைப்பின்படி, அனைத்து திட்ட இலக்குகளும் எய்தப்பட்டு திட்ட செயல்பாடுகள் 31.12.2020–ல் முடிவடைந்துள்ளது.

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் நான்கு பகுப்புகளின் செயல்பாடுகள்

**திட்டப் பகுப்பு – 1: கடலோர வள ஆதார மேலாண்மை:**

i. சமுதாய ஆதரவு:
ii. மீன்வள மேலாண்மை
iii. சமுதாய உட்கட்டமைப்பு

**திட்டப் பகுப்பு – 2:** ஊரக நிதி மற்றும் இடர்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்:

i. துயர் குறைப்பு நிதி
ii. காப்பீட்டு கல்வி மற்றும் பயிற்சி
iii. சுய உதவிக்குழுக்களுக்கான நுண் தொழில் கடன்

iv. நிறுவனங்களுக்கான கடனுதவி மற்றும் திட்ட கடன் நிதி (Patient Capital Assistance) உருவாக்குதல்

**திட்டப் பகுப்பு – 3:** வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி:

i. சுய உதவி குழுக்களுக்கான உதவி
ii. கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல்
iii. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள்
iv. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கை நிதி
v. மீன் விற்பனை சங்கம் உருவாக்குதல்
vi. மீன்விற்கும்/பதப்படுத்தும் /கடற்பாசி சேகரிக்கும் / உற்பத்தி செய்யும் மீனவ பெண்களுக்கு நிதிஉதவி திட்டம்
vii. மா/ காய்கறிகள்/ மருத்துவ தாவரங்கள் சாகுபகுடி செய்தல்
viii. பால் விற்பனை பண்ணைசார் திட்டம்
ix. மல்லிகை சாகுபடி மற்றும் விற்பனை திட்டம்
x. நெல், தினை சாகுபடி மற்றும் விற்பனை
xi. முருங்கை சாகுபடி மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல்

**6.11.1. தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்**

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதை கருத்தில் கொண்டு

"**தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம்**" என்ற பெயரில் புதிய சங்கத்தை 01.01.2021 அன்று அரசு நிறுவியது. இச்சங்கம் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதுடன், இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சமுதாய சார்ந்த அமைப்புகள் மற்றும் நிறுவனங்களை பலப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு கடலோர கிராமப்புற மக்களுக்கு பல்வகை வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் கடல் வளங்களின் பயன்பாட்டின் மீதான தாக்கத்தை குறைக்கும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது. இச்சங்க செயல்பாட்டிற்காக மாநில அரசு ரூ.966.36 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. 01.01.2021 முதல் செயல்பட்டு வரும் இச்சங்கம் திட்டப் பகுதிகளில் உள்ள சமுதாய சார்ந்த நிறுவனங்களுக்கு முழு அதரவு அளிப்பதுடன் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப்பொறுப்பு குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் இணைப்புக்கு ஏற்பாடு செய்து வருகிறது.

**1. சங்கத்தின் குறிக்கோள் மற்றும் நோக்கம்:**

இச்சங்கம் கடலோர பகுதிகளில் பாதிப்பு ஏற்படும் நிலையில் உள்ள பிரிவினருக்கு நிலைத்த வாழ்வாதார திட்டத்தினை வழங்குவதும், இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரழிவுகளின் பாதிப்பினை

குறைப்பதற்கும் வழிவகை செய்கின்றது. மேலும் சுற்று சூழலுக்கு சாதகமான நடவடிக்கைகளுக்கு உதவுவதுடன் சங்கத்தின் குறிக்கோளான கடலோர சமுதாய மக்களின் வாழ்வாதாரத்தை தொடர்ந்து மேம்படுத்தி நிலைத்த தன்மையினை அடைய வழிவகை செய்கின்றது.

**2. சங்கம் பயனாளிகள்:**

கடலோர பகுதியில் வசிக்கும் மக்கள்:–

- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்;
- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்;
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்;
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்);
- சிறு மற்றும் குறு விவசாயிகள்;
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

### 3. திட்டமுறை:

வாழ்வாதார மேம்பாட்டு திட்டமுறைக்கு முன் மொழியப்பட்ட முழுமையான நான்கு காரணிகள்.

i. சமூக அமைப்புகள் உருவாக்கி அதற்கு ஆதரவு அளித்தல்;

ii. நுண் நிதி மற்றும் இதர நிதிச் சேவைகள் மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்தல்;

iii. இலக்கு குழு குடும்பங்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துதல்;

iv. நிலைத்த, பெரிய அளவிலான நிறுவனங்களை வளர்ப்பதற்கும் மற்றும் தொலைதூர சந்தைகளை அணுக வழி செய்தல்.

v. இச்சங்கம் பெண்களுக்கு உதவுவதை முக்கிய இலக்காக கொண்டு, தற்போதைய மீன் சார்ந்த வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பல்வகையான புதிய வாழ்வாதார நடவடிக்கை மேற்கொள்ள குறிப்பாக கால்நடை வளர்ப்பு, விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்துகிறது. மேலும் மகளிரின் மேம்பாட்டுக்காக, பெரும்பான்மையான சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப்பொறுப்புக்

குழுவில் உள்ள உறுப்பினர்கள் பெண்கள் ஆவர். அவர்கள் சங்கத்தின் உதவியுடன் வேலை தேடுபவர்கள் என்னும் நிலையில் இருந்து வேலை வாய்ப்பளிப்பவர்களாக மாறி பெரிய அளவிலான குறுந்தொழில் உரிமையாளர்களாக வழிவகை செய்கிறது.

**4. நிறுவன அமைப்பு:**

இச்சங்கம் மாநில அளவில் உறுப்பினர் செயலர் கீழ் கூடுதல் இயக்குநர் மற்றும் நான்கு பிரிவு சார்ந்த மேலாளர் மற்றும் உதவி பணியாளர்களுடன் செயல்படுகிறது, மாவட்ட அளவில் திட்ட செயல்பாட்டிலுள்ள 13 மாவட்டங்களில் 10 கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர்கள் மற்றும் 32 கூட்டுவளப் பணியாளர்களைக் கொண்டு சமுதாயம் சார்ந்த நிறுவனங்களான, கூட்டுப் பொறுப்புக் குழு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, மீன் விற்பனைச் சங்கம், மற்றும் மாவட்ட அளவிலான மீனவ சங்க சம்மேளனங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**5. சங்கத்தின் பகுப்புகள்:**

2021–22 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**பகுப்பு 1 : கடலோர வள ஆதார மேலாண்மை (சமுதாயம் சார்ந்த அமைப்புகளைப் பலப்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்புகளைப் புதுப்பித்தல்):**

**அ. உட்கட்டமைப்புப் பணிகள்:** 215 உட்கட்டமைப்புகள் 190.15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

**ஆ. மீன் வள ஆதார மேலாண்மை:**

i. 1500 மீன் விற்பனை/ பதப்படுத்துதல் / கடற்பாசி சேகரிப்போர் ஒருங்கிணைக்கப்பட்டு அவர்களுக்கு மூலதன நிதியாகரூ.45.00 இலட்சம் வழங்கப்படும்.

ii. மூன்று விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.45.00 இலட்சம் நிதி உதவியுடன் உருவாக்கப்படும்.

iii. சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் 1500 நிர்வாகிகளுக்கு ரூ.54.00 இலட்சம் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

**இ. கூட்டு பொறுப்புக் குழு மற்றும் சுய உதவிக் குழு:–** 1,500 தொழில் முனைவோர்களை கூட்டு பொறுப்புக் குழுக்களாக ஒருங்கிணைத்து வங்கிகள் மூலம் ரூ.3000.00 இலட்சம் கடன் பெற வழிவகை செய்யப்படும். 1000 சுய உதவிக் குழுக்கள் ரூ.3500.00 இலட்சம் வங்கி கடன் பெற வழிவகை செய்யப்படும்.

**பகுப்பு 2: வாழ்வாதார நடவடிக்கைகள் (திறன் வளர்ப்பு, சந்தைப்படுத்தல், உற்பத்தியாளர் குழு அமைத்தல் மற்றும் பயிற்சிகள்):–**

**அ. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் மற்றும் பண்ணை சார்ந்த நடவடிக்கைகளுக்குகான பயிற்சி**

1000 பயனாளிகளுக்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற்சி வழங்கப்படுவதோடு ஏற்கனவே அமைக்கப்பட்ட பண்ணை சார்ந்த நடவடிக்கைகளின் கீழ் 6000 பயனாளிகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் பயிற்சி, மதிப்பு கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தலுக்காக ரூ.93.00 இலட்சம் செலவிடப்படும்.

**ஆ. பண்ணை சார்ந்த தொழில்கள்:–** 1000 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பண்ணை சார்ந்த நடவடிக்கைகள் கண்டறியப்படும். ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் விவசாய உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகள் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பகுப்பு 3: பருவநிலை மாற்ற நடவடிக்கைகள்:–**

அ. கடற்பாசி மற்றும் கூண்டுகளில் மீன் வளர்ப்பு திட்டங்கள் ரூ.86.64 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

உற்பத்தியாளர் கூட்டமைப்பு மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு தொடர்ந்து உதவி, கூடுதல் முதலீடுகளை ஈர்த்து இந்நிறுவனங்களை அடுத்த வளர்ச்சி நிலைக்கு கொண்டு செல்லவும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் இடர்பாடு பரிமாற்ற வழிமுறைகளை கடலோர சமுதாயத்திற்கு வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் பெண்களின் குடும்ப அளவிலான வருமானம் ஈட்டும் நிலையிலிருந்து தொழில்முனைவோராக மாற்றிட தேவையான புதுமையான நிதித் திட்டங்கள் மற்றும் கூட்டு முயற்சிகள் செயல்படுத்தப்படும்.

**6.12. நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்திற்கான வழிகாட்டி**

தமிழ்நாடு அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களின் நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்திற்காக சமூக ஒருங்கிணைப்பு, நிறுவன கட்டமைப்பு, திறன் மேம்பாடு, சமுதாய நிதி, நிதி உள்ளாக்கம், வாழ்வாதார செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல், தொழில் மேம்பாடு,

வணிக முத்திரை பெறுதவற்கு வழிகாட்டவும் மற்றும் சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்தல் போன்ற செயல்பாடுகளை TNSRLM, TNULM, DDU–GKY, TNRTP மற்றும் TNCSLS (PTSLP) திட்டங்களின் மூலம் செயல்படுத்துகிறது.

இத்திட்டங்களின் குறிக்கோள், சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பத்தினர் வாழ்வாதார செயல்பாடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் குடும்ப வருமானத்தை உயர்த்தி நீடித்த நிலைத்த வாழ்வாதார நிலையை உருவாக்குவதாகும். மேலும், இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து, ஏழை எளிய மற்றும் நலிவுற்ற அடித்தட்டு மக்களுக்கு உரிய பயிற்சி அளித்து பெண்களுக்கு அதிக அதிகாரத்தை வழங்குவதாகும்.

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஏழை, எளிய குடும்பங்களின் வாழ்வாதார நிலைப்பாட்டை கவனத்தில் கொண்டு அவர்களின் தற்போதைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், சீராக கொண்டு செல்வதற்கும் மற்றும் பல்வேறு வாழ்வாதாரத் தளங்களை உருவாக்குவதற்கும் பெருமுயற்சி எடுத்து வருகிறது.

**நிறுவன கட்டமைப்பு**

ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 2021-22 ஆம் ஆண்டில் 32,000 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.

**சமுதாய கடன்**

சமுதாய அமைப்புகள் திட்டத்திலிருந்து நிதி வழங்குவதன் மூலம் பலப்படுத்தப்படுகின்றன. 2021-22 ஆம் ஆண்டிற்கு கிராமப் புறங்களில் உள்ள 12,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 18.00 கோடி சுழல் நிதியும், நகர்ப்புறங்களில் உள்ள 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 20.00 கோடி சுழல் நிதியும் வழங்கப்படும். சமுதாய முதலீட்டு நிதியாக ஊரகப் பகுதிகளில் உள்ள 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ. 50.000/- வீதம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலமாக மொத்தம் ரூ. 75.00 கோடி வழங்கப்படும். நகர்ப்புற பகுதியில் உள்ள 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.1.50 கோடி சுழல் நிதி வழங்கப்படும்.

**திறன் பயிற்சி**

- வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி பணியமர்வு உட்கூறின் மூலம் நகர்ப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. ஒன்றிய மற்றும்

மாநில அரசின் நிதியுடன் 60:40 என்ற விகிதத்தில் செயல்படுத்தப்படுகிறது. இப்பயிற்சியானது 57 பாடங்களில் 24 பிரிவுகளில் வழங்கப்படுகிறது. 2021-22 ஆம் நிதியாண்டில் 5,000 இளைஞர்களுக்குப் பயிற்சி வழங்க ரூ.16.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தீனதயாள் உபாத்யாயா கிராமப்புற இளைஞர்கள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் 10,000 ஊரக இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு ஊதியத்துடன் பணியமர்த்தப்படும். இதேபோன்று ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக 10,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, சுய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோராகவும் உருவாக்கப்படும். மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு வேலைவாய்ப்பு முகாமிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மாநிலம் முழுவதும் 130 வேலைவாய்ப்பு முகாம்கள் ரூ. 1.30 கோடி செலவில் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து நடத்தப்படும்.
- 12,000 இளைஞர்களுக்கு பிற துறைகளின் ஒருங்கிணைப்பின் மூலம் பயிற்சிக்கு முந்தைய

மற்றும் பிந்தைய உதவிகள் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், 18,000 இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு மற்றும் ஊதிய வேலைவாய்ப்பு வழங்க உள்ளூர் பயிற்சி நிறுவனங்கள் சமுதாய திறன் பள்ளிகள் மூலம் அமைக்கப்பட்டு பயிற்சி வழங்கப்படும்.

**நிதி உள்ளாக்கம்**

- நடப்பு நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.20,000 கோடி வங்கிக்கடன் இணைப்பாக வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தொழில் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரம்**

- ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு ரூ.2 இலட்சம் சுழல் நிதியாக செயல்பாட்டு மூலதனம் மற்றும் உள்கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும். இந்த ஆண்டு 5,800 உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்படும். இதற்காக ரூ.116.00 கோடி தொகை வழங்கப்படுகிறது
- அங்கக வேளாண்மையை ஊக்குவிப்பதற்கும், மகளிர் விவசாயிகள் அங்கக சான்றளிப்பைப்

பெறுவதற்கும் அங்கக வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஒவ்வொரு அங்கக வேளாண் தொகுப்புக்கும் பயிற்சி, பதிவு, சான்றிதழ் மற்றும் களப்பயணத்துக்காக 6.00 இலட்சம் ரூபாய் நிதியாக வழங்கப்படும். இந்த ஆண்டு 52 அங்கக வேளாண் தொகுப்புகள் உருவாக்கப்படும். இதற்காக 312 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது

- கிராமப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து பற்றாக்குறையைப் போக்க. ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ.50/– மதிப்புள்ள விதைகள் மற்றும் நாற்றுகள் வழங்கப்பட்டு ஊட்டச்சத்து தோட்டம் அமைக்க ஊக்குவிக்கப்படும். இந்த ஆண்டு 2 லட்சம் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இதற்காக, ரூ. 100 இலட்சம் வழங்கப்படுகிறது.
- விவசாயத்தில் நிலையற்ற தன்மையைக் குறைப்பதற்காக, மகளிர் விவசாயிகள் வேளாண்மை தொடர்புடைய கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள

ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த ஆண்டு 185 ஒருங்கிணைந்த பண்ணை தொகுப்புகள் உருவாக்கப்படும். ஒரு தொகுப்புக்கு ரூ. 20 இலட்சம் வீதம் ரூ. 37 கோடி தொகை வழங்கப்படுகிறது.

- ஏற்கனவே உள்ள தனிப்பட்ட மற்றும் குழு நிறுவனங்களை வலுப்படுத்த மற்றும் புது தொழில் நிறுவங்களை உருவாக்க, ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு வட்டார வணிக வள மையம் நிறுவப்படும். இந்த ஆண்டு 55 வட்டாரங்களில் வட்டார வணிக வள மையம் நிறுவப்படும். இந்த ஆண்டு 150 நிறுவனங்களை ஊக்குவிக்க ஒவ்வொரு வட்டார வணிக வள மையத்துக்கும் ரூ. 50 இலட்சம் நிதி வழங்கப்படும். இதற்காக, ரூ. 27.50 கோடி தொகை வழங்கப்படுகிறது.
- ஒரு வட்டாரத்துக்கு 20 தனிப்பட்ட தொழில் நிறுவனங்களை உருவாக்க ஒரு வட்டாரத்துக்கு ஒரு சிறு தொகுப்பு உருவாக்கப்படும். இந்த ஆண்டு ஒரு மாவட்டத்திற்கு 4 சிறு தொகுப்புகள் உருவாக்கப்படும். ஒரு சிறு தொகுப்புக்கு ரூ. 2.5 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் 144 சிறு தொகுப்புகள் உருவாக்கப்படும். இதற்காக ரூ. 3.60 கோடி வழங்கப்படுகிறது.

- சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 8,000 தனிநபர்களுக்கு ரூ. 60 கோடி வங்கிக்கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- குழு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் 6,000 குழுக்களுக்கு ரூ. 120.00 கோடி வங்கிக்கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- 2021–22 நிதியாண்டில் திட்டப் பகுதிகளில் 2,525 குழு நிறுவனங்கள் (உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள் மற்றும் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்) தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு, ரூ. 26.25 கோடி துவக்க நிதியாக வழங்கப்படும்.
- 2021–22 நிதியாண்டில் திட்டப் பகுதிகளில் 1,860 தனிநபர் நிறுவனங்களுக்கு (நுண், குறு, சிறு நிறுவனங்கள்) தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு, ரூ. 20.50 கோடி இணைமானிய நிதியாக வழங்கப்படும்.
- நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டப் பகுதிகளில் 192 கூட்டுத் தொழில் நிறுவனங்கள் (தொழில் குழுக்கள் மற்றும்

உற்பத்தியாளர் கூட்டமைப்புகள்) தர மதிப்பீடு செய்யப்பட்டு ரூ. 4.5 கோடி இணைமானிய நிதியாக வழங்கப்படும்.

**சந்தைப்படுத்துதல்**

சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் மாநில, மாவட்ட அளவில் கண்காட்சிகள் மற்றும் தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்ட மதி அங்காடிகள் மூலம் சந்தைப்படுத்திட ஆதரவு வழங்கி வருகிறது. எளிதாக பயன்படுத்தக் கூடிய இணைய வழி விற்பனை செயலி உருவாக்கப்பட்டு, சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை இளைஞர்கள் வாங்கும் வகையில் செயல்படுத்தப்படவுள்ளது.

# 7. பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு

## திறன் மேம்பாடு

அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவது, பெருமளவில் சிறப்பான திறன் வளர்ப்பு மற்றும் அதனைச் சிறப்பாக செயல்படுத்துவது ஆகியவற்றை சார்ந்ததாகும். திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி, புதிய திறன்களைப் பெறவும், திறன்களைக் கூர்மைப்படுத்தவும், சிறப்பாக செயல்படவும், செயல்திறனை மேம்படுத்துவதன் மூலமும் பல்வேறு அரசு நலத்திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதினால் பொதுமக்களுக்கு பயன் பெருமளவு உறுதிசெய்யப்படுகிறது. இப்பயிற்சிகளானது அவர்களின் திறன் மற்றும் அறிவினை மேம்படுத்துவதின் மூலம் அவர்கள் அடுத்தகட்ட அளவில் சிறப்பாக செயல்படுத்துவதற்கும் உதவுகிறது. இதன் மூலம் பயிற்சியாளர்கள், துறை மற்றும் சமூகம் பயன் பெறும்.

ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி ஆணையரகம் திறன் மேம்பாடு, பயிற்சிக்கு என செயல்படுகிறது. பல்வேறு பயிற்சிகளை மேற்கொள்ள மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் 1. திருவண்ணாமலை மாவட்டத்தில்

சத்திய விஜயநகரம், 2. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, 3. தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை 4. ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், மற்றும் 5. மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி மற்றும் 36 மாவட்டங்களில் ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி நிறுவனங்களின் மூலம் பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி நிறுவனங்களின் மூலம் கிராம ஊராட்சியின் வளர்ச்சி திட்டம், வட்டார ஊராட்சியின் வளர்ச்சி திட்டம், மாவட்ட ஊராட்சியின் வளர்ச்சித் திட்டம் தயாரித்தல், நிலையான வளர்ச்சி இலக்குகள், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, சமூக தணிக்கை, ஊராட்சி வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், வாழ்வாதார மேம்பாடு, சுயஉதவிக்குழு அலுவலக பொறுப்பாளர்கள் / ஊராட்சி கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பற்றிய சான்றிதழ் படிப்பு, தன்னார்வ சமூக சேவை சார்ந்த சான்றிதழ் படிப்பு, இ – கிராம சுவராஜ்,

தகவல் தொடர்பு, புவி இடம்சார்ந்த தொழில் நுட்பம், கட்டிட தொழில் நுட்பம், தர கட்டுப்பாடு ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது சமூக பாதுகாப்பு, ஆரோக்கியம், சத்துணவு, குடிநீர், பல்லுயிர், சுகாதாரம், கழிவு மேலாண்மை, பாலின சமத்துவம், குழந்தை நட்பு ஊராட்சிகள், பேரிடர் மேலாண்மை, கல்வி, ஆளுமை வளர்ச்சி போன்ற சிறப்பு பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

**பயிற்சிகளுக்கான நிதி ஆதாரம்**

பல்வேறு பயிற்சிகளை அளிக்க, தேசிய கிராம சுயாட்சி திட்டம், ஜல் ஜீவன் இயக்கம் மற்றும் மாநில நிதி குழு மூலமாக ஒன்றிய மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவி வழங்கப்படுகிறது.

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு வருடமும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் தொடரா செலவினத்தின் கீழ் 100 சதவீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

## 7.1 மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் செயல்பாடுகள்

பல்வேறு திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகள் மேற்கொள்ள, மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தினை, தமிழக அரசு மாநில அளவிலான தலைமைப் பயிற்சி நிறுவனமாக அமைத்துள்ளது. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, இந்நிறுவனம் சென்னைக்கு அருகில் உள்ள மறைமலைநகரில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது.

பயிற்சிகள் மூலம் பயிற்சியாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவது, மேலும் குடிமக்களை மையப்படுத்தும் அணுகுமுறை குறித்த நேர்மறை மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை அவற்றின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயல்படுத்துவதே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், பல்வேறு பயிற்சிகளுக்குத் தேவையான பயிற்சிப் பாடதிட்டங்களையும் உருவாக்குகிறது.

தலைமை பயிற்சி நிறுவனம் என்ற வகையில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு உறைவிடப் பயிற்சி மற்றும் வெளிவளாக பயிற்சி வாயிலாக திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகள் அளிக்கிறது.

### 7.1.1. பயிற்சி முறைகள்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், பங்கேற்புடன் கூடிய பயிற்சி முறைகள், விரிவுரைகள், களப்பார்வை, மேற்கோள் காட்டுதல், கலந்துரையாடல், அனுபவ பகிர்வு போன்ற பயிற்சி முறைகளை கடைபிடிக்கிறது. மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பயிற்சிகளுக்கு, சிறந்த பயிற்றுநர்கள் மாநில நிலை முதல் கிராம நிலை வரை அனைத்து மட்டங்களிலும் படிப்படியாக பயிற்சி அளிக்கும் முறையில் (Cascading Model) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. மேலும் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள்

மூலம் மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் வெளிவளாக பயிற்சிகளை நடத்துகிறது.

### 7.1.2. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில மற்றும் ஒன்றிய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்காக பின்வரும் விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

1. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கான மானிய நிதி உதவியினை (Grants-in-aids) தொடர் செலவினத் தலைப்பில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் பெறுகின்றது.
2. பயிற்சி தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளான பயிலரங்கு கூடங்கள், விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் கொள்முதல் ஆகியவற்றிற்காக ஒவ்வொரு ஆண்டும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் 100 சதவிகித நிதி உதவி வழங்குகிறது.

3. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி பல்வேறு தலைப்புகளில் வழங்க ஒன்றிய ஊராட்சிகள் அமைச்சகம் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் நிதி உதவி வழங்குகிறது.

**7.1.3. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் சீர்மிகு மையங்கள் அமைத்தல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ஏற்பட்டுள்ள மாறுபட்ட அணுகுமுறைகளின் காரணத்தால் அதன் திறன் மேம்பாடு நடவடிக்கைகளையும் வலுப்படுத்தும் வகையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பல சீர்மிகு மையங்களை அமைக்கவும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்தும் வகையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் பின்வரும் ஏழு சீர்மிகு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:

1. ஊராட்சி நிர்வாக மையம் / மாநில ஊரக வள மையம்.

2. ஊரக வளர்ச்சி திட்ட செயல்பாடு மற்றும் பயிற்சி ஒருங்கிணைப்பு மையம்.

3. வாழ்வாதாரம், மகளிர் மேம்பாடு மற்றும் ஊரக தொழில் நிறுவனங்கள் மேம்பாடு மையம்

4. பொறியியல் மற்றும் தொழில் நுட்ப மையம்

5. தகவல் தொடர்பு தொழில் நுட்ப மையம்

6. பருவ நிலை மாற்றம் மற்றும் இயற்கை வள மேலாண்மை மையம்

7. ஒருங்கிணைப்பு, தொடர்பு மற்றும் புதிய முயற்சிகள் மையம்.

### 7.1.4. ஆராய்ச்சி நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் கடலோர பகுதிகளில் அமைந்துள்ள ஊராட்சிகளில் வசிக்கும் ஊரக சமுதாயத்தில் தீவிர பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கண்டறிவதற்கு ஏதுவாக சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர கீழ்க்காணும் இனங்களிலும் மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தால் ஆராய்ச்சிப் படிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அ). கிராம ஊராட்சிகளின் தணிக்கை நடைமுறைகள் மற்றும் செயல்பாடு குறித்து ஆய்வு.

ஆ). நகர பகுதிகளை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் வீட்டு வரி வசூலிப்பதில் உள்ள சவால்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்தல்.

### 7.1.5. இதர கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல்

இந்திய தொழில் நுட்ப நிறுவனம் – மதராஸ், காந்தி கிராமம் ஊரக நிறுவனம், குஜராத் ஆனந்தில் உள்ள ஊரக மேலாண்மை நிறுவனம், மதராஸ் சமூக பணிகள் பள்ளி, தேசிய தொழில் நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் ஒப்பந்தங்கள் (MoUs) இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டன. பயிற்றுநர் மேம்பாடு, ஆய்வு, களப்பார்வை, திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு, வெளியீடு, ஊரக வளர்ச்சி, பேரிடர் மேலாண்மை போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்றிட இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று பங்கேற்கும் நிறுவனங்களுக்கும், தங்களுடைய மாணவர்களுக்கும் பயிற்சியளித்திடவும், பணி அனுபவம் (Internship)

பெற்றிடவும், திட்டங்கள் தொடர்பாக நிறுவனத்துடன் இணைந்த ஆய்வு மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளவும், ஆசிரியர்களாக பணியாற்றவும், நடைமுறையில் உள்ள சிறந்த முறைகளை ஆவணப்படுத்தவும் ஏதுவாகிறது.

### 7.1.6. தொழில்நுட்ப அலுவலர் பயிற்சி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் தொழில் நுட்ப அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளித்திட மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதுவரை 158 உதவி செயற்பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள் புதுடில்லியில் உள்ள மத்திய ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 7.1.7. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இதர பயிற்சிகள்

### அ) பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)

பொது நிதி மேலாண்மை அமைப்பை (PFMS) செயல்படுத்தும் வகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 20,339 அலுவலர்களுக்கு 514 அணிகளில் ரூ.3.80கோடி செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**ஆ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்குப் பயிற்சியில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்**

புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஊரக மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்காக அடிப்படை பயிற்சி மற்றும் விழிப்புணர்வு பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக மிகப்பெரிய திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி திட்டங்களை நடத்துவதற்கு மாநில அளவிலான முதன்மை பயிற்றுனர்கள், மண்டல அளவிலான வளஅலுலர்கள், மாவட்ட வள அலுவலர்கள் மற்றும் சார் கோட்ட வள அலுவலர்கள் உள்ளிட்ட நான்கு நிலை பயிற்சியாளர்கள் கண்டறியப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். மேற்கண்ட பயிற்சியாளர்கள் தேர்வு செய்யபட்ட ஆறு வகையான பிரதிநிதிகளுக்கு பயிற்சிகள் வழங்குவார்கள்.

வாய்ந்த செயல்பாடு மற்றும் விதிகளுக்கு உட்பட்ட நிர்வாகத்திற்கு ஏதுவாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகளுக்குப் பயன்படும் வகையில் ஊராட்சி பொது நிர்வாகம், திட்டங்கள் செயல்பாடு, நிதி நிர்வாகம், மின் ஆளுமை ஆகிய பல்வேறு தலைப்புகளில் 15 கையேடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் பிரதிநிதிகள், பட்டியல் இன மற்றும் பழங்குடியின பிரதிநிதிகள் திறன்பட செயல்படும் வகையில் சிறப்பு பயிற்சி திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 7. 2. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் (RIRD)

### 7. 2. 1. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர்/இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையின் கீழ், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

**அட்டவணை – 7.1**

**மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்**

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அமைந்துள்ள மாவட்டம் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்க –ப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவள்ளூர், கடலூர் , திருவண்ணாமலை (7 மாவட்டங்கள்) | 1956 |

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் | அமைந்துள்ள மாவட்டம் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்க –ப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் (7 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (7 மாவட்டங்கள்) | 1954 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | தே.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (8 மாவட்டங்கள்) | 1948 |

### 7.2.2. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாடுகள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து ஊராட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள், பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள் பராமரிப்பு, தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பல்வேறு திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, மனவியல் மேலாண்மை, ஆளுமை வளர்ச்சி, சமூக தணிக்கை, கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), மின் ஆளுமை, தகவல் அறியும் உரிமைச் சட்டம், பணமில்லா பரிவர்த்தனை, வாழ்வாதாரம் போன்ற பல்வேறு தலைப்புகள் குறித்து பயிற்சி மற்றும் கணினி பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கட்டமைப்பு பணிகள் தரமான முறையில் மேற்கொள்ள தொழில்நுட்பப் பயிற்சி

வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

### 7.2.3 நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்பாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.7 கோடி நிதி வழங்குகிறது. ஒன்றிய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சித் திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் மற்றும் பயிற்சி உபகரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஒன்றிய அரசு 100 சதவீதம் தொடரா செலவினத்தின் கீழ் நிதியினை வழங்குகிறது.

### 7.2.4. நீலகிரி மாவட்ட வாழ் பழங்குடியினருக்கான சிறப்பு பயிற்சி

நீலகிரி மாவட்டத்தில் 187 பழங்குடியினருக்கு உடல் நலம், சுகாதாரம், விவசாயம், தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய தலைப்புகளில் ஒரு சிறப்பு பயிற்சி பவானிசாகர் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் அளிக்கப்பட்டது.

### 7.2.5. சமூக நலத் துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

சமூக நலத்துறை சார்ந்த மகளிர் ஊர்நல அலுவலர்களுக்கு குழந்தை நலம், மகளிர் நலம், பெண்களுக்கான சட்டங்கள், முதியோர் மற்றும் மூத்த குடிமக்கள் நலம், மூன்றாம் பாலினத்தவர் நலம் போன்ற தலைப்புகளில் புத்தாக்கப் பயிற்சி ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டது.

## 7.3. ஊராட்சிகளுக்கான மாவட்ட வளமையங்கள் (DRCP)

மாவட்ட அளவில் ஊராட்சி அமைப்புகளுக்கு தேவையான திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள ஊராட்சிகளுக்கான மாவட்ட வள மையங்கள் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தேசிய

கிராம சுவராஜ் திட்டத்தின் (RGSA) கீழ் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சியர் அவர்களின் நிர்வாக கட்டுப்பாட்டிற்குள் செயல்படும் இம்மையங்களின் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு பணிகள் சம்பந்தப்பட்ட மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் வழிகாட்டுதல் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாவட்ட வள மையங்களில் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலாளர்கள், மேல்நிலை நீர்தேக்க தொட்டி பராமரிப்பாளர்கள் ஆகிய ஊராட்சி பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், சமூகம் சார்ந்த அமைப்புகள் மற்றும் கிராம ஊராட்சி நிலையிலான அமைப்புகள் ஆகியோருக்கு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

## 7.4. தேசிய கிராம சுயாட்சி திட்டம் (RGSA)

ஊராட்சி நிறுவனங்களின் திறனை வலுப்படுத்தவும் ஊரக உள்ளாட்சி நிர்வாகம் உள்ளூர் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதை உறுதி செய்யவும் இந்திய அரசானது சீரமைத்த தேசிய கிராம சுயாட்சித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மேலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டம் தயாரித்தல், தொழில்நுட்ப உதவியுடன் உள்ளூர் வளங்களை திறமையாக பயன்படுத்தி நீடித்த, நிலையான வளர்ச்சி

இலக்குகளுடன் தொடர்புடைய உள்ளூர் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDGs) 2030–க்குள் அடைவதற்கு ஊராட்சிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**நோக்கங்கள்**

- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய ஊராட்சி நிறுவனங்களின் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்.
- அனைவரையும் உள்ளடக்கிய உள்ளாட்சி நிர்வாகத்தை அளித்திடவும், உள்ளூர் வளங்களை தேவையான அளவு பயன்படுத்தி மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைந்து தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்.
- கூடுதல் வருவாய் ஆதாரங்களை திரட்டும் வண்ணம் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்துதல்
- ஊராட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்களிப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையுடன் செயல்பட

கிராமசபைகளை வலுப்படுத்துதல்

- ஊராட்சிகளின் திறன் மேம்பாடு மற்றும் அதனை வழி நடத்துவதற்காக கல்வி மற்றும் சீர்மிகு நிறுவனங்களை பயன்படுத்துதல்.
- ஊராட்சி நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு நிலைகளில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்
- நிர்வாகத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்கும் வகையில் ஊராட்சிகளில் மின் ஆளுமை மற்றும் இதர தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துதல்
- திறம்பட செயல்படும் ஊராட்சிகளை அடையாளம் கண்டு ஊக்குவித்தல்.

**நிதிமுறை**

தேசிய கிராம சுயாட்சி திட்டமானது (RGSA) ஒன்றிய மற்றும் மாநில அரசு 60:40 என்ற நிதி விகிதாச்சார முறையில் செயல்படுத்தப்படுகிறது. இந்திய அரசானது பயிற்சி, பயிற்சிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனிதவளம், தொலைதூரக் கல்வி, புதுமையான முயற்சிகள், ஊராட்சிகளுக்கு தொழில்நுட்ப உதவிகள், நிர்வாகம் மற்றும் நிதி தகவல் பகுப்பாய்வு மற்றும் திட்டப்பிரிவு, ஊராட்சி கட்டிடம் மற்றும் சமுதாயகூடம், ஊராட்சி மின்னணு

செயலாக்கம், பொருளாதார வளர்ச்சி மற்றும் வருவாய் மேம்படுத்துதலுக்கு திட்ட அடிப்படையில் உதவிகள், தகவல் கல்வி மற்றும் தொடர்பு (2%) மற்றும் திட்ட மேலாண்மை(5%) ஆகியவைகளுக்கு நிதி அளிக்கிறது.

மேலும் 2021–22 ஆண்டு வருடாந்திர செயல் திட்டத்திற்கு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின் (RGSA) கீழ் பல்வேறு பயிற்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவைகளுக்கு ஒன்றிய அரசு ரூ.307.37 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

# 8. வரவு செலவுத் திட்டம் 2021–2022

## 8. வரவு செலவுத் திட்டம் 2021-2022

2021-22 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.22,737.765 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.18,954.140 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.3,783.625 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 9. முடிவுரை

**முடிவுரை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையானது அடித்தட்டு மக்களுக்கு மிகவும் நெருக்கமான துறையாகும். இத்துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து மக்களிடம் உருவாகி வரும் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிட சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமானது, இயற்கை வளங்கள் மேலாண்மை, சொத்துகள் உருவாக்குதல், வேளாண்மை வளர்ச்சி சார்ந்த பணிகள் தவிர வாழ்வாதார மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய நோக்கங்களை நிறைவேற்ற முன்னுரிமை வழங்கும் வகையில் மாற்றியமைத்து செயல்படுத்தப்படும். புவிசார் திட்டமிடல் மூலம் இயற்கை வள மேலாண்மையின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒருங்கிணைந்த செயல்பாடுகள் மூலம் இத்திட்டத்தின் பயன்கள் அதிகரிக்கப்படும்.

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மாநில அரசால் வழங்கப்படும் கூடுதல் தொகை, பயனாளிகள் தங்கள் வீடுகளை விரைந்து கட்டி முடிக்க உதவி புரியும். குடிநீர் வழங்கும் திட்டமான ஜல் ஜீவன் மிஷன் மற்றும் சுகாதாரத்தை பேணும் தூய்மை பாரத

இயக்கம் (ஊரகம்) போன்ற திட்டங்கள் மூலம் ஊரக மக்களின் பொருளாதார சிரமங்கள் குறைவதோடு, தனிநபர் நலவாழ்வு, ஆற்றல் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படுகிறது.

சாலைகள் ஊரகப் பொருளாதார மேம்பாட்டின் நரம்புகளாக உள்ளன. இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் சாலை மேம்பாட்டுத் திட்டங்களால் ஊரக இணைப்பு சாலை வசதிகள் மேம்பட்டு, வேளாண்மை மற்றும் சந்தை வாய்ப்புகள் வளர்ச்சியடைகிறது.

ஊரகப் பகுதியில் வாழும் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை சுய உதவிக்குழு இயக்கம் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. சுய உதவிக்குழுவினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரும்பங்காற்றியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் தேவையான நிதி வசதிக்கு வழிவகுத்தல், திறன் மேம்பாட்டுப் பயிற்சி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், சந்தை நுண்ணறிவை அளித்தல் மற்றும் உற்பத்திப் பொருட்களை வியாபாரம் செய்யும் வசதிகளை உருவாக்குதல் ஆகியவற்றால்

மகளிருக்கு நீடித்த நிலைத்த வாழ்வாதாரத்தை உருவாக்க முன்மாதிரி முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

உத்வேகமும், கடின உழைப்பும் கொண்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சிறப்பான வழிகாட்டுதலின்படி இத்துறையானது தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் தொடர்ந்து பாடுபடும்.

**கேஆர். பெரியகருப்பன்**
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்
தமிழ்நாடு அரசு




கலைஞர் வீட்டு வசதித் திட்டம் தொடக்க விழா




ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கிக்கடன் வழங்குதல்




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பாராட்டு




ஜல் ஜீவன் திட்டத்தில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குதல்



மகளிர் சுய உதவிக் குழுக்களின் மீன்கள் விற்பனையகத்தைத் திறந்து வைத்தல்



தூய்மைக் காவலர்களுக்கு சீருடை வழங்குதல்